பக்கங்கள்: 12

Registered as a Newspaper

தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

PUMP with Standard Accessories Select



NEWTONE Water Pumps

மலர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹு மாசி ௴ 14 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ. ஆகிர் பிறை 18 (25-02-1989) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 43

## வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்டோருக்கு வங்கிக் கடன்:

# காணிப் பதிவு அலுவலகங்களை இயங்க வைக்க ஆலோசனை

## மேலதிக உத்தியோகத்தர்களை கொழும்பிலிருந்து தருவிக்கவும் முயற்சி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 25

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள காணிப் பதிவாளர் அலுவலகங்களை உரிய விதத்தில் இயங்க வைப்பது குறித்து உயர்மட்டத்தில் தீவிரமாகப் பரிசிலனை செய்யப் படுவதாக அறிய வந்துள்ளது.

தேவைப்படும் பட்சத்தில் மேலதிக ஊழியர்களைக் கொழும்பிலிருந்து வருவிப்பது குறித்தும் ஆராயப்படுகிறதாம்.

இராணுவ நடவடிக்கைகள், வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்க வங்கிகள் மூலம் கடன் வழங்குவதற்கு, காணிப்பதிவு அலுவலகங்கள் உரிய முறையில், துரிதமாக இயங்க வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. வலியுறுத்தப்பட்டும் உள்ளது.

[illegible] காது விரும்பித்திருக்கும் காணிப்பதிவு அலுவலகங்களை சிறப்பு வைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக அறியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச வங்கிகளின் ஊடாகக் கடன் வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறது.

காணி உறுதிகளைப் பிணையாகப் பெற்று குடும்ப வருமானத்தை அடிப்படையாக வைத்து ஒவ்வொருவருக்கும் ஐம்பதாயிரம் முதல் ஒன்றரை லட்சம் ரூபா வரை கடனுதவி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

வங்கிக் கடன்களைத் தாமதமின்றி வழங்குவதற்கு காணி உறுதிகளின் மூலப் பிரதிகளைப் பரிசீலனை செய்து உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம்.

அவ்வாறு செய்வதற்கு காணிப் பதிவு அலுவலகங்கள் உரிய விதத்தில் இயங்க வேண்டியது அவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு,கிழக்கில் மட்டுமல்ல

# ரூ.1500 கோடி புனரமைப்பு நிதி தெற்கிலும் செலவிடப்படும்

கொழும்பு, பெப் 25

புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள உலக நாடுகள் பல அளித்த 50 கோடி டாலர் பணம் (ஆயிரத்து 500 கோடி ரூபா) வடக்கு - கிழக்கு மாகாணத்துடன் வன்செயல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் செலவிடப்படும்.

இத்தகவலை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜரத்தின வெளியிட்டார்.

தங்காலை, வெலியத்த, அக்மீமன அனுராதபுரம், மொனறாகலை ஆகிய பிரதேசங்களும் வன்செயல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்டவை என்றும் திரு. ரஞ்சன் விஜரத்தின அடையாளங்காட்டினார்.

செய்தியாளர் மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார்.

''இப்புனர் நிர்மாண,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெய்வாதீனமாக தப்பினர்

கொக்குவில, பெப் 25

கொக்குவில் பொற்பதி வீதியில் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டபோது, வீட்டிலிருந்த நோயாளி ஒருவர் சிறு தீக்காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான திரு. எஸ். இராசையாவே இவராவார்.

இவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் பல மாதங்களாக நடக்க முடியாது வீட்டில் இருந்தார். (ஓ-69)

## கொக்குவில் மக்கள் ஆலயத்தில் தஞ்சம்

கொக்குவில், பெப் 25

கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள மக்களும், வீதியை அண்டிய பகுதி மக்களும் கடந்த வியாழக்கிழமை இரவை பொற்பதி புனித சின்னப்பர் ஆலயத்தில் கழித்தனர்.

இன்னும் சிலர் உரும்பராய், இணுவில் பகுதிகளிலுள்ள உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பொற்பதி வீதி, நேதாஜி ஒழுங்கையில் சுமார் 25 வீடுகள் எரிக்கப்பட்டதையும் மற்றும் சில வீடுகள் சேதமாக்கப்பட்டதையும் அடுத்தே மக்கள் பீதியால் வெளியேறினர்.

தீ வைப்புச் சம்பவத்துக்கு முன்னர் நடந்த தேடுதலின்போது பெண்கள் உட்பட பலரும் தாக்குதலுக்கு இலக்கானதாகச் சொல்லப்பட்டது. சிலர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஜி சிஈ பரீட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

25-02-1989
மாசி-14
சனிக்கிழமை

சுபநேரம்:
03 30 முதல் 05 00 வரை
ராகுகாலம்:
09 30 முதல் 11.00 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தீ விபத்தில் ஐவர் பலி

பஹ்ரைன், பெப் 25

பஹ்ரைனில் நேற்று கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 இந்திய தொழிலாளர் உயிரிழந்தனர் பலர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது (ஓ-எ)

## கனநீர் கசிவு

சென்னை, பெப் 25

சென்னை, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் நேற்று கனநீர் கசிவு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நிலையம் [illegible]

# தேர்தல் கடமையில் ஈடுபட மறுத்த பொலீஸாருக்கு ''தண்டனை'' இடமாற்றம்

யாழ்ப்பாணம் பெப் 25

தேர்தல் கடமையில் ஈடுபட மறுத்த பொலீஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடபகுதி மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொலீஸார் சுகயீனம் காரணம் காட்டி தேர்தல் கடமைகளுக்குச் செல்லாது இருந் [illegible]

யாழ்ப்பாண மாவட்டத்தில் முப்பது பொலீஸார் இவ்வாறு கடமையில் ஈடுபடவில்லை.

இவர்கள் அனைவரும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# கலிகையில் ஷெல் தாக்கு யுவதி பலி; சிறுமி காயம்

கரவெட்டி பெப் 25

கலிகையில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இளம் பெண் ஒருவர் வயிறு பிளந்த நிலையில் மரணமானார் சிறுமி ஒருத்தி காயமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலை சுமார் 3 30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் மரணமான இளம் பெண்ணின் பெயர் வேலுப்பிள்ளை புஷ்பவதி (வயது 22) இவர் துன்னாலை தெற்கைச் சேர்ந்தவர். காயமடைந்த சிறுமி (வயது 13).

பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதனால் சில வீடுகள் பலத்த சேதமடைந்தன

இதேவேளை நவிண்டில் இரும்பு மதவடிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வதிரியைச் சேர்ந்த காசியர் கந்தவனம் (46) பலத்த காயமடைந்தார் இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-70)

# நெல்லியடி மெல்ல வழமைக்குத் திரும்புகிறது

கரவெட்டி, பெப் 25

நெல்லியடிப் பகுதி மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. எனினும் பதற்றம் முற்றாகத் தணியவில்லை.

கடந்த நான்கு தினங்களாக இப்பகுதி எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டது ஆனாலும் நேற்று ஓரளவு மக்கள் நடமாட்டம் இருந்தது

சந்தையும் சிறிது நேரம் இயங்கியது. கடைகளும் திறந்திருந்தன போக்குவரத்துக்கள் சீரடைந்துவிட்டன. (ஓ-70)

# ஜே. ஆருக்கு தொடர்ந்து ஜனாதிபதி பட்டம்

கொழும்பு, பெப் 25

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தற்போது ஜனாதிபதியாக இல்லாவிடினும் அவர் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா என்றே அழைக்கப்படுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் திரு. ஜெயவர்த்தனாவின் செயலாளராக திரு. சி. டீ. சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜனாதிபதியாகஇருந்த சமயம் திரு. ஜெயவர்த்தனாவின் மேலதிக அந்தரங்கச் செயலாளராக இவர் பணிபுரிந்தார். (உ-எ)

## துணை அமைச்சின் செயலாளர்களாக தமிழர்கள்

கொழும்பு, பெப் 25

இந்து மதம் மற்றும் கலாசார விவகாரங்களுக்குப் பொறுப்பான துணை அமைச்சின் செயலாளராக திரு. எஸ். சி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி - கொழும்பு நேரடித் தொலைபேசி சேவை

தாளையடி, பெப் 25

கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு நேரடித் தொலைபேசிச் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இத்தொலைபேசிச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது

வவுனியாத் தொலைத் தொடர்பு நிலையத்தினூடாகவே இச்சேவை நடைபெற்று வருகிறது

நாளடைவில் கிளிநொச்சி தபால் நிலையத்திலிருந்து பொதுமக்களின் பாவனைக்கு என தனியான தொலைபேசி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சரக்கு ரயில் வந்தது

யாழ்ப்பாணம், பெப் 25

அரிசி, சீனி பால்மா போன்ற உணவுப் பொருட்களுடன் நேற்று சரக்கு ரயில் ஒன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

இதில் 975 மூடை அரிசியும் ஆயிரத்து 220 மூடை சீனியும். இருநூறு பக்கட பால்மாவும் மற்றும் ஆயிரத்து 123 பக்கட திரிபோஷா மாவும் வந்தன. (ஜ-ஐ)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இரு சடலங்கள்

கிளிநொச்சி, பெப் 25

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நேற்று இரு இளைஞர்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

கனகபுரத்தில் வியாழன் இரவு நடந்த சூட்டுச் சம்பவத்தில் இவர்கள் மரணமாகி இருக்கலாம் எனச் சொல்லப்பட்டது (ஓ-10)

# ஆலயங்களை புனர்நிர்மாணிக்க லண்டனிலிருந்து நிதி உதவி

சென்னை பெப் 25

வடக்கு — கிழக்கில் [illegible] சேதமடைந்த இந்து ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு. லண்டன், விம்பிள்டன் கணபதி ஆலய நிர்வாகத்தினர் நிதி உதவிகளை வழங்குவர்

இத்தகவலை, சென்னை வந்துள்ள விம்பிள்டன் கணபதி ஆலயப் பிரதம நிர்வாகியான பொறியியலாளர் திரு. ஏ. ரி. எஸ் இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தாவிடம் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கில் சேதமடைந்த ஆலயங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு மட்டுமின்றி, [illegible] உண்மையாகப் பாதிக்கப்பட்ட, உதவி அவசியம் தேவைப்படும் மக்களுக்கு வீடுகளைக் கட்டவும், கல்வித் துறையில் நிவாரணம் வழங்கவும், சிறிய மட்டத்தில் மறுவாழ்வுப் பணிகளுக்கு உதவவும் தாம் தயாராக உள்ளதாக திரு. இரத்தினசிங்கம் சுவாமியிடம் மேலும் தெரிவித்திருக்கிறார்.

திரு. இரத்தினசிங்கம், ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கென [illegible] சாரதாவின் உருவச்சிலை ஒன்றை வடிப்பதற்கு நேப்பூரில் ஒழுங்கு செய்துள்ளார் அதன் பொருட்டு சுவாமி சித்ரூபானந்தாவை இந்தியாவுக்கு அழைத்திருந்தார்.

விம்பிள்டன் கணபதி ஆலயத்துக்கு கொமஸ்தம்பம் உட்பட பல கோயில் உபகரணங்களைச் செய்வித்து இங்கிலாந்துக்கு கப்பல் மூலம் எடுத்துச் செல்வதே திரு.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## போலீஸ் சுட்டு பம்பாயில் 10 பேர் பலி

பம்பாய், பெப் 25

பம்பாயில் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு கும்பல்கள் மீது பொலீஸார் நேற்றுச் சுட்டபோது பத்துப்பேர் உயிரிழந்தனர் 30பேர் காயமடைந்தனர்.

பிரிட்டிஷ் எழுத்தாளர் சாமன்ருஷ்டியின் 'சாத்தானின் கவிதைகள்' நாவலுக்கெதிர்ப்பு தெரிவித்து இக்கும்பல்கள் வன்முறையில் ஈடுபட்டன.

'சாத்தானின் கவிதைகள்' நூல்வெளியிட்ட எழுத்தாளர் ருஷ்டி பம்பாயில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-எ)

## கொழும்பில்

கொழும்பிலும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் எழுத்தாளரான சாமன் ருஷ்டியின் படத்தை எரித்தனர் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [ஓ-எ]

# மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டருக்கு 'பாஸ்' இல்லை

யாழ்ப்பாணம், பெப் 25

எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி (புதன்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்களை அமைதிப்படையின் ''பாஸ்'' இல்லாமலேயே செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

எனினும் கார், லொறி, வான், பஸ் போன்ற கனரக வாகனங்களுக்குத் தொடர்ந்தும் ''பாஸ்'' தேவை என்றும், அவற்றை மாதாந்தம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் அமைதிப்படையின் நகரக் கொமாண்டர் அலுவலகம் நேற்று அறிவித்தது. (எ)

''சாயிஸ் இன்''
தலைநகரில் தனித்துவமான இடத்தில்—
தங்குமிட வசதிகளுக்கும்,
உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைபேசி வசதிகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்!
★ சாயிஸ் இன் ★
156, மலிபன் வீதி,
கொழும்பு — 11.
தொலைபேசி; 35471.
★ வெளிநாட்டுப் பயணமா?
★ விமான ரிக்கற்றுக்களா?
★ பாஸ்போட், விசா ஆகிய
உங்கள் தேவைகளுக்கு எங்கள் சேவை உங்களுக்கு உண்டு.
இன்றே நாடுங்கள்:-
''சாயிஸ் இன்''
[9543]

பதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், அலுமாரிகள், கட்டில், கண்ணாடி மேசை, குளிர்சாதனப் பெட்டி. சாப்பாட்டு மேசை, அறைக்குத் தேவையான பொருள்கள் மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 655, நாவலர் ரோட், நல்லூர் (9563)

புதிய Deep Freezer விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க 47, விதானையார் ஒழுங்கை, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (9612)

நல்ல பாவிப்புள்ள சிசில் டிபிரிசர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ஒசாகா றேடேஸ், மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (C/1694)

பாவித்த தளபாடங்கள், மேசை, கட்டில், Show case அலுமாரி, கண்ணாடி மேசை, ஹோல் செற், விருந்தை செற், கம்பளம், மணிக்கூடு, Record player, சாப்பாட்டு மேசை, கதிரைகள், Fan, மற்றும் பல பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. V. சிவராம், 69, அம்மன் ரோட், கந்தர்மடம் (9555)

CD 90 Honda 84/ Sri 887 தனிப் பாவிப்பு, Clutch Model (One owner) உடன் விற்பனைக்குண்டு. வேலை நாட்களில் பார்வையிடலாம் Peter's யுபிலிபசார். (ராணி தியேட்டர் அருகில்) பெரியகடை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (9560)

புதியதும் பாவனையில் உள்ளதுமான Honda MB 8 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. 95 ஸ்ரீ தொடர் இலக்கமுடையது தொடர்பு:- M. நித்தியானந்தன், 69, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி. (9521)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Pekalb) இன பிறவுன் சேவல் விலை ரூபா 4.50 (23-2-89) தொடக்கம் 4 நாட்கள் விநியோகிக்கப்படும். அத்துடன் கறுப்பு பிளிமத் வரிக் குஞ்சும் உடனே வந்து பெற்றுக் கொள்க. இல 9 சந்தையா லேன், கன்னுகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9605)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறவுன் சேவற் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் வெள்ளிக்கிழமை சனிக்கிழமை 24 ஆம் 25 ஆம் திகதிகளில் விநியோகிக்கபடும் சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன் கொக்குவில். (9544)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [C/1183]

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பிறிமா இன ஒரு நாள்புறாயிலர் குஞ்சுகள் 28-2-1989 இல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. S M காட்வெயர், 11/6, ஸ்ரான்லி வீதி, திருமகள் ஸ்ரோஸ் சிவலிங்கப் புளியடி, C S K பாம் சென்ரர், கச்சேரி - நல்லூர் வீதி, கிருஷ்ண பாம் சென்ரர், திருநெல்வேலி. (9554)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள் சேவற்கோழிகள், குப்குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தஞ் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (C/1184)

### தேவை

பிரபலமான இசைக் குழு ஒன்றிற்கு பெண் பாடகிகள் உடன் தேவை. யாழ்நகரில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விலாசம்: 11/11 செம்மணி வீதி. முத்திரைச் சந்தை, நல்லூர் (9546)

நல்ல நிலையிலுள்ள 'HONDA' Benley Supper அல்லது C 90 உம் மரக்கடைச்சல் மெசினும் உடன்தேவை தொடர்பு யேசுதாசன், புனித ஆசிர்வாதப்பர் கோயில், கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (9564)

யாழ் நகரில் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு லிகிதர்/ காசாளர்/ விற்பனையாளர் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராயிருத்தல் வேண்டும் வயது எல்லை 20—45 வருடங்கள். முன் அனுபவம் விரும்பத்தக்கது. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கல்வித்தகைமைகளுடனும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும் சம்பளம் பேசி முடிவெடுக்கப்படும். 448, மே / பா உதயன். (9606)

யாழ் நகரில் வீட்டில் நன்கு சமைக்கக்கூடிய ஆண் சமையற்காரர் தேவை. வயதெல்லை 35—45 வருடங்கள். இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசிமுடிவெடுக்கப்படும். 450, மே / பா உதயன். (9608)

யாழ்நகரில் ஸ்ரோர்ஸ் ஒன்றிற்கு பாதுகாப்பற்ற பாதுகாப்பு ஊழியர் தேவை. வயதெல்லை 25—45 வருடங்கள். முன் அனுபவம் விரும்பத்தக்கது. கல்வித்தகைமைகளுடனும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசி முடிவெடுக்கப்படும் 449, C/o உதயன். (9607

### காசாளர் தேவை

எமது ஸ்தாபனத்தில் காசாளராக கடமை ஆற்ற ஒரு பெண் தேவை ஆங்கில தட்டெழுத்து தெரிந்திருத்தல் அவசியம். யாழ் மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். ஆர்ட் கிராபிக்ஸ் 538 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/1691)

### குத்தகைக்கு விடப்படும்

சகல ஆயுதங்களுடன் இரும்புத் தொழிற்சாலை குத்தகைக்குவிடப்படும். விபரங்களுக்கு: 739 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (9557)

### சேவை

அவசியமான செலவுக்கு மேலதிகமான உங்கள் பணத்தை பாதுகாப்பான முறையில் திறம்பாணிகளில் முதலீடு பண்ணி 48 வீத வட்டி பெறுவதற்கு எங்கள் உதவியை நாடுங்கள். Frajmal Enterprises 19/3. Colombogam Road, Jaffna (Opposite Chundukuli Girls College) (C/1469)

Brunei க்கு (போர்னியோ) எங்களிடம் வேலைக்கு விண்ணப்பித்திருந்தவர்கள் தயவு செய்து உடனடியாக சுஜேரா ரவல்ஸ், இல 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும் (C/1670)

### தவறிவிட்டது

க. பேபிநோனு ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 346643495V மணியம் தோட்டம் என்ற இடத்தில் வானில் பேர்ஸுடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (9617)

### பிரயாண ஒழுங்குகள்

ஜெர்மனிசெல்ல விரும்புவோர் 25 வயதிற்குட்பட்டோர் (தோற்றத்தில் சிறியோராக இருத்தல் விரும்பத்தக்கது) உடனடியாகப் பயணம் மேற்கொள்வதற்கும் மற்றும் சவூதிக்கு ஆண் பெண் இருபாலாருக்கும் ஓமானுக்கு வீட்டுப் பணிப் பெண்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு. தொடர்பு சுஜேரா ரவல்ஸ் 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணம். (C/1669)

### பயிற்சி வகுப்புகள்

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி வகுப்புகள் ஞாயிறு தோறும் 6 மாதங்களுக்கு மார்ச் 5 முதல் நடைபெறும் கழகப் பாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்சியும் அளிக்கப்படும். மாதக்கட்டணம் ரூ 100/- G.C.E பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகள் விண்ணப்பித்துவிட்டு தொடங்கும் அன்று நேரில் வரவும். செயலாளர்; பாலர் கல்விக் கழகம், 49/5 யாழ்ரோட். (9494)

கேக் ஐசிங் ஜெனறல் குக்கரி பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும் வெளிநாடு செல்வோர்க்கும் இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். கிழமைநாட்களில் ஆரம்பம்: 10- 3- 1989 தொடர்பு: N. Arullananda 11/2, Wyman Road, Nallur. (C/1609)

### ஆங்கில புத்தகம்

ஆரம்பம் முதல் G. C. E. [O/L] வரை இலக்கணம், பேச்சுப் பயிற்சி, அப்பியாசம் முதலியவற்றை உள்ளடக்கிய புதுமையான முறையில் T. இராஜலிங்கம் என்பவரால எழுதப்பட்ட ஆங்கில புத்தகம்; Basic Grammar and Spoken Practical கிடைக்குமிடம்;- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (9506)

### Spoken English

தொழில் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கும் சர்வகலாசாலை மாணவர்களின் வசதியை முன்னிட்டு புதிய பிரிவு Spoken English வகுப்புக்கள். ஆரம்பம்;- 2- 3- 89 செவ்வாய் வியாழன் நாட்களில் நேரம் மாலை 5 - 6 30 மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர் (9558)

### கல்வி

பாலராசிரியர் பயிற்சி நெறி - 1989 விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த: (சா/த) சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம், சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் நடைபெறும்; வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். முத்திரை யொட்டிய தபாலுறையுடன் விண்ணப்பிக்குக; பாலர் ஆசிரியர் சங்கம், 42 பிரப்பங்குளம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். (9350)

### கசட் மூலம் ஆங்கிலம் பேச்சுப் பயிற்சி

உங்கள் வீட்டில் இருந்த ஆங்கிலம் இலகுவாகவும் விரைவாகவும் பேசிப் பழக கசட்டுக்களை மீண்டும் பெற்றுக்கொள்ள Spencer - Ariya Lodge. அரிய லொட்ஜ், மாவிட்டபுர வீதி, உடுவில் (9603)

### தபால் மூலம் ஆங்கிலம்

உள்நாடு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பினைத் தேடுவோருக்கும் ஆங்கிலத்தில் பரீட்சைகள் பயிற்சிகள் செய்வோருக்கும் இன்றியமையாத மொழியான ஆங்கில மொழி ஆரம்பத்திலிருந்து முழு விளக்கங்களுடன் தபால் மூலம் போதிக்கப்படும். விபரங்களுக்கு சுயவிலாசமிட்டு முத்திரையொட்டிய தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பரதாரர் 25 மாட்டின் லேன், யாழ்ப்பாணம். (9610)

### London O/L English June 89

Practice classes begin on4.3.89. Sat/ Sun/Wed. Time 5·6 p.m Contact S.B Iyar, 12, Wyman Road, Nallur. (9559)

PROCESSING AND PRINTING

கொழும்பு ஸ்ரூடியோ

## BECON

மெய்யியல் II G. A. Q. மாணவர்களுக்கு

பரீட்சை நோக்கில் எழுதப்பட்ட "விஞ்ஞான விளக்கங்கள்"

★

G. A Q. 89 April மீட்டல் வகுப்பு

(விரிவுரைக் குறிப்புகளுடன்)

சனி — ஞாயிறு — 3-00 p m

★

By: A. S. H. சந்திரராஜா

EXTERNAL UNIVERSITY STUDIES

BECON.

[9386]

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

## ✯ COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 2 மாதம் ஆரம்பம்: 3-3-89

(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

கட்டணம்: ரூபா 950/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

O / L படித்த இருபாலாரும் சேரலாம். குளிர் ஊட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

[redacted] பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 2 - 3 - 89.



## UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சாரநிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(உப தபாற்கந்தோர், அருகாமை)

(C 1658)

## A/L விஞ்ஞான மாணவர்களுக்கு

89 அயன் சமன்நிலை

BATCH III Sat & Sun — 4. 00

ஆரம்பம்: 26 - 02 - 1989

ஆசிரியர்:- Mr. நாகரட்ணம் (B. Sc)

மணல்தரை லேன், கந்தர்மடம்.

(C-1693)

## PHARMACY CLASSES

## பார்மஸி பயிற்சி நெறிகள்

Diploma in Pharmacy Course

ஆரம்பம்: 25th February 1989

- வெளிநாட்டு உள்நாட்டு வேலைவாய்ப்புக்கு
- அரசாங்க தகுதி பெற
- மேல்படிப்பைத் தொடர

உகந்த பயிற்சி நெறி உங்கள் பதிவுகளுக்கு

**North Ceylon Technical Institute**

14 St. Peters Lane, Hospital Road, JAFFNA.

(C-1665)

## புஸ்பா அன் கோ

தரத்திலும் உறுதியிலும் சிறந்த

- இலங்கை ஓடுகள் மற்றும்
- விதம் விதமான பூச்சாடிகள்
- பல வடிவங்களில் கிறில்கற்கள் (சிமெந்துப்பூக்கற்கள்)
- செங்கற்கள்
- சிமெந்து

இலங்கை மட்பாண்ட கூட்டுஸ்தாபன பொருள்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

புஸ்பா அன் கோ,
514, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

(C/1491)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நா. சண்முகலிங்கம்
(சங்கீதபூஷணம்)
சங்கீத ஆசிரியர்
யா/மங்கையர்க்கரசி வித்தியாலயம்

அன்பின் திருவுருவாய்!
அமைதியின் பிறப்பிடமாய்!
அழகின் சிகரமாய்!
அறிவுச் சுடராய்!
எழில் சிந்தும் புன்னகை பூத்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் மூழ்கடித்து மீளாத்துயில் கொண்ட எம் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனை இறைஞ்சுகிறோம்.

நின்னருமை மனைவி, மக்கள், மருமகன் பேரப்பிள்ளைகள்.

"றஞ்சனை" 93, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (9384)

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### லிங்கமூர்த்தி கமலாம்பிகை

தோற்றம்: 08-12-1939 மறைவு: 27-01-1989

எங்கள் குடும்பத்தின் தலைவியாய், வழிகாட்டியாய், ஒளி விளக்காய் அன்புடன் வாழ்ந்து எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக் கிரியைகளும் வல்வை அ. மி. பாடசாலை ஒழுங்கையிலுள்ள அன்னாரின் "கமலாலயம்" இல்லத்தில் 26-02-1989 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பதால், இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கிறோம்.

(தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறேன்.)

அன்புக் கணவன், பா லிங்கமூர்த்தி (காணி அலுவலகம், துணுக்காய்.)
செல்வி அமுதலக்சுமி
அ. மி. பாடசாலை ஒழுங்கை, வல்வெட்டித்துறை. (9534)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### திரு. V. சதாசிவம்

[பேராதனை விவசாயத் திணைக்களம் பிரதி பிரதம கணக்காளர்]

பிறப்பு: 28.07.31 — இறப்பு: 21.02.88

எமது வாழ்வில்
வசந்தத்தை வரவழைத்தீர் - ஆயினும்
உங்கள் பிரிவின் பின்னல் - அவ்
வசந்தத்தைப் பருகும் வலுவையும் இழந்
வாடிய எம் வாழ்க்கைச் சோலையில் [நோம்
உங்கள் மைந்தன் ஹரியின் முகத்தில்
உங்கள் வதனத்தைக் கண்டோம்,
வசந்தம் மீண்டும் வருமென நாம்
காத்திருந்த வேளை......
உங்கள் மைந்தனும் உங்கள் பாத அடிகளில்
தனது கால்களை பதித்து உங்களைத் தேடி...
ஓ...! எப்படி நாம் மறப்போம்
துன்பங்களைத் துரத்திவிட்டு
வானில் பறந்த காலங்களை மட்டுமல்ல!
உங்கள் எளிமையான வாழ்வையும்
எப்போதும் நிறைந்த புன் சிரிப்பையும்
[கூட த்தான்...

திருமதி சதாசிவம் குடும்பத்தினர்.

39, பலாலி வீதி,
கந்தர்மடம். (9562)

## முதலாவது நினைவஞ்சலி



### அமரர் தோழர் சின்னத்தம்பி விஜயானந்தன்

(கந்தரோடை)

(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு அரசியல் குழு அங்கத்தவரும் யாழ் மாவட்டச் செயலாளரும்)

பூவுலகில்: 13 - 12 - 1936 — வானுலகில்: 08 - 03 - 1988

திதி: 25. 02. 1989

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் இதயத்தால் நாங்கள் உங்களை என்றென்றும் மறவோம்! எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே! உங்கள் ஆத்ம சாந்திக்காக எமது இதய பூர்வமான அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள்,
பிள்ளைகள் எல்லோரும்,
உறவினர்கள்.

கந்தரோடை,
சுன்னாகம். (C 1608)


## ADMISSION

**In Colleges and Schools In India**

Contact us for further details to follow courses in

**Medicine, Engineering, Commerce, Arts, Computer Science Etc.**

**MACK TRAVELS**
PRIVATE LIMITED

8, FIRST LANE,
Pt. PEDRO ROAD, JAFFNA.

(C/1699)


## முதலாம் வருட நினைவு நாள்



ஓமானில் காலமான
### திரு. எட்மன் கிறிஸ்ரியன் அந்தோனிப்பிள்ளை

பிறப்பு:- 1946 - 05 - 25 — இறப்பு: 1988 - 02 - 25

ஓராண்டு நிறைந்தாலும்
ஒரு பொழுதும் உம்நினைவு மறவோம்
உமது பாடலோசை
எம் காதில் மட்டும் அல்ல
உமது நண்பர் காதிலும் ஒலிக்குதய்யா
நாம் இறக்கும் வரை
நீர் ஓமானில் இருந்து வருவீரென்று
காத்து நிற்கும்

அன்பு மனைவி: புஷ்பமலர்
செல்லமக்கள்: சிந்துஜா,
மயூரன்.

10/1, நர்கா ரேட்,
கண்டிக்குளி,
யாழ்பாணம். (9565)

## நினைவு அஞ்சலி



(திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட)
### கணபதிப்பிள்ளை செல்வபாக்கியம்

தோற்றம்: 10 - 05 - 1938 — மறைவு: 18 - 01 - 1988

அன்பின் திருவுருவாய்!
அமைதியின் பிறப்பிடமாய்!
அறிவுச் சுடராய்!
ஆற்றலின் வல்லவளாய் எழில் சிந்தும்
புன்னகை பூத்து எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் மூழ்கடித்து!
மீளாத்துயில் கொண்ட தாயே அம்மா!

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உந்தன் பிரிவால் வருந்தும்
ஜெகன் குழுவினர்.

பாஷையூர்,
யாழ்ப்பாணம். ([illegible])


பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
**S-Lon எஸ் லோன் என்று கேட்டு**
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe




உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
**மின்னுவதெல்லாம் பொன்னல்ல**
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

**S-Lon Lanka (Pvt) Ltd.**
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 686208 — 93716 - 9



## FORTUNA ENTERPRISES

[Labour Licence No. 79]

Immediate Vacancies in Kuwait

**உடனடி வேலைவாய்ப்புக்கள் (குவைத்)**

★ குவைத்

**(1) Airport and Hospital Cleaners-250**
விமானநிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்
சம்பளம்: 30 KD
3 வருட ஒப்பந்தம்
(மேலதிகநேரவேலை திடப்படுத்தப்பட்டுள்ளது)
அத்துடன் இருப்பிட வசதி
28 - 02 - 89 க்கு முன்
7 போட்டோக்களுடனும்
பாஸ்போர்ட்டுடனும் விண்ணப்பித்தால்
30-03-89 இல் பிரயாணமாகலாம்.

**(2) Heavy Vehicle Drivers - 50**
கனரக வாகன சாரதிகள்
சம்பளம்: 60 KD

**(3) Light Vehicle Drivers 50**
சாதாரண வாகன சாரதிகள்
சம்பளம்: 45 KD

**(4) கமக்காரர் (Farmers) - 60**
சம்பளம் பற்றிய விபரம்
நேரில் அறிந்துகொள்ளவும்


நாடவேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**

3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

[C-1686]


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



### கணேஷ் சுதா (சிறீ)

[இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன மின் இணைப்பாளர், K K S.]

அன்னையின் மடியில்: 28.04.1963 — ஆண்டவன் அடியில்: 28.11 1988

ஆவி பிரிந்து மாதங்கள் சென்றாலும் எம் ஆயுள் உள்ளவரை நாம் உம்மை மறவோம். உமது ஆத்மா சாந்தி அடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா,
அண்ணன், அக்கா, தம்பி.

டச்சு ரேட்,
உடுவில். (9383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மில்க்வைற்' விற்பனையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்.

மில்க்வைற் நீலசோப் 36, 72. பேபி சோப் 50 பார் சோப் 12 சுற்றி வரும் பெரிய ருப்பர்களைச் சேகரித்து எமது விற்பனை வாகனங்களில் கொடுத்து மிகச் சிறந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

-"மில்க்வைற்", யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

25 . 02 . 1989 சனிக்கிழமை

"உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானாகவே திருந்திவிடும்"

— சுவாமி சிவானந்தர்.

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அழகிய சுவாமி சிவானந்தர் படம் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

-"மில்க்வைற்", யாழ்ப்பாணம்

தீவிரவாதத்தைச் சமாளிக்க

# சிறுபான்மையினருக்கு அதிகாரத்தில் இடமளிக்க வேண்டும் —டிக்ஸிற்

கொழும்பு, பெப் 25

தீவிரவாதத்தைச் சமாளிக்கக்கூடிய சக்தியை சமுதாயத்தில் உருவாக்க வேண்டும். அத்துடன் அதிகார அமைப்பில் சிறுபான்மையினருக்கும் இடமளிக்கவேண்டும்

இந்தியத் தூதவர் திரு. ஜே என். டிக்ஸிற் கொழும்பில் நடந்த ரோட்டறிக் கழகக் கருத்தரங்கில் பேசுகையில் இவ்வாறு சொன்னார்.

இந்திய அமைதிப்படை முழுவதும் எப்போது தாயகம் திரும்பும் என்று இக் கருத்தரங்கில் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்ட விடயத்தையும் அவர் கூறினார்.

அவர் சொன்னதாவது:-

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் சகல நிபந்தனைகளும் பூரணமாக நிறைவேற்றப்பட்ட பின்னரே இந்திய அமைதிப்படை தாயகம் திரும்பும்.

சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டு விட்டன

ஆனால் இலங்கை அரசு தமிழருக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் இன்னும் அதிக அதிகாரங்களைக் கொடுக்கவேண்டியுள்ளது

எப்படியாயினும், பிரதான தடைகளைத் தாண்டிவிட்டோம்

பார்வையாளர் ஒருவர்; தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமா? இது நடக்கக்கூடிய காரியமா?

திரு டிக்ஸிற்,

ஆயுதங்களை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வது நடக்கும்; பெற்றுக்கொள்ளவும் முடியும்

எவ்வளவு காலம் செல்லும்? யாரால்? என்பது தான் இது தொடர்பான கேள்வியாகும்

இலங்கைப் பிரசைகள் எவ்வளவு விரைவில் தங்கள் தலை எழுத்தை நிர்ணயிப்பதை தங்கள் கைகளுக்கு எடுத்துக் கொள்கிறார்களோ அவ்வளவு விரைவாக நாம் (அமைதிப்படை) இலங்கையை விட்டுப் போவோம்; பிரச்சினையும் விரைவாக தீர்ந்துவிடும் - என்றார். (ஒ-எ)

# இந்து அலுவலைக் கவனிக்க மாவட்டம் தோறும் உதவிப் பணிப்பாளர்கள்

கொழும்பு, பெப் 25

மாவட்டந்தோறும் உதவிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர் என்று இந்துமத, கலாசார அலுவல்களுக்குப் பொறுப்பான துணை அமைச்சர் திரு பி பி தேவராஜ் தெரிவித்தார்.

இவ் உதவிப் பணிப்பாளர்களே அவ்வப் பகுதி சமய, கலாச்சார நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பர் என்றும் துணை அமைச்சர் சொன்னார்.

மட்டக்களப்பு விபுலாநந்தர் இசை, நடனக் கல்லூரி போன்று நுவரெலியாவில் மத்திய கலாச்சார நிலையம் ஒன்று நிறுவப்படும் என்றும் துணை அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

## ரூ 1500...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு வேலைகள் இம்மாத இறுதியில் ஆரம்பமாகும். மாகாண சபைகள், தொண்டர் நிறுவனங்கள் மற்றும் அடிமட்ட ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் அரசு இப்பணியை மேற்கொள்ளும்

"இப்பணியைக் கண்காணிக்க என் மீது கொண்ட அமைச்சரவை உபகமிட்டி நியமிக்கப்பட்டு உள்ளது.

இந்த 1,500 கோடி ரூமா பணத்தில் (50 கோடி டாலர்) ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

புனர்நிர்மாண வேலைகளில் இவர்கள் கல்லுடைப்பவர்களாகவும் மண் அள்ளுபவர்களாகவும் செங்கல்-கொங்கிரீட் கற்கள் செய்பவர்களாகவும் பணிபுரிவர் இதைவிட 5 ஆயிரம் பேர் மேற்பார்வை ஊழியர்களாகத் திரட்டப்படுவர்.

எங்கு சாத்தியமோ அங்கெல்லாம் சட்ட விதிகளை தளர்த்தி, நிர்மாணப்பணிகளுக்கு உதவும்படி நிதி அமைச்சு கோரப்பட்டுள்ளது.

அச்சமின்றி புனர்வாழ்வுப் பணியில் மக்கள் ஈடுபடப் பாதுகாப்பை, பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தும்.

—இப்படி அமைச்சர் மேலும் தெரிவித்தார் (உ-எ)

# நிலக்கரி மின் நிலையம் திருமலையில் அமையாது

கொழும்பு பெப், 25

நிலக்கரியில் இயங்கும் மின் நிலையம் ஒன்றை திருகோணமலையில் நிறுவும் திட்டத்தை அரசு கைவிட்டது

இத்திட்டம் சூழல் பாதுகாப்பைப் பேண உதவாது என்று அரசு கருதுவதாக மின் சக்தி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

சூழல் பாதுகாப்பு நிபுணர்கள் திருமலையில் நிலக்கரியில் இயங்கும் மின் நிலையத்திட்டத்தை திருமலையில் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உள்ளனர்.

மேற்குக் கரைப்பிரதேசத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவது பற்றி ஆராயும்படி நிபுணர்களை அரசு கோரியுள்ளது

இதுவும் சூழலை பழுதாக்கும் என அறியப்பட்டால் இத்திட்டத்தையே கைவிட்டு விடுவோம்-

—இப்படி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மேலும் சொன்னார். (உ-எ)

## துணை அமைச்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணிக்கவாசகர் நியமிக்கப்பட்டார்.

இவர் முன்னர் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணியாற்றி வந்தார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்த திரு. எஸ். குணரத்தினம் மின்சக்தி எரிபொருள் துறை துணை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணியாற்றிய திரு. ஆர். கே. சோமசுந்தரம் போக்குவரத்து துணை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஒ-எ)

## காணிப்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கியம்.

இதன் பொருட்டு சம்பந்தப்பட்ட பகுதிகளிலுள்ள காணிப் பதிவாளர் அலுவலகங்களை இயக்க வைப்பதற்கான முயற்சிகள் தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியவருகிறது.

காணிப்பதிவு சம்பந்தப்பட்ட வேலைகளைத் துரித கெதியில் செய்வதற்கு மேலதிக ஊழியர்களை நியமிப்பது பற்றியும் அது சாத்தியப்படாத பட்சத்தில் தேவையான ஊழியர்களை கொழும்பிலிருந்து வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பி வைப்பது அலிக்கும் ஆராயப்படுகிறதாம்.

காணிப் பதிவாளர் அலுவலகங்களில் கடன் வழங்கு — உறுதிப் பிரிவு ஒன்றை விசேடமாக உருவாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது, [அ-ஐ]

## தேர்தல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக "தன் ... செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் தென் பகுதியைச் சேர்ந்த பல பொலீஸாருக்கும் தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது, எனத் தெரியவருகிறது. (ஒ-10)

## கிளிநொச்சி ..

வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது (ஒ-144)

## கோக்குவில்...

சையில் தோற்றவுள்ள மாணவர்களும் குடும்பத்தவர்களும் அடங்குகின்றனர்

இதேவேளை எரித்து நாசமடைந்த வீடுகளையும், அப்பகுதியையும் ஐ நா. அகதிகள் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகளும் மற்றும் மதஸ்தாபனத் தலைவர்களும் பார்வையிட்டுச் சென்றனர்.

பல பெறுமதியான உடைமைகள் தீக்கிரையாகியுள்ளதாக அந்தப் பகுதியைப் பார்வையிட்டவர்களில் ஒரு முக்கிய பிரமுகர் சொன்னார்.

## இறுதிச் சடங்கு

13 மணித்தியாலம்

டோக்கியோ பெப், 25

காலஞ்சென்ற ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோ ஹிட்டோவின் இறுதிச் சடங்குகள் நேற்று 13 மணித்தியாலங்கள் மிகப் பிரமாண்டமான முறையில் இடம் பெற்றன. (ஏ)

## ஆலயங்களை.. ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தினசிங்கத்தின் இந்திய விஜயத்தில் பிரதான நோக்கமாக இருந்தது.

இதேவேளை, அவர், சேவாசிரமத் திற்காக ஒரு கம்பியூட்டரையும் நூல்களையும் சுவாமி சித்ருபானந்தாவிடம் அன்பளிப்புச் செய்தார். (ஏ)

# மரண அறிவித்தல்கள்

## திரு. T.F. அலோசியஸ் (Bபேட்டி)

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகஸ்தருமாகிய, பிரன்சிஸ் அலோசியஸ் [பேட்டி] காலமானார். இவர் லலிதாவின் அன்புக் கணவரும். ரான்யா, பிரியா இருவரினதும் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் தோமஸ் திருமதி அன்னம்மா தோமஸ் என்பவரின் அன்பு மகனும் Bபெனி, சவுந்தரம் செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இளைப்பாறிய கல்வி உத்தியோகஸ்தர் சிறாம்பிள்ளையினதும், திருமதி அக்னெஸ் சிறாம்பிள்ளையினதும் மருமகனும் திருமதி புஸ்பம் ஜெனி காலஞ்சென்ற கிறிஸ்ரின் பயஸ், திருமதி நிர்மலா இராஜரட்ணம், டாக்டர் ஜோர்ச், றென்றி, எட்வேட், றிச்சேட் ஆகியோரது மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு மாதகல் புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(9367) தகவல்: சகோதரர்கள்

## திருமதி ரேஸ் நல்லம்மா

திருமதி ரேஸ் நல்லம்மா காலமானார். உடுப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியா 2ம் கட்டை வேப்பங்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி ரேஸ் நல்லம்மா 24-02-89 வெள்ளிக்கிழமை காலமானார் அன்னார் திரு. ஞா. யோ. பொன்னுத்துரை (இளைப்பாறிய குருநாகல் மாநகரசபை ஆணையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் திருமதி ஜெயமலர் ரியூடர் (லண்டன்) டாக்டர் திருமதி புஸ்பமலர் இராமச்சந்திரன் (வவுனியா) செல்வி ரஞ்சிதமலர் பொன்னுத்துரை (லண்டன்) திரு பொன்னுத்துரை தாமபாலன் கிராமசேவை அலுவலர் (நாவாந்துறை) ஆகியோரின் அன்புத்தாயாரும், டாக்டர் ரியூட்டர் (லண்டன்), டாக்டர் கந்தையா இராமச்சந்திரன் (வவுனியா) திருமதி குகனேஸ்வரி தர்மபாலனின் மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் 25-02-89 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக வவுனியாநெளுக்குளம்சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும். தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- பொ. தர்மபாலன். (மகன்)

(9388)

## சுப்பையா நல்லையா

புன்னாலைக்கட்டுவன் வடக்கு சுப்பையா நல்லையா 24.2.89 இல் சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற சுப்பையா ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வராவார் இவர் யாழ்ப்பாணம் ஆறுமுகம்பிள்ளை அன் சன்ஸ் முன்னாள் கணக்குப்பிள்ளையாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.2.89 பி. ப 2 00 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் வடக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்: மருமக்கள் சார்பாக வ. அம்பிகைதாசன் (தபால் அதிபர்).

புன்னாலைக் கட்டுவன். (9389)

**Vacancies for A Construction Company in Japan**

1. Building Supervisors
2. Electricians for Buildings
3. Aircondition Mechanics
4. Plumbers
5. Welders - Oxydens N Arc
6. Barbenders
7. Crane Operators
   [1] Tower Crane
   [2] Mobile Crane
8. Showel Operators
9. Forklift Operators
10. Carpenters
11. Masons
12. Drivers – Construction
13. Heavy Vechcle Drivers
14. Cooks – Asian
15. Cooks Helpers
16. Construction – Labourers, Helpers

SALARY U S DOLLARS 500
FOOD ACCOMMADATION
AND MEDICAL FREE
AGE LIMIT 20 to 42 YEARS

**Vacancies for a reputed Restaurant**

1. Helpers
2. Waiters

AGE LIMIT UNDER 26 YEARS
SALARY U S DOLLARS 700
Food Accommadation, Medical and Uniform Free

**Conditions of Contract**

1. Two Years Contract
2. Food Accommadation Medical and Uniform Free
3. Ten Hours Work per Day
4. Return Ticket after Two Years
5. Insurance and other benefits - According to Japanese Labour Law
6. Original Experience Certificates Qualification Certificate should be in hand for Interview and at the time of Arrival in duty place

**Documents Requirements:-**

PASSPORT - ALL COUNTRIES ENDROSEMENT AND 10 PHOTOGRAPHS AND THE ALL THE CERTIFICATES PHOTOCOPY.

**T. V. TRAVELS & TOURIST**

Brown Road,
Railway Station (Front)
Kokuvil.

(C/ 1610)

எமது நேற்றைய வெளியீடு!

பாண்டியன், சீதா, சங்கர்
★ காதல் எனும் நதியினிலே

அர்ஜுன் — அர்ச்சனா
★ எங்க ஊர் தலைவன்

நிழல்கள் ரவி — ஷோபனா
★ ஒரே தாய் ஒரே குலம்

● இன்றைய வெளியீடு!

சத்யராஜ், ராதிகா
★ தாய் நாடு

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1601)

1 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் சுந்தரம் சிவநேசன்
(முகாமையாளர் A. K. S. நகைமாளிகை)

தோற்றம்:- 17 07-1918 மறைவு: 08-03 1988

திதி:- மாசி கிருஷ்ண பக்க பஞ்சமி (25-02-1989)

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தவர்.

சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். [9385]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 25-02-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd 292/2 Navalar Road, Jaffna Saturday 25th February 1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனை
இ. ஸ்ரிரியூட் - கொக்குவில்
O/L 89
கணிதம்
திரு இரா. அருட்செல்வம்
விஞ்ஞானம்
திரு. முருகதாஸ்
தமிழ்
திரு பொன்னுச்சாமி
ஆண்டு 6, 7, 8, 9, 10 வகுப்புகளும்
நடைபெறுகின்றன.

சஞ்சீவி
சஞ்சிகை

25 - 02 - 1989 சனிக்கிழமை

பேராதனை
இன்ஸ்ரிரியூட் - கொக்குவில்
O/L 89
ஆங்கிலம்
திரு. தேவராஜா
சமூகக்கல்வி
திரு. வேலாயுதபிள்ளை
வர்த்தகமும் கணக்கியலும்
திரு. மகேஸ்
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

# நவீன அறிவுத்துறையில் தமிழ்மொழி வளம் காணாமைக்கு யார் காரணர்?

## கருத்துக் கலசம் — கஜூரா

### வள்ளுவன் வழி

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு — என்று துள்ளிக் குதித்தவன் பாரதி.

பாரதியின் மகிழ்ச்சிக்குக் காரணம் உண்டு.

உலக அறிஞர்கள் மத்தியில் தமிழர்களுக்குப் பெருமை தேடித் தந்தவர், தருபவர், இனியும் தர விருப்பவர் எங்கள் செந்நாப் போதர் வள்ளுவப் பெருந்தகை:

உலகியலை, ஆன்மீகவியலை — இரண்டையும் குறுகத் தறித்த குறட்பாக்களால் பூரணமாக விளக்கிய வித்தகர் — மாமேதை வள்ளுவப் பெருமான்.

வள்ளுவன், தனது 1330 குறட் பாக்களிலும் அடக்காத விடயம் எதுவும் விடுபட்டுப் போனதுண்டா?

வாழ்க்கை நெறியா, சமய நெறியா, மனுநீதியா; சமூகவியலா, அரசியலா, விஞ்ஞானமா, மெய்ஞ்ஞானமா; இன்பியலா, துன்பியலா எது குறித்துக் கூறுவதற்கு மறந்தனன் வள்ளுவன்?

எப்பொருள் பற்றியும் எடுத்தாள்வதற்கு, உதாரணம் காட்டுவதற்கு, விளக்கம் அளிப்பதற்கு ஒரு குறள் இருக்கவே செய்யும். அதுவே திருக்குறளின் சிறப்பு. வள்ளுவன் சொல்லாத, தெளியாத பொருளில்லை.

அதனாலேயே அது உலகச் சிறப்புப் பெறவும், திருவுடைய குறளாகவும் ஏதுவானது; ஏற்றிப் போற்றப்படுகிறது. மனித சிந்தனைக்கு எட்டிய எந்த விடயத்துக்கும் விளக்கம் தருகிறது திருக்குறள். அதனாலே அது உலகப் பொதுமறையாகிறது.

இக்காலத்துக்கும், முக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் ஏற்ற விதத்தில், எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் ஒவ்வாதது, ஒண்ணாதது என்று கூறி ஒதுக்கி விட முடியாத உண்மைத்துவம் செறிந்து விளங்குவதும் திருக்குறளே.

அத்தகு மாட்சிமை மிகுந்த குறள் தந்த மாமுனிவன், தெய்வப்புலவர் திருவள்ளுவன் நினைவு தினம் கடந்த வியாழக்கிழமை ஆகும்.

தமிழக சட்டசபை நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கு முன்னர் சபாநாயகர் தமிழ்மறை ஓதவும், அவ்வேளை உறுப்பினர்கள் எழுந்து நின்று மரியாதை செய்யவும் ஏற்பாடாகி உள்ளது மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி அது.

அதுபோன்ற வள்ளுவப் பற்று மட்டுமல்ல—

வான் புகழ் வள்ளுவனின் மனு மறையில் உள்ள ஒரு சில குறட்பாக்கள் காட்டும் வழியிலாவது வாழ்வதே தமிழர்கள் அப்பெருந்தகைக்குச் செய்யும் பெரும் கைமாறாகும்.

தினைத்துணை நன்றி
செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்
தெரிவார்.

★

வசனத்தில் பல வகைகள் உண்டு. மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி அவர்களின் செயல்களைத் திசை திருப்ப உதவும் அரசியல் மேடை வசனம் தொடக்கம், அறிவு நிலையான ஆராய்ச்சிகளையும், செய்திகளையும், விளக்கங்களையும் உணர்ச்சிக் கலப்பின்றி வெளியிடும் விஞ்ஞான வசனம் வரை அதன் போக்குகள் பல வகைப்படும்.

'தமிழா, பயப்படாதே; தெய்வத்தை நம்பு; உனக்கு நல்ல காலம் வருகிறது'

என்று பாரதி கூறுகையில் அங்கு எழுதப்படுவது உணர்ச்சி வசனம்.

'ஒரு பௌதிகக் கணியத்தைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டுமாயின், எந்த அலகு பயன்படுத்தப் பெறுகிறது என்பதையும், அப்படியான எத்தனை அலகுகளை இக் கணியம் அடக்கியிருக்கிறது என்பதையும் வரையறுத்துக் கூறுதல் வேண்டும்' இவ்வசனம் அறிவு வசனம்; விஞ்ஞான வசனம்.

உணர்ச்சி வசனத்தை ஒரு கரையில் வைத்தால், விஞ்ஞான வசனத்தை மறு கரையில் நாம் வைக்கலாம். உணர்ச்சி வசனம் கவிதை போன்றது; பாதிப்புப் பயன்பாட்டுக்கு முதன்மை கொடுப்பது. அறிவு வசனம் கணிதம் போன்றது; அது குறியீட்டுப் பயன்பாட்டுக்கு மாத்திரமே முக்கியத்துவம் தரும்; பாதிப்பு பயன்பாட்டைப் புறக்கணிக்கும். உணர்ச்சி வசனம் இலக்கியத்துக்கு உரியது; கலைகளுக்கு உரியது

**உணர்ச்சி வசனம்**
**அறிவு வசனம்**

அறிவு வசனம் ஆய்வறிவுக்கு உரியது; விஞ்ஞானத்துக்கு உரியது.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில், இன்று வளர்ச்சி பெற்றிருப்பது உணர்ச்சி வசனமே ஆகும்

சி. என். அண்ணாத்துரை, மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன் முதலானோர் வளர்த்த பேச்சு மேடைத் தமிழும், இவர்களும் பிற நாடக ஆசிரியர்களும் வளர்த்த நாடகத் தமிழும் உணர்ச்சி வசன வளர்ச்சிக்கு நல்ல எடுத்துக் காட்டுகள்;

இன்னும் அகிலன், கல்கி, சாண்டில்யன், நா. பார்த்தசாரதி முதலிய இலக்கியகாரர்கள் எல்லாம் உணர்ச்சி வசனத்துக்குத் தத்தம் பங்களைச் செலுத்தியுள்ளனர்.

இவர்கள் எல்லோரும் சேர்ந்து, உணர்ச்சி வசனத்தை ஒரு குறிப்பிட்ட எல்லை வரைக்கும் வளர்த்து எடுத்திருக்கிறார்கள். இந்த எல்லைக்கு மேலே செல்ல இயலாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

இந்த எல்லைக்கு அப்பாற் செல்ல நினைத்து முயல்வோரின் வசனத்திலே செம்பாதிக்கு மேல் ஆங்கிலம், இந்தி முதலான பிறமொழிச் சொற்களும் பிரயோகங்களும் கலப்பதனை நாம் காண்கிறோம்.

இலக்கியத் தரத்தின் உச்சங்கள் சிலவற்றைச் சென்று கண்டு மீண்டுவிட்ட ஜெயகாந்தன் தொடக்கம், சனரஞ்சக ஆங்கில நாவல்களால் விழுங்கப்பட்டுள்ள சுஜாதா, மணியம் போன்றோர் வரையில் இக்கலப்பு மொழியை மிகப் பெருந்தொகையினர் பிரயோகிக்கின்றனர்.

இவ்வாறான கலப்புமொழிப் பிரயோகம் ஒரு பெருநோயின் குணங்குறியே ஆகும்.

அந்தப் பெருநோய் எது...? இது முக்கியமான கேள்வி. தமிழ்மொழியில் அறிவு வசனம் நல்வளர்ச்சி பெறாமையே அந்தப் பெருநோய். இவ்வாறு நாம் கூறுவது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கும்.

**இரு துருவங்கள்**

உணர்ச்சி வசனமும் அறிவு வசனமும் எதிரெதிர்த் துருவங்களில் உள்ளவை; அப்படியானால், அறிவு வசன வளர்ச்சி குன்றி இருப்பது, உணர்ச்சி வசன வளர்ச்சிக்கு நல்லதுதானே! இப்படியும் சிலர் நினைக்கக் கூடும்.

உண்மை அது அன்று. இரு வகை வசனங்களுக்கும் மூலக் கூறுகளாக உள்ளவை சொற்களே. சொற்களோ குறியீடுகள். இக் குறியீடுகள் எண்ணிக்கையிலும் நுட்பத்தரங்களிலும் பரந்து விரிந்து இருத்தல் வேண்டும்.

வரையறையான குறியீடுகள் பலப்பல நமக்கு வேண்டும். அப்பொழுதுதான் ஒரு மொழி வளம் உடையது எனப்படும்.

வளம்பெற்ற அந்த மொழியில் உள்ள வரையறை மிக்க குறியீடுகளான சொற்களை வரையறை கடந்து பிரயோகிக்கும்போதுதான் உணர்ச்சி வசனம் (கவிதையும்) பெறப்படும்.

சொற்கள் வரையறையான கருத்துக்களைப் பெறுவது, அவை சில திட்பநுட்பமான தேவைகளின் பொருட்டு ஈடுபடுத்தப் பெறும்போது மட்டுமே ஆகும்.

**- முருகையன் -**

உலகெங்கும் விரைந்து வளரும் அறிவுத்துறைகளின் முன்முகத்தில் ஈடுபடும் மொ[illegible] வளம் மிகுந்தனவாயாக இருக்கின்றன. அவற்றிலே தான் நுட்பத்தர வேறுபாடுள்ள பல பல சொற்கள் இயற்கையாக உருவாகின்றன!

நவீன மொழிகளிலே புதிய சொற்கள் உருவாகும் முறைமை பற்றி, விஞ்ஞான அறிஞரும், புனைகதை எழுத்தாளருமான ஃபிறெட் ஹொய்ல் என்பார் எழுதிய ஒரு குறிப்பை எடுத்துக் காட்டுவது இந்த இடத்திலே பொருத்தமாகும்.

அவர் சொன்னார்.

'நம் எண்ணுவனவற்றை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்குச் சொற்களைப் பயன்படுத்துகிறோம்; ஆனால் நம் எண்ணங்களை எல்லாம் முழுமையாக, இம்மியும் பிசகாமல் எடுத்துச் சொல்லும் ஆற்றல் சொற்களுக்கு இல்லை என்றே கூறவேண்டும். புதியதொரு கருத்தை எடுத்துச் சொல்லும்போது எழுகிற பிரச்சினை இது தான்.

பழைய பெயர்ப் பலகைகளாகிய சொற்கள் புதிய கருத்துக்களுக்கு முற்றிலும் பொருந்துவனவாக அமைய மாட்டா. இப்புதிய கருத்துக்களுக்கு ஏற்ப, புதிய சொற்களை நாம் கண்டு கொள்ள வேண்டி இருக்கும். அவ்வாறு கண்டு பிடித்த சொற்களை மற்றவர்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையிலே கையாண்டு வெற்றி காணுவது இரண்டாவது பிரச்சினையாகும்.

**புதிய கருத்தை ஏற்பதில் தாமதம்**

அநேகமாக புதியதொரு கருத்து மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குச் சற்றே கால தாமதமாகிறது. இந்தக் காலதாமதத்துக்குக்காரணம், புதிய சொற்களை ஆக்கி அவற்றை வழக்கத்துக்குக் கொண்டு வருவதற்கு எடுக்கும் கால இடைவெளி ஆகும். ஒரு மொழியிலே ஒரு சொல் ஆக்கப்பட்டதும் அதே சமாசாரமுடைய சொற்கள் அயல் மொழிகளில் எல்லாம் பரபரவென்று பரந்து விடுகின்றன. இந்த வேகம் கவனிக்கத்தக்கது.

ஹொய்ல் கூறிய இந்தக் குறிப்பிலிருந்து நாம கற்கவேண்டிய பாடங்கள் மிகப்பல. ஆனால் அவர் எடுத்து நோக்கிய மொழிகள் உயிர்ப்புள்ள மொழிகள்; வாழும் மொழிகள். அன்றன்றைத் தேவைகளுக்கெல்லாம் தயக்கமோ கூச்சமோ இன்றித் தன்னம்பிக்கையுடன் அநாயாசமாகப் பிரயோகிக்கப்பட்டு வரும் மொழிகள்.

அடுப்படியிலும், கிணற்றங் கரையிலும் தாய்மொழி வழங்கினால் போதும் என்ற மனப்பான்மை உடையவர்கள் அல்லர், அந்த நவீன மக்கள்.

வேலைக்காரர்களோடு பேசுவதற்கு மட்டுந்தானே அது தேவை என்று கருதும் துரைமார்களின் தாய் மொழிகள் அல்ல அவை.

'தமிழில் பேசாமல் விடுவதால், தமிழ் வளர்ச்சி குன்றி விடாது' என்று கூசாது பேசும் [illegible]ய்ச்சித் துரைமாரின் தேக்கமுற்ற தாய் மொழியைப் பற்றி அன்று ஹொய்ல் கூறியது. அவர் கூறியது, தாம் அறிந்த ஐரோப்பிய மொழிகளைப்பற்றி; நாளுக்கு நாள், கணத்துக்குக்கணம் புத்துயிரும் புதுமெருகும் பெற்று ஓங்கி நிமிர்ந்து வரும் வாழ்க்கைக் கருவியாகிய அந்த ஐரோப்பிய மொழிகளைப் பற்றி.

அந்த உயிர் மொழிகளில் புதிய எண்ணக் கருக்களையும் மனக்கோள்களையும் எடுத்துரைப்பதற்குஏற்றசொற்கள் 'கிசு கிசு' என்று கேட்டால், கையை விரிக்க வேண்டியவர்கள் ஆகத்தான் நாம் இருக்கிறோம்.

**தமிழில் புதிய சொற்கள்**

ஏன் தமிழிலே புதுச் சொல்லாக்க முயற்சி நடைபெறவில்லையா...? என்று யாரும் கேட்கலாம்.

புதிய சொற்கள் உண்டாக்கப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால், அந்த முயற்சியுங்கூட, ஓரளவு வேண்டா வெறுப்போடு, அவநம்பிக்கையோடு, பயத்தோடு, பதுங்கிப் பதுங்கியே மேற்கொள்ளப்படுகின்றது.

நமது மொழியின் புராதனப் பெருமையைப்பற்றி வாய் கிழியப் பேசி வானளாவக் கூவுகிறவர்கள் கூட, அதன் இன்றைய ஆற்றலைப் பற்றியும் இனிமேல் அது பெறத்தக்க வலிமையின் சாத்தியப்பாடுகள் பற்றியும் அவநம்பிக்கை உடையவர்களாகவே இருக்கின்றார்கள்

**மொழிகள் மனிதனின் படைப்புகள்**

நம்மொழியின் ஆற்றற் சாத்தியப்பாட்டைப்பற்றி ஐயமும் அவநம்பிக்கையும் கொள்கிறவர்களுக்கு நாம் ஒன்றை ஆணித்தரமாகச் சுட்டிக் காட்டல் வேண்டும். மொழிகள் எல்லாம் மனிதனின் படைப்புக்களே.

மனித சமுதாயத்தின் கூட்டு வாழ்வின்போது மூளை கொண்டு முகிழ்ந்த ஒரு நாகரிகப் பயனே நாம் பெருமை பாராட்டி உரிமைகொண்டாடும் மொழி என்ற சாதனம்

தமிழ் மொழியிலே சில துறைகளுக்கு ஏற்ற சொற்கள் இல்லை என்றால், அதற்குக் காரணம் நம் இனத்தின் வரலாறே ஆகும்.

நம் இனத்தில் அவ்வறிவுத் துறையில் நிபுணர்கள் தோன்றாமற் போயிருக்கலாம். அல்லது, தோன்றிய நிபுணர்கள்கூட, தம் சிந்தனைக்கும் அறிவுத் தோட்டத்துக்கும் கருவியாக வேற்று மொழியைப் பயன்படுத்தி இருக்கலாம். இந்த இரண்டு நிலைமைகளும் இருந்தன.

எந்திரவியல், கணிதம் பௌதிகம் போன்ற இயல்களில் மிக அண்மைக் காலம் வரையிலே தமிழ் மக்கள் ஈடுபாடு கொள்ளவில்லை.

சோதிடம், வைத்தியம், சிற்பம் போன்ற துறைகளில் ஈடுபட்ட பழம் தமிழர்களோ தம் அறிவுத் தோட்ட மொழியாக ஏற்றுக் கொண்டது வடமொழியை.

இக்கால நவீன அறிவியல் அக்கறையாளர்கள் தம் சிந்தனைக்கும், அறிவுத் தோட்டத்திற்கும் கருவியாகக் கொள்வது ஆங்கிலத்தை

இவ்வாறு, தமிழினத்துச் சிந்தனையாளர்களும் தத்துவ ஞானிகளும் விஞ்ஞானிகளும் வேற்று மொழியையே தம் அறிவுக் கருவியாகக்கொண்டமையால், அவர்களின் தாய் மொழியாகிய தமிழ் வாய்ப் பிழந்து போயிற்று.

அவர்கள் தமிழையே தம் அறிவுக் கருவியாக ஏற்றிருந்தால், அதன் நுண்மைத்தரம் உயர்ந்திருக்கும்.

நவீன அறிவுத்துறைகளில் நுழைந்து ஊடாடுவதற்குத் தமிழ்த்தாய் சற்றே தயங்குகிறாள் என்றால், அதற்குக் காரணம் அவளுடைய மைந்தர்களே தவிர வேறு யாரும் அல்லர்.

— முருகையனின் 'இன்றைய உலகில் இலக்கியம்' என்ற நூலில் இருந்து.

★

# ஸ்ரீராமன் மறந்த இரு மாதர்!

திருமணத்திற்குப் பிறகு சாந்திமுகூர்த்தத்துக்கு ஏற்பாடு செய்து சீதையை அலங்கரித்து அறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

இராமர் கட்டிலில் படுத்துத் தூங்குவது போலக் கண்ணை மூடிக்கொண்டிருந்தார்; அருகே சென்று காலடியில் அமர்ந்தாள் சீதா தேவி.

''தேவி...! என்பாதங்களைப் பிடித்துவிடேன்!''

—புன்முறுவலுடன் சொன்னார் இராமர். ஆனால் சீதா தேவி தலையைக் குனிந்து கொண்டாள். பாதங்களைப் பிடிக்க முயலவில்லை.

''என்ன தேவி...?...அரசகுமாரியான நாம் பாதங்களைப் பிடிக்கும் பணியைச் செய்வதா... என்னும் தயக்கமா...? அவ்வாறாயின் வேண்டாம்''

—என்று பாதங்களை இழுத்துக்கொண்டார் இராமர்.

**சீதை சொன்ன கதை**

''அப்படி அல்ல சுவாமி...! ஒருகதை கேள்விப்பட்டேன். தாங்கள் மிதிலை வரும் வழியில் ஒரு கல்லைத் தங்கள் பாதம் தீண்ட, அழகான பெண்ணொருத்தி வெளிவந்து நின்று வணங்கினாளாம்; இன்று எனக்கு அலங்காரம் செய்யும்போது நவரத்தினக் கற்கள் கொண்ட மோதிரத்தைப் பூட்டி இருக்கிறார்கள்; தங்கள் பாதம் பட்டவுடன் நவரத்தினக் கற்கள் அழகிய கன்னியராக உருபெற்று வந்து நின்றுவிட்டால் என்ன செய்வது...? எனக்குப் போட்டி ஏற்பட்டுவிடுமோ... என்று அஞ்சுகிறேன்...!?''

என்று குறும்புடன் சொல்லிச் சிரித்தாள் ஜானகி.

இராமர் எழுந்து உட்கார்ந்து கொண்டார். தனது கையில் சீதாதேவியின் அங்கையை எடுத்து வைத்துக் கொண்டு அதன்மீது தன் கையை வைத்துச் சத்தியம் செய்து கொடுத்தார்.

'தேவி......! உன்னைத்தவிர இருமாதரை மனத்தாலும் தீண்டேன்...!'

— என்று உறுதிமொழி கூறினார். கம்பன் கூறும் இந்த நிகழ்ச்சியில் 'இருமாதரை' என்றுவரும் பாடல் வரிக்குப் பொருள் கூறும்போது, நீ ஒருத்திதான் எனக்குரியவள். வேறு மாதரை இரண்டாவதாக மனதாலும் தீண்ட மாட்டேன்! என்று சொல்லுவதாகவே எல்லோரும் கூறுவார்கள்.

**இரு மாதர்**

அதுசரியல்ல. மகாவிஷ்ணுவுக்கு ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவி என்று மூன்று மனைவியர் உண்டு. பூவுலகில் இராமனாக அவதரித்தபோது ஸ்ரீதேவி, சீதையாக அவரை மணந்து கொள்ளவந்துவிட்டாள்.



ஆனால் பூதேவியும், நீளா தேவியும் வைகுண்டத்திலேயே தங்கிவிட்டார்கள். 'இராமனாக இந்த ஜென்மத்தில் பூமிக்கு வந்துவிட்டபிறகு, வைகுந்தத்தில் இருக்கும் எனக்குரிய தேவியரான பூதேவியையும், நீளாதேவியையும்கூட நான் மனதாலும் நினைக்கமாட்டேன்.'

இவ்வாறு இராமர் கூறியதாகத்தான் அதற்குப் பொருள்கூறவேண்டும். திருமணம்மூலம் தன்னை அடைந்திராத வேறு பெண்களைத்தான் மனதாலும் நினைக்க மாட்டேன் என்று கூறுவதில் தனியான சிறப்பு ஒன்றும் இல்லை.

ஆனால் தன்னை மனைவியாக அடைந்திருந்த, தனது உரிமைப் பொருள்களாக உள்ள இருதேவியரையும்கூடத் தான் மனதாலும் தீண்டமாட்டேன் என்று கூறியதில்தான் பெருமை, சிறப்பு எல்லாம் அடங்கியிருக்கிறது.

★

தொகுப்பு: திருமுருக கிருபானந்தவாரியார்



அரச அலுவலகம்...
அதிகாரி: ஏன் கை கட்டிக் கொண்டு நிற்கிறாய்?
குமாஸ்தா: சார் 'டை' கட்டி வர மறந்துபோய்ட்டேன்.
— ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறு வயதினிலே ஓர் ஏக்கம்

**- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -**

சஞ்சீவி சிறுகதை

**நான்** கலியாணம் செய்து கொள்ள வேண்டுமாம். அம்மாவும் அப்பாவும் சொல்கிறார்கள். அப்பா அவ்வளவாக இல்லை. அம்மாதான் நெருக்குகிறாள்.

எனக்கு வாறமாதம் தான் பதினாறுவயது முடிகிறது. ஓ. எல். சோதினை ஒருமுறை எடுத்தேன். நாலு எஸ். இப்பொழுது றிப்பீற் வகுப்பில் படிக்கிறேன். திரும்பவும் சோதினை எடுத்து எல்லாப் பாடங்களும் பாஸ் பண்ண வேணும்! இவ்வளவு காலம் படித்ததற்கு ஒரு சேட்டிபிக்கேட் எடுக்க வேண்டாமா?

பள்ளியில் எனது வகுப்புச் சினேகிதிகள் சிவமலர், புஷ்பா, அனுசூயா, யோகம், வத்சலா யாருக்கும் இப்ப கல்யாணக் கதை இல்லை! நான் எனது கதையைச் சொன்னதும்,

'உனக்கு லக்கடிச்சிருக்கடி விஜயா! எத்தினை இருபத்தாறிலும் முப்பத்தாறிலும்கூடக் கலியாணம் ஆகாமல் இருக்குதுகள்? உனக்குப் பதினாறிலேயே கிடைச்சிருக்கேடி!'

கிண்டலாகக் கேட்டுக் கண் சிமிட்டினாள் சிவமலர்.

மாப்பிள்ளை எப்பிடியடி? கறுப்பா? சிவப்பா? அழகா?...' என்று கேலியும் கிண்டலும் உண்மையுமாகத் துருவித் துருவி எடுக்கிறாள் புஷ்பா.

எங்களுக்குத் தெரிஞ்ச கலியாணங்களெல்லாம் நாங்கள் இரவிரவாகப் பாக்கிற வீடியோப் படங்களிலை வாற கலியாணங்கள்தான்!

தியேட்டரிலும் வீடியோவிலும் படங்கள் பார்த்து, றேடியோவிலை பாட்டும் நாடகமும் கேட்டு, ரீ.வீ. பாத்து சினிமாப் பத்திரிகையள் வாசிச்சு... ஒருத்திக்குத் தெரியாத கதையை மற்றவள் அவளுக்குச் சொல்லி... இப்படித்தான் கதையும் ரசிப்பும் ஆட்டமும் பாட்டமும் என்று இப்பொழுது எங்களுடைய வாழ்க்கை போய்க் கொண்டிருக்கிறது.

நான் எனது கலியாணத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை! நினைப்பதும் இல்லை.

நான் அம்மாவுக்குச் சொல்லிவிட்டன். 'இப்ப கலியாணம் கட்டமாட்டேன்!' எண்டு, அம்மா விட்டால் தானே?'

'ஒரு பெண் பெரியவளானால் அவள் எந்தநேரமும் கலியாணத்துக்குத் தயாராக இருக்கவேணுமடி! நான் எத்தினை வயதிலை கலியாணம் செய்தனான் தெரியுமோ? பதினாறு வயதிலை!' என்றாள் அம்மா.

'அம்மா, நீ அப்பிடிச்செய்து கொண்டாய் எண்டதுக்காக நானும் அப்பிடிச் செய்ய வேணுமா? உன்னுடை காலத்திலை இருந்த மாதிரியா இப்ப உலகம் இருக்கு?' என்று கேட்டு அம்மாவை மடக்கினேன். பதில் இல்லை.

இப்படித்தான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பக்கத்துவீட்டுப் பார்வதி அக்காவுக்குப் பதினாறுவயதில் கலியாணம் செய்து வைத்தார்கள். அப்பொழுது நான் சின்னப்பிள்ளை, பத்து வயது.

பார்வதி அக்கா பெரிய பிரமாத அழகியில்லாவிட்டாலும் அழகிதான். மாநிறம்தான். ஆனால் மெல்லியதாய், உயரமாய், கூரிய கண்களும் கருகரு வென்ற அடர்த்தியான நீண்ட கூந்தலுமாக அக்கா எவ்வளவு அழகாக இருந்தாள்!

'நானும் ஒரு நாளைக்கு அக்காவைப்போல அழகியாக வரமாட்டேனா?' என்று அப்பொழுது அங்கலாய்த்திருக்கிறேன். பார்வதி அக்காவின் அன்றைய அழகு, இன்றைக்கும் என் கண்களில் நிற்கிறது. அந்த அழகுக்கு ஆசைப்பட்டுத்தான் அந்த மாப்பிளை அக்காவைக் கட்டச் சம்மதிச்சானோ என்னவோ?

கலியாணம் முடித்துப் புருஷன் வீட்டுக்குப் போனவள், அடுத்தவருடம் பிறந்த வீட்டுக்கு வந்தாள், வயிற்றில் பிள்ளையுடன் ஏதோ சீதனத் தகராறும். பேசியபடி காசைக் கொடுக்கவில்லையாம். புருஷன் அடித்துத் துரத்தி விட்டு விட்டான்.

பிள்ளைப்பெத்து முடிந்ததும் ஏதோ கொஞ்சம் காசு களஞ்சு கொடுத்து, பழைய படி புருஷனுடன் சேர்த்து வைத்தார்கள். பலன்?... அடுத்த வருடமும் பிள்ளை வயிற்றுடன், அதற்கு அடுத்த வருடமும் ஒரு பிள்ளை? இப்பொழுது நாலாவது முறையாக அக்கா தாய்வீடு வந்திருக்கிறாள் பிரசவத்துக்கு.

பார்வதி அக்காவின் முதல் மூன்று பிள்ளைச் செல்வங்களும் முற்றத்தில் இருந்து புழுதி அளைகின்றன. திடீர் திடீரென்று அவற்றுக்கிடையில் போர் மூளும். கையில் அகப்பட்டதைத் தூக்கி ஒன்று மற்றதன் தலையில் போடும். 'ஓ' வென்று பெருத்த குரலெடுத்துக் கத்தும், அடிவாங்கியது. அதுகளைப் பார்க்க அக்காவுக்கு நேரம் ஏது? அக்காவின் கவனம் முழுவதும் வயிற்றில் இருக்கும் நாலாவதில்!



ஐந்து ஆண்டுகளில் அக்காவின் அழகு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. மெல்லிய உயரமாய் இருந்தவள் இப்பொழுது ஒல்லியாய், உள்வளையலாய் நிற்கிறாள். சற்றைக் குழல் உதிர்ந்து, உதிர்ந்து, ஒற்றைப் பின்னலாய் எலிவாலாய்த் தொங்குகிறது. கூர்மையான கண்கள் குழிவிழுந்து, முகம் வெளிறி, உடம்பின் மினுமினுப்பு மறைந்தது.......

இருபத்தொரு வயதில் கிழவியாக நிற்கிறாள் பார்வதி அக்கா. அக்காவைப் பார்க்க எனக்குப் பாவமாக இருக்கிறது. இதற்காகவா இவள் பெண்ணாகப் பிறந்தாள்?

ஐந்து வருடங்களில் நான்கு பிள்ளைகள். வீட்டில் நித்திய தரித்திரம். அதற்கு மேலாக போனஸ்ஸாகக் கணவனின் திட்டு அடி, உதை. இந்தப் பாக்கியங்கள் எதுவும் எனக்குக் கிடைக்காது போய்விடக் கூடாதே என்பதுதான் அம்மாவின் கவலையோ?

கல்யாணம் செய்துகொள்ளும் பெண்கள் எல்லாருமே பார்வதி அக்காவைப் போலத் துரதிஷ்டம் பிடித்தவர்கள் அல்ல. புருஷன், பிள்ளை; சொந்தபந்தம் என்று அன்பாய் ஆதரவாய்க் குடும்பம் நடத்துபவர்களும் இருக்கிறார்கள். கார், உல்லாசம், பார்ட்டி, கொண்டாட்டம் என்று உல்லாசமாக வாழ்பவர்களும் இருக்கிறார்கள் நான் மறுக்கவில்லை.

ஆனால் இந்த வசதிகள் சுகங்கள் எல்லாம் பதினாறு வயதில் கட்டினால் மட்டும்தான் கிட்டுமா? உரிய வயதில் கட்டினால் கிட்டாமல் போய் விடுமா?

அம்மா என்னைக் கலியாணத்துக்கு நெருக்குவதற்கு முக்கிய காரணம், நான் மூன்று பெண்களில் மூத்தவளாகப் பிறந்திருப்பது. எனக்குக் கீழே ராதா, கௌரி இரண்டு தங்கைகள். அவர்களும் பக்குவப்பட்டு விட்டார்கள். வீட்டில் மூன்று குமர்ப்பெண்கள் இருக்கக்கூடாதாம்! நான் கலியாணம் செய்து கொண்டால் எனது தங்கைகளுக்கும் வழி பிறக்குமாம்! அம்மா சொல்கிறாள்.

மூன்று குமர்களுக்கே அம்மா அழுகிறாள். எத்தனை வீடுகளில் ஏழெட்டென்று இருக்கின்றன? அவர்களும் வாழுகிறார்கள் தானே?

தங்கைகள் வாழவேண்டும் என்பதற்காக நான் பலிக்கடாவாக முடியாது. எனக்கென ஒருமனம் இல்லையா?...

ஆசைகள்... இலட்சியங்கள்... கனவுகள்...?

அம்மாவும் பார்வதி அக்காவும் பதினாறுவயதில் கலியாணம் கட்டினார்கள். அவர்களுடைய குடும்ப நிலைமை அப்படி. எனக்கு அப்பிடி இல்லையே?

அப்பாவுக்கு ஒரு சின்னக் கடை இருக்கிறது. அதில் குடும்பச் செலவுக்குப் போதுமான வருமானம் கிடைக்கிறது. மற்றும் சீதனத்துக்குச் சொத்துச் சுகங்களும் கொஞ்சம் உண்டு. அப்படியிருக்க நான் ஏன் அவசரப்படவேண்டும்?

படிக்கவேண்டும். ஓ. எல் திறமையாகப் பாஸ்பண்ணிய பிறகு ஏ. எல் படித்துப் பல்கலைக்கழகம் போகவேண்டும்.

இவைதான் இப்பொழுது என்னுடைய ஆசைகள்! ஆசை என்றால் சும்மா ஆசை இல்லை. கொள்ளை ஆசை!

பாடசாலையில் நேரம் போறதே தெரியாது. படிப்பு ஒருபக்கம். சிநேகிதிகளுடன் கொண்டாட்டம் ஒருபக்கம். சும்மா பாடசாலைக்கு வந்து போனாலே போதும் போல இருக்கிறது. கலகலப்பும் குதூகலமும் நிறைந்த இந்தப் பாடசாலை உலகம் எங்கே? பார்வதி அக்காவின் குடும்ப வாழ்க்கை எங்கே?

எங்கள் பாடசாலையிலும் ஏ. எல் வகுப்பு இருக்கிறது. அதில் நிறைய மாணவ மாணவிகள். ஏ. எல் மாணவிகள் உட்பட எல்லோருமே எங்களுக்குத் தோழிகள்தான்.

அந்த அக்காக்கள் எங்களையும்விடச் சந்தோஷமாக, ஆர்ப்பாட்டமாக இருப்பது போலத் தெரிகிறது. எந்த நேரமும் பேச்சும் சிரிப்புமாக வகுப்பு கலகலக்கிறது.

பெரிய புத்தகங்களெல்லாம் கொண்டு வருகிறார்கள். அவற்றையெல்லாம் படிக்கிறார்களோ, என்னவோ? பள்ளியில் படிப்பதை நான் கண்டதில்லை சும்மா ஷோவுக்காகவேனும் அவற்றைத் தூக்கிக்கொண்டு திரிவது ஒரு பெருமைதானே?

எங்களுக்காவது இடையிடையே ஆசிரியர்கள் வந்து, 'படியுங்கோ!', 'படியுங்கோ!' என்று தொல்லைகொடுக்கிறார்கள் அங்கே இந்த நெருக்குவாரம்கூட இல்லை. 'விரும்பினால் படியுங்கோ' 'விரும்பாவிட்டால் விடுங்கோ!' என்ற மனப்பான்மையில்தான் படிப்பித்தல் படிக்கிறநேரத்தில் படிப்பு. மற்றநேரத்தில் கொண்டாட்டம்.

இந்த அக்காமாருக்குப்பாடசாலையில் ஒருபடிப்பு. பிறகு ரியூட்டரியில் ஒரு படிப்பு. ஆளுக்கு ஒரு லேடீஸ் சைக்கிளில் ஏறி மாலையிலும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் யாழ்ப்பாணம் ரவுணில் உள்ள ரியூட்டரிகளுக்குப் போய் வருகிறார்கள், சோடி சோடியாகவும், கும்பல் கும்பலாகவும்; வழியில் கார், பஸ் வந்தால் கூட விலத்தமாட்டார்கள். றோட்டுமுழுக்க அவர்கள் ஆக்கிரமிப்புத்தான்!

பாடசாலைக்கு வெள்ளை நிறச் சீருடை 'யூனிபோம்' நிறம், அழகு, ஸ்ரைல்.. மூச்! அந்தக்கதையே பேசப்படாது! எல்லோரும் ஒரேமாதிரித்தான் இருக்கவேண்டும். தலை அலங்காரமும் அப்படித்தான். ஒரேபின்னல் ஜடை.

இந்த ரியூட்டரிக்குப் போகும் மாணவிகள் என்ன என்னவிதமான உடுப்பெல்லாம் போடுகிறார்கள்! எத்தனை அழகுகள், வண்ணங்கள், வடிவங்கள்! ஸ்கேர்ட், பிளவுசுகள்; ஜீன்ஸ், பெனியன்கள் தலை அலங்காரங்களில்தான் எத்தனை கோலங்கள்!

இந்த அக்காக்கள் இப்படி வண்ணவண்ண உடைகளில் அழகழகாக வரிசை வரிசையாகப் போவதைப் பார்க்க என்னுடைய உள்ளத்திலும் ஆசை அலைகள் பொங்கி எழும். படித்தால் என்ன படிக்காவிட்டால் என்ன, அழகான உடுப்புகள். மேக்கப்புகளுடன் சைக்கிளில் ஏறி, சினேகிதிகளுடன் கூடி யாழ்ப்பாணநகரை வலம் வருவதற்காகவே ஏ. எல் படிக்கலாமே.

ஏ. எல். பா[illegible] பல்கலைக்கழகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கள் ஊருக்கு அண்மையில்தான் இருக்கிறது. கம்பஸ் றோட்டில் போகும்பொழுதெல்லாம் கம்பஸைப் பார்த்து வாயூறுவேன்,

கம்பஸ்! அது ஒரு தனி உலகம். எவ்வளவு விசாலமான இடம்! எத்தனை பெரிய கட்டடங்கள்! இந்தக் கம்பஸிற்குள் உரிமையுடன் நுழைய வேண்டும். இந்தப் பெரிய கட்டடங்களுக்குள்ளேயிருந்து படிக்க வேண்டும். பாதைகளிலும் பற்றைகளிலும் உலாவித் திரிய வேண்டும்....... இப்படி எத்தனை ஆசைகள்!

பல்கலைக்கழகத்திற்குள் ஒரு நூல் நிலையம் இருக்கிறதாமே. பெரிய கட்டடம். நிறையப் புத்தகங்கள். பெரிய பெரிய புத்தகங்கள். எனக்கு மட்டும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தால், எனக்குப் படிப்பில் இருக்கும் ஆவலில் அத்தனை புத்தகங்களையும் கரைத்துக் குடித்துவிட மாட்டேனா?

வாசிற்றியில் கட்டடங்கள் மட்டும் தானா? மனிதர்கள்...? அழகான இளமையான ஆண்களும் பெண்களுமாகக் கம்பஸ் எப்பொழுதும் ஜே ஜே என்றிருக்கும். கூட்டம் கூட்டமாக நின்று பேசுகிறார்கள். குதிக்கிறார்கள். கும்மாளமடிக்கிறார்கள், சோடி சோடியாக உலாத்துகிறார்கள். அழகிய கட்டடங்களுக்கிடையில் அழகான மனிதர்கள் வளைய வருவதைப் பார்க்க, எனக்கு இது கனவுலகக் காட்சியோ காணிவல் கொண்டாட்டமோ என்று எண்ணத் தோன்றுகிறது! நானும் ஒருநாள் இங்கு வரமாட்டேனா' என்று உள்ளம் ஏங்குகின்றது!

ஏன் முடியாது? படித்தால் முடியும். இவர்களெல்லாம் இங்கு எப்படி வந்தார்கள்? வானத்தில் இருந்து குதித்தார்களா?

வாசிற்றியில் மூன்று அல்லது நான்கு வருடங்கள் படிப்பு. படிப்பு முடிந்தால் பட்டதாரி. பட்டதாரியானால் உத்தியோகம்.

உத்தியோகம்...! அது [illegible]

எனக்குத் தெரிந்த எத்தனை பேர் படித்துப் பட்டம்பெற்ற பின்பும் வேலை கிடைக்காமல் அலைந்து திரிகிறார்கள். பரவாயில்லை

எனக்குப் பெரிய உத்தியோகங்கள் எதுவும் வேண்டாம். ஒரு ரீச்சராக வந்தாலே போதும். ரீச்சருக்குத்தான் பள்ளிக்கூடத்தில் எவ்வளவு மதிப்பு! எதிலும் மனதுக்குப் பிடித்த ரீச்சராகவும் இருந்துவிட்டால், கேட்க வேண்டிய தேயில்லை, 'மிஸ்' 'மிஸ்' என்று பெண்கள் எல்லாம் அவளுக்குப் பின்னால் சுற்றிக் கொண்டு திரிவார்கள்.

வீடுகளில் இருக்கும் எங்கள் அம்மாக்களும் பெண்கள் தான்; இந்த ரீச்சர்களும் பெண்கள்தான்! ஆனால் இவர்கள் மாதிரியா அவர்கள்? ஊத்தைச் சீலை சட்டையும், ஒழுங்காக வாரிவிடப்படாத தலைமயிரும், எண்ணெய் வழியும் முகமுமாக இருக்கும் அம்மாக்கள் எங்கே? எண்ணெய் வைத்து வாரி, அழகாகக் கொண்டை போட்டு, முகத்துக்குப் பவுடர் பூசி, தினம் ஒரு சாறியில் 'பளிச்' 'பளிச்' என்று கம்பீரமாகப் பாடசாலைக்கு வந்து போகும் இந்த ரீச்சர்கள் எங்கே?

ரீச்சராக வந்தால் அதட்டலாம்; மிரட்டலாம்; அதிகாரம் பண்ணலாம்!... இவை மட்டுமா ரீச்சர்கள் செய்வது! சும்மா சொல்லக்கூடாது! எங்களுக்குப் பிரயோசனமான எத்தனை வேலைகள் செய்கிறார்கள்!

உலகம் எவ்வளவு பெரியது. அதில் என்னென்ன வகையான வாழ்க்கை! இன்பங்கள்! 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்? - எங்கள் இறைவா! இறைவா! இறைவா!' என்று பாடினார் மகாகவிபாரதி.

அத்தனை இன்பங்களையும் விட்டுவிட்டு யாராவது கலியாணச் சிறைக்குள் அகப்படச் சம்மதிப்பார்களா? கல்யாணத்தைக் கட்டிக் கஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டுப் பிள்ளைகளைப் பெற்றுப் பெற்று... சீ! [illegible] வாழ்க்கை! வெறும் சோற்று வாழ்க்கை!

ஒரு பெண் கல்யாணம் கட்டத்தான் வேண்டும். பிள்ளைகளைப் பெறத்தான் வேண்டும். நான் மறுக்கவில்லை, ஆனால் அதற்கும் ஒரு காலம் இருக்கு. நான் அம்மாவுக்குச் சொல்லப் போகிறேன். 'இப்ப என்ன கண்டறியாத கல்யாணம்? இருபத்தைஞ்சு வயதுக்கு முன்னம் கலியாணம் என்ற கதையே பேசப்படாது' என்று.

(யாவும் கற்பனை)



ராமு: (10 ரூபா தபால் முத்திரையைக் கூப்பன் கடையில் மனேஜரிடம் கொடுத்து) இதை வைத்துக் கொண்டு எனக்குச் சாமான் தாருங்கோ!

மனேஜர்; ஏன் முத்திரையைத் தருகிறாய்?

ராமு: இங்கு முத்திரைக்குச் சாமான்கள் கொடுப்பதாகச் சொன்னார்களே!

★ ★ ★

1 ஆம் நபர்: என்ரை வெங்காயம் எல்லாம் நல்லாய் முளைச்சிட்டுது:

2 ஆம் நபர்: போடா மடையா! இப்ப ஏற்பட்ட வெள்ளத்தில எல்லா வெங்காயமும் அழுகிவிட்டதாக வெல்லோ சொல்லுகினம்.

1 ஆம் நபர்: நான் அதைச் சொல்லவில்லை; நான் லொறியில அனுப்பிய வெங்காயம் முளைச்சிட்டுது என்று கொழும்பில இருந்து கடைக்காரர் கடிதம் போட்டிருக்கிறார்.

- வ. நடராசா -
இல்லைகட்டி,
சுன்னாகம்.

# வாசகர் தராசு

## கண்களைக் குளமாக்கிய 'உத்தவ கீதை'

21. 1. 1989 சஞ்சீவி சஞ்சிகையில் பிரசுரமான 'உத்தவ கீதையில் கண்ணன் உபதேசம்' என்ற கட்டுரையை வாசித்தேன்:

இதுவரை நான் அறியாத விஷயத்தைக் கட்டுரையில் அறியக்கூடியதாக இருந்தது.

என் மனம் உருகியது. கண்கள் குளமாகின. உடம்பு சிலிர்த்தது.

சிந்தனை விருந்தளித்த சஞ்சிவி சஞ்சிகைக்கு என் நன்றி.

— குருமணி வெ. குகசாமிக்குருக்கள்,
'சிந்தாமணி வாசம்' அராலிதெற்கு,
வட்டுக்கோட்டை.

## லண்டனில் 'சஞ்சிகை'

வாரமலர் 'சஞ்சீவி சஞ்சிகை' வெளிநாட்டில் வாழும் என்போன்ற பல இளைஞர்களுக்கு உண்மையிலேயே 'சஞ்சீவி மூலிகை' என்று கூறினால் மிகையாகாது.

'சஞ்சிகை'யில் வெளியாகும் வரலாற்றுக் கதைகள்! தூங்கிவிடும் உணர்வுகளைத் தட்டி எழுப்பிவிடுகிறது.

இன்றையபணி போற்றத்தக்கது!

—கேசவன்
88, ஷேக்ஸ்பியர் கிரஎன்ட் மனோர்பார்க்,
லண்டன் E 12, 64

## இளைஞரின் இதயதாகம்

நிலையான வாழ்வே சஞ்சீவி—என்
மனதில் நிலைத்திட்ட சஞ்சிகையே சஞ்சீவி
என்று வரும் சனி என்று
ஏங்கித் தவிக்கிறேன் சஞ்சீவி
இளைஞரின் இதயதாகமே
என்றும் நீ நீடூழிவாழ்க சஞ்சீவி!

— அ. ரவீந்திரன்,
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

## சஞ்சிவி என் உயிரோ!

சஞ்சீவி என் உயிர். சஞ்சிகை வாசிக்காவிட்டால் எனக்கு நேரமே போகாது.

— ஆர். நந்தினி,
நீராவியடி, யாழ்ப்பாணம்

## அறிவை வளர்க்கும் சஞ்சீவி

சஞ்சிகையில் பெரியோர்களின் தத்துவங்களை அள்ளித் தருகிறீர்கள். தொடர்ந்து இப்பணி வளரட்டும்.

— சிவராம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## எழுதத் தூண்டியது சஞ்சீவியே!

சஞ்சீவி வந்துவிட்டதா என்று பார்த்துவிட்டுத்தான் சனிக்கிழமைகளில் மறுவேலைகளைக் கவனிக்கிறோம்.

என்னைப் பேனா எடுத்து கவிதை வடிக்கத் தூண்டியதே சஞ்சீவி சஞ்சிகைதான்!

— செல்வி. ம. சுமி,
கோண்டாவில்.

## ஒரு வரப்பிரசாதம்

உயர்தர வகுப்பில் தமிழ்மொழியை ஒரு பாடமாக எடுக்கும் என்போன்ற மாணவர்களுக்கு சஞ்சீவி சஞ்சிகை ஒரு வரப்பிரசாதம்:

சஞ்சீவி தரும் அழியாத இலக்கியப் படைப்புக்களைக் கண்டு உவகை அடைகிறோம்.

— என் ஆர். ரஞ்ஜனி,
இணுவில் கிழக்கு.

## புத்துணர்வு தரும் சஞ்சிகை

காலம் அறிந்து சேவை செய்வதில் 'சஞ்சீவி'க்கு நிகர் சஞ்சீவியே.

சஞ்சீவி சஞ்சிகை எம் உள்ளத்தில் புத்துணர்வையும் மட்டற்ற மனமகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது

—கே: ராஜகோபால்
தொல்புரம்.

## வைத்துவிடு என்மீது பாசம்

தந்திட்டேன் நான் எந்தன் உள்ளம்
உன்மனதைத் தர ஏனோ கள்ளம்?
உன்மனக் கடலில் ஏற்றிடு என் வள்ளம்
அப்போ கரைபுரளும் ஆனந்த வெள்ளம்!

மயக்குமுன் கண் மதுக் கிண்ணம்
பூவிதழ் செம்பவள வண்ணம்
என்னுள்ளெமெங்கும் உந்தனது எண்ணம்
உனைக் காத்திடுவேன் இது திண்ணம்!

உனைச் சுற்றியே எந்தன் சுரிசனம்
என் விழிதேடும் தினமுந்தன் தரிசனம்
ஊருக்குள் இதைப்பற்றி விமர்சனம்
நானுனக்காக என்பதுவே நிதர்சனம்!

கடலைவிட ஆழமெந்தன் நேசம்
கடுகளவும் இல்லையதில் வேசம்
வைத்துவிடு என்மீது பாசம்
இல்லை கண்டிடுவேன் கல்லறை வாசம்!

—மகா யசோதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க மக்களின் அறிவியல் அறிவு!

சூரியனை பூமி சுற்றி வருகிறது என விஞ்ஞானி கோப்பர்நிக்கஸ் கண்டு பிடித்து 450 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது.

ஆனால் அமெரிக்காவில் உள்ள லட்சக்கணக்கானோர் இன்னமும் 'சூரியன் தான் பூமியைச் சுற்றி வருகின்றது' என நினைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இதற்குக் காரணம் விஞ்ஞானத்தில் அவர்களுக்குப் போதிய அறிவு இல்லாதது தான்.

அமெரிக்க தேசிய அறிவியல் அமைப்பு சார்பாக அமெரிக்கர்களின் விஞ்ஞான அறிவை சோதித்துப் பார்க்க சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.

இல்லினய்ஸ் பல்கலைக் கழக பொதுக் கருத்து சோதனைத் துறை டைரக்டர் ஜோன்மில்லர் இந்தச் சோதனையை நடத்தினர்.

பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு அறிவியல் அறிவு கொஞ்சம்கூட இல்லாதது சோதனையில் தெரியவந்தது

சூரியன் பூமியைச் சுற்றுகிறதா, பூமி சூரியனைச் சுற்றுகிறதா? எனக் கேட்டபோது ஏழு சதவீதம் பேர் 'எங்களுக்குத் தெரியாது' எனக் கூறினர்.

21 சதவீதம் பேர் தவருகக் கூறினர்;

72 சதவீதத்தினர் சரியாகக் கூறினர் எனினும் அவர்களில் 45 சதவீதத்தினர் சூரியனை பூமி ஒருமுறை சுற்ற ஓர் ஆண்டு ஆகும் எனக் கூறினர்.

17 சதவீதத்தினர் ஒரு நாளில் சுற்றி வரும் எனவும் கூறினர்.

உலகின் முன்னேறிய நாடு எனக் கருதப்படும் அமெரிக்காவில் மக்களின் அறிவியல் அறிவு எந்த அளவுக்கு இருக்கிறது பார்த்தீர்களா? ✱

# புத்தகங்களை பாதுகாக்க புதுவித அமிலம்

உலகம் முழுவதும் நூல் நிலையங்கள் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாங்கிச் சேகரிக்கின்றன.

உலகின் கலாசாரப் பெருமையானது இந்த நூலகங்களில் உள்ள புத்தகங்களிலேயே புதைந்து கிடக்கின்றது என்று சொல்லலாம்.

பெரும்பாலான இந்த புத்தகங்கள் சரிவரப் பாதுகாக்கப் படாததால் அழிந்து வருவது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு விஷயமாகும்.

பல்வேறு நூல் நிலையங்களில் லட்சக்கணக்கான புத்தகங்களும் அரிய தஸ்தாவேஜுகளும்; ஏட்டுச்சுவடிகளும் காலப் போக்கிலே சிதைந்து உதிர்ந்து வருகின்றன.

இதனுல் அவற்றில் பொதிந்துள்ள செய்திகளும் நமக்குக் கிடைக்காமல் போகக்கூடும்.

காகிதத் தாள்களிலே எவ்வளவுக்கெவ்வளவு அமிலத் தன்மை அதிகமாக உள்ளதோ அவ்வளவு சீக்கிரத்தில் அத்தாள்கள் சிதைந்து பொடிப் பொடியாகி உதிர்ந்துவிடும். அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் உள்ள 'லைப்ரரி ஆப் காங்கிரஸ்' என்னும் அமெரிக்க நாடாளுமன்ற நூலகத்தில் உள்ள 1 கோடியே 40 லட்சம் புத்தகங்களில் தொட்டால் உதிர்ந்துவிடக்கூடிய அளவுக்குப் பழைமையான சிதையும் நிலையில் 30 லட்சம் புத்தகங்கள் உள்ளன.

இந்தப் புத்தகங்களைப் பாதுகாப்பதற்குப் புதிய திட்டமொன்றை அந்த நூலகம் துவக்கியுள்ளது.

புத்தகக் காகிதங்களில் உள்ள அமிலத்தன்மையை அகற்றும் ஆலை ஒன்றை அது நிறுவி வருகிறது. இந்த ஆலை 1991 ஆம் ஆண்டு வாக்கில் இயங்கத் துவங்கும்;

இந்த ஆலையானது ஆண்டு தோறும் 10 லட்சம் புத்தகங்களின் அமிலத் தன்மையை நீக்கும் திறன் கொண்டதாகும் இதன் மூலம் புத்தகங்கள் சிதைந்துவிடாமல் காக்க முடியும். ✱

# வரலாற்றை மாற்றிய ஒரே ஒரு வாக்கு

தேர்தலில் ஒவ்வொரு வாக்கும் முக்கியம்!

ஒரு வாக்கில் கதையே மாறிப்போன வரலாறு இருக்கிறது.

1875 ஆம் ஆண்டு பிரெஞ்சு சட்டசபையில் பிரான்ஸ் நாடு முடியாட்சியாக இருக்கவேண்டுமா அல்லது குடியரசாக இருக்கவேண்டுமா என்று ஒரு வாக்கெடுப்பு நடந்தது

முடியாட்சியை ஆதரித்த ஒரு பிரதிநிதி அன்று வயிற்று வலி காரணமாக சபைக்கு வந்து வாக்குப் போட முடியவில்லை.

இதனுல் கதையே மாறிப் போயிற்று. 353 பேர் குடியரசை ஆதரித்தும் 352 பேர் குடியரசை எதிர்த்தும் வாக்குப்போட்டு இருந்தார்கள். ஒரு வாக்கு வித்தியாசத்தில் பிரெஞ்சுக் குடியரசு உதயமாயிற்று.

1940 இல் மீண்டும் வாக்கெடுப்பு நடந்தது: 13 பேர் எதிர்த்தும், 11 பேர் ஆதரித்தும் வாக்களித்தனர். ஒரு வாக்கு வித்தியாசத்தில் அமுலுக்கு வந்த குடியரசு 2 வாக்கு வித்தியாசத்தில் முடிவுக்கு வந்தது. ★

# சத்தம் இன்றி ரயில் ஓட உதவும் நவீன தண்டவாளம்

ரயிலில் பயணம் செய்யும் போது தொடர்ச்சியான ஒரு சத்தம் ஏற்படுவதைக் கேட்கலாம். இந்த சத்தம் 2 தண்டவாளங்கள் இணைக்கப்பட்டிருக்கும் இடைவெளியினுல் ஏற்படுகிறது.

இந்த இடைவெளி தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப விரிவடைந்து சுருங்குவதால்தான் ரயில்கள் எந்தவித அபாயமும் இல்லாமல் ஓடுகின்றன என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

தண்டவாளங்கள் இணைப்பு இடைவெளியால் ரயிலில் ஏற்படும் அதிர்ச்சியையோ, எழுகிற சத்தத்தையோ அல்லது தண்டவாளங்களுக்கு ஏற்படும் சிறு சேதத்தையோ தடுக்க முடியாது.

இந்தப் பிரச்சினைக்கு இப்போது ஜப்பான் ரயில்வே ஒரு புதிய தொழில் நுட்ப முறையைக் கண்டுபிடித்துள்ளது. இதன்படி நீளமான ரயில் பெட்டி மற்றும் நீள ரயில்களுக்குக்கூட அதில் உண்டாகும் அதிர்ச்சியைத் தடுக்கலாம் என்று கண்டுபிடித்துள்ளனர் இதற்கு லேயிங் அண்ட் ரீபிளேசிங் ரெயில்ஸ் என்று பெயர்.

உலகிலேயே ஜப்பானில் தான் வெல்டிங் செய்யப்பட்டு நீளமாக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய ரயில் ஓடுகிறது.

இந்த ரயில் கான்சூ ஹொக்கைடோ என்னும் 2 பெரிய நகரங்களுக்கு இடையேயுள்ள 'ஷெய்கான்' கடலுக்கு அடியில் செல்லும் குகைவழிப் பாதையில் ஓடுகிறது. இந்தக் கடல் குகைவழிப் பாதையின் மொத்த நீளம் 53.85 கிலோ மீற்றர் 52.75 கிலோ மீற்றர் தூரம் பாதை கடலுக்குள்ளேயே அமைந்துள்ளது! ✱

# அன்று எழுத்தாளனின் கற்பனையில் உதித்த 'ரோபோ' இன்று நிஜமான விந்தை

எழுத்தாளர்கள் எழுதும் கதைகள் வெறும் ஆகாயக் கோட்டைகள், வீண் கற்பனைகள் என்று எண்ணுவதுண்டு. அது தவறு.

பல எழுத்தாளர்களின் கற்பனைக் கதைகளே பல புதிய கண்டுபிடிப்புக்களுக்குக் காரணங்களாக இருந்திருக்கின்றன.

ஓர் அமெரிக்க எழுத்தாளர் எழுதிய கற்பனைக்கதை நமக்குப் பெரிதும் பயனளிக்கக்கூடிய 'ரோபோ' இயந்திர மனிதனைக் கண்டுபிடிப்பதற்குக் காரணமாக விளங்கிய தென்றால் அது வியப்புத்தானே!

அந்த எழுத்தாளர் ஐஸக் அஸிமோவ்.

இவர் 1939 ஆம் ஆண்டில் தனது 19 ஆம் வயதில் முதல் 'ரோபோ' இயந்திர மனிதனின் கதையை எழுதத் தொடங்கினர்.

பின்னர் 'ரோபோ' இயந்திர மனிதனைக் கருவாகக் கொண்டே பல கதைகளை எழுதினர்.

1950இல் அவரது 'ரோபோ' கதைகளில் முதல் 9 கதைகளை எடுத்துத் தொகுத்து ஒருவர் புத்தகமாக வெளியிட்டார்.

இவற்றைப் படித்த 'ஜோசப் எங்கல் பெர்ஜர் என்ற ஆராய்ச்சியாளர் அந்தக் கதைகளில் வந்த இயந்திர மனிதன் பாத்திரத்திலேயே மிகவும் லயித்து விட்டார்.

மனிதனுக்குப் பல வகைகளில் உதவும் இந்த இயந்திர மனிதனை ஏன் உண்மையிலேயே உருவாக்கக்கூடாது என்று தீர ஆராய்ந்து, அவ்வாறு பலஆண்டுகள் முயற்சித்ததன் பலனய் 'ரோபோ' மனிதனை உருவாக்கினர்.

உலகில் முதல் தரமான 'ரோபோ'க்களைத் தயாரிக்கும் நிறுவனத்தையும் ஏற்படுத்தினர்.

'ரோபோ' தயாரிக்கக் காரணமான புகழ் பெற்ற எழுத்தாளர் என்ற பெருமை ஐசக் அஸிமோவுக்குக் கிடைத்தது. அதனுல் பெருஞ் செல்வம் ஆராய்ச்சியாளர் பெர்ஜருக்குக் கிடைத்தது. ★



செஸ் விளையாடும் 'ரோபோ' மனிதன்

# இலக்கியக் 'கனவுகள்'

கனவுகள் விடை காண முடியாத புதிர். சில சமயங்களில் பயமுறுத்துவதும்கூட. ஆனுல் கனவு காண்பது இனிமையான அனுபவம்.

'கனவு மனசாட்சியின் குரல்' என்ருர் சோக்ரடீஸ்.

உடல் அசதியினுல் ஏற்பட்ட ஒரு வீண் காட்சி என்று சொன்னவர் வால்டேர்.

உணர்வற்ற ஒரு நிலைக்கு அழைத்துச் செல்லும் ராஜ பாட்டை என்று கூறியவர் பிராய்டோ.

கனவுகள் மனிதனுக்கு மட்டுமல்ல. மிருகங்களுக்கும் ஏற்படுகிறதாகத் தெரிய வந்துள்ளது.

இராமாயணத்தில் திரிசடையின் கனவு இலங்கையின் வீழ்ச்சியை முன்கூட்டியே சித்திரித்து விடுகிறது.

கண்ணகி கண்ட கனவு மதுரையில் பின்னுல் ஏற்பட்ட நிகழ்ச்சியின் முன் அறிவிப்பு.

இப்படி உலக இலக்கியத்தில் கனவுகளுக்கும் பங்கு உண்டு.

வரலாற்றை எடுத்துக் கொண்டால், வேட்டையாடிய களைப்பில் ஸ்பிங்ஸ் தேவதை சிலையருகே படுத்து உறங்கிய நான்காம் துட்மோஸ் கண்ட கனவு அவனே பட்டத்துக்கு வருவான் என்பதுதான்.

அதன்படியே அவன் எகிப்தின் பட்டத்துக்கும் வந்தான்.

முன்பு கனவுகளில் காணப்படும் உருவங்கள் கடவுள்களின் பிரதிநிதிகள் என்று மக்கள் கருதினர்.

அது சூன்யக்காரர்களின் செயல் என்று சிலர் நினைத்தனர்.

கனவுகள் பின்னுல் ஏற்படப் போகும் நிகழ்ச்சியை அறிவிக்கும் அடையாளம்.

அதற்கும் நாம் விழித்துக் கொண்டிருக்கும் போது ஏற்படும் செயல்களுக்கும் தொடர்பு உண்டு என்பது பொதுவான கருத்து. ✱

## இரண்டு தலைக் குழந்தை

இளம் பெண்ணுக்கு 'விசித்திர' உருவத்துடன் ஒரு குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு மக்கள் 'படை' எடுத்தனர்.

கர்நாடக மாநிலம் சித்ர துர்க்கா அருகே உள்ள ஒரு [illegible] சேர்ந்தவர் ஜெயம்மா [23]. இந்தப் பெண் பிரசவத்துக்காக சித்ர துர்க்காவில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை 2 தலை; 4 கைகள், 4 கால்களுடன் உள்ளது.

குழந்தையைப் பார்த்த தாய் அதிர்ச்சி அடைந்தார். இப்படிப் பிறந்துவிட்டதே! என்று நினைத்துக் கவலையுடன் உள்ளார்.

இந்த அதிசயக் குழந்தையைப் பார்க்க, மக்கள் கூட்டமாக வந்த வண்ணம் உள்ளனர். ஆஸ்பத்திரியில் எங்கு பார்த்தாலும் தலைகளாகத்தான் தெரிந்ததாம். ★

## பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

# வி. பி. சிங் படித்த தமிழ்!

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் பலருக்கு பலவிதத்தில் உதவியது.

வனவாசம் போனவர்கள் மீண்டும் ஆட்சிப்பீடத்தில் ஏற உதவியது.

சக்களத்திச்சண்டை போட்டவர்கள் மீண்டும் ஒன்ருகச் சேர உதவியது.

ஆனுல் இந்தியாவின் பிரமர் பதவிக்கு என்று எதிர்க் கட்சிகளால் முத்திரையிடப்பட்ட ஜனதாதள் தலைவர்



வி. பி. சிங்

விஸ்வநாத் பிரதாப் சிங்கிற்கும் இத்தேர்தல் புதுவிதத்தில் உதவியிருக்கிறதாம்.

அவரே கூறுகிருர்;

நான் பல தமிழ்ச்சொற்களை கற்றுக்கொள்ள தமிழ்நாடு தேர்தல் உதவியது.

தமிழில் எழுதவும் படித்துக்கொண்டேன். இதோ எனது தமிழ்க் கையெழுத்தைப் பாருங்கள்—

இப்படி செய்தியாளர்களிடம் காட்டிய திரு. வி. பி. சிங் திடீரென்று 'பாவம் ராஜீவ்' என்று தமிழில் கூறி அனைவரையும் வியப்பிலாழ்த்தினர். ✱

## உயரமான டெலிவிஷன் கோபுரம்

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் உள்ள டெலிவிஷன் கோபுரம் 1300 அடி உயரம் உள்ளது. உலகில் உள்ள உலோகக் கோபுரங்கள் அனைத்திலும் உயரமான 250 அடி சதுரத்தளத்தின் மீது இது நிறுவப்பட்டுள்ளது

டெலிவிஷன் படங்களை அனுப்புவதற்கு உயரமான மற்றக் கட்டிடங்கள் இடையூருக இல்லாத அவ்வளவு உயரத்தில் இந்தக் கோபுரம் அமைந்திருக்கிறது. பருவ நிலைகளைப் பதிவு செய்து தகவல்களை அனுப்பவும் இந்தக் கோபுரம் பயன்படுத்தப்படுகிறது. ★

## தெரியுமா?

இங்கிலாந்தில் கர்நாடக இசை பிரபலமடைந்து வருகிறது.

அங்கு மூன்று மிகப்பெரிய இசைப் பள்ளிகள் கர்நாடக இசை கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

கர்நாடக இசைக்கான ஆசிரியர்களையும் நியமித்துள்ளன. ★

## உலக சாதனை புரிந்த ஈரான் கம்பளம்

ஈரான் நாட்டில் உள்ள 'தப்ரிஜ்' நகரில் உலக சாதனையாக ஒரு சம்பளம் நெய்யப்பட்டுள்ளது.

இந்தக் கம்பளத்தில் ஒரு சதுர அங்குல பரப்புக்கு 60 லட்சம் நெசவு முடிச்சுக்கள் இருப்பது இதன் சிறப்பு அம்சம்,

இந்தக் சம்பளத்தின் நீளம் 5அடியும், அகலம் 3 அடி 4 அங்குலமும் உள்ளது.

இதில் மொத்தம் 800 நிறங்கள் உள்ளன,

இதை நெசவு செய்து முடிக்க 2 ஆண்டுகள் ஆகி உள்ளன.

இப்போது ஈரானில் நடக்கும் 'இஸ்லாமிய புரட்சி' கண்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்கு இந்த அதிசயக் கம்பளம் வைக்கப்பட்டுள்ளது. ★

## உயரம் அதிகரிக்க பார்வை குறைகிறது

ஜப்பானியர்கள் பொதுவாகவே குள்ளமாக உள்ளனர்.

இப்போது ஜப்பானிய குழந்தைகளின் உயரம் படிப்படியாக வழக்கத்தைவிட அதிகமாக அதிகரித்துவருகிறது. அத்துடன் எடையும் கூடுகிறது.

ஆனுல் அவர்களுடைய பார்வை சக்திகுறைந்துவிடுவதாக சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. ✱

# 'மறுமலர்ச்சி' கண்டு வரும் கிரெம்ளின் மாளிகை!

உலகின் முன்னணி வல்லரசான சோவியத் யூனியனின் ஆட்சிபீடம் இயங்கும் மாளிகையின் பெயர்தான் கிரெம்ளின்.

அமெரிக்க ஜனுதிபதியின் 'வெள்ளை மாளிகை'போன்று—

நிறைவேற்று ஜனுதிபதி கோர்ப்பச்சேவின் மாளிகையாக மாறப்போகிறது கிரெம்ளின்! கிரெம்ளின் மாளிகையில் இப்போது பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

உள்ளே அமர்ந்து இருந்து ஆட்சி புரியும் அதிகார வர்க்கத்தின் கொள்கைகளில்தான் அம்மாற்றம் காணப்படுகிறது.

சர்வாதிகாரி ஸ்டாலின் காலத்தில் இரும்புத் திரை நாடாக இருந்த (Kremlin) கிரெம்ளின் அரசின் கட்டுப்பாடுகள் மற்றும் சட்டதிட்டங்கள் படிப்படியாக நொருங்கி (Crumbling) விழுகின்றன, கோர்ப்பச்சேவின் 'மறுமலர்ச்சி' கொள்கை அமுலுக்கு வந்த பின்னர்—

9 ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்கனிஸ்தானுக்குள் சோவியத் இராணுவம் நுழைந்தது தெரிந்ததே.

அப்படி நு[illegible] பெரிய பாவம் (Sin) என்று வாய் விட்டு அ[illegible]ச் சொல்லியிருக்கிருர் கோர்ப்பச்சேவ்.

படைகளை அனுப்பும்போது இருந்த கிரெம்ளின் அரசுக்கும் படைகளை விலக்குவதற்குக் காரணமாக இருக்கும் கிரெம்ளின் அரசுக்கும் என்னே வித்தியாசம்! என்று மூக்கின் மேல் விரலை வைக்கும் இத்தருணத்தில்......

எதையும் தாங்கிக் கொண்டிருக்கும் கிரெம்ளின் மாளிகை எப்படி உருவானது என்பதைப் பார்ப்போமா?

இனி வாசியுங்கள்!

9 ஆம் நூற்ருண்டில் ஸ்காண்டிநேவிய போர் வீரர்கள் படையெடுத்து வந்து ரஷ்ய ராஜ்யம் என்பதை உருவாக்கினுர்கள். அவர்கள் நாடு காடுகள் அடர்ந்தது. ஆதலால் அவர்கள் கட்டிய கட்டடங்களில் மரங்கள் நிறைய இடம் பெற்றன.

ரஷ்ய மக்கள் கிறிஸ்தவர்களான காலத்தில் பைஜாண்டில் பண்பாடு வந்துசேர்ந்தது. அதனுல் கல்லால் கட்டும் கலை உண்டாயிற்று.

13 ஆம் நூற்ருண்டில் கிழக்கேயிருந்து மங்கோலியர்கள் படையெடுத்து வந்து நாட்டைக் கைப்பற்றி 300 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். இவர்கள் [illegible]தாலான கட்டடங்கள் அழிக்கப்பட்டன.

15 ஆம் நூற்ருண்டில் தாத்தாரியர்கள் நாட்டைவிட்டு துரத்தப்பட்டனர். மாஸ்கோ மீண்டும் அரசியல் மத மையமாயிற்று.

பயங்கர ஐவன் என்னும் பேரரசன் ஆட்சிக்காலத்தில் அரண்மனை, மதம் சம்பந்தப்பட்ட கட்டடங்கள் எழுந்தன.

இவை பைஜாண்டிய மரபில் இருந்தபோதிலும் ரஷ்ய மரபும் உடையனவாக இருந்தன.

இந்தநிலைமை 18 ஆம் நூற்ருண்டில் மகாபீற்றர் என்ற மன்னன் செயின்ட் பீற்றர்ஸ்பர்க் என்ற பெயரால் தம்முடைய தலைநகரை உண்டாக்கும்வரைநீடித்திருந்தது.

பீற்றர் அரசர் தம்முடைய நாட்டை எல்லாத் துறைகளிலும் மேலை ஐரோப்பாவைப் பின்பற்றுமாறு செய்யத் தீர்மானித்தார்.

அவர் பல அயல் நாட்டு பொறியியல் நிபுணர்களையும், கட்டட சிற்பிகளையும் வரவழைத்தார்.

வந்தவர்களில் பெரும்பாலானோர் பிரான்ஸ் நாட்டையும் இத்தாலி நாட்டையும் சேர்ந்தவர்கள். அவர்கள் பண்டைய கிரேக்க மரபுகளை ரஷ்யாவில் வேரூன்றச் செய்தனர். அந்த மரபுகளே இக்கால ரஷ்யாவிலும் தொடர்கிறது.

ரஷ்யக் கட்டட சிற்பத்தின் முதற்காலத்தின் இறுதியில் மாஸ்கோவே கலை மையமாக இருந்தது.

14, 15-ஆம் நூற்ருண்டுகளில் கட்டடச் சிற்பிகள் நாங்கொராடு, பிஸ்காவ் ஆகிய நகரங்களில் ஜார் சக்கரவர்த்திகளின் அரசியல் அதிகாரம், சமய அதிகாரம் இரண்டையும் விளக்கும் நோக்கத்துடன் பிரமாண்டமான அரண்மனைகளையும், மாதாகோவில்களையும் பிரமிக்க வைக்கும் அலங்காரங்களுடன் கட்டினுர்கள்,

பல நூற்ருண்டுகளாக இந்த அந்நிய சாயலுடன் ரஷ்ய பண்பாடும் சேர்ந்து ரஷ்ய கட்டடக்கலை மீது ஆட்சி புரிந்து வந்தது.

இந்த ஆட்சியில் பல பெரிய கட்டடங்கள் எழுந்தன. அவற்றுள் ஒன்று கிரெம்ளின் அரண்மனை.

மாஸ்கோவில் உள்ள கிரெம்ளின் அரண்மனை போன்று வேறு பல நகரங்களிலும் அரண்மனைகள் உருவாகின.

கிரெம்ளின் அரண்மனை, பலமான கொத்தளங்கள் உடைய கோட்டைச் சுவர்களை உடையது. இக்கோட்டைக்குள் அரண்மனையும், அரசாங்கக் கட்டிடங்களும், முக்கியமான மாதா கோயில்களும் வீடுகளும் அமைந்தன.

மாஸ்கோவில் உள்ள கிரெம்ளின் மாளிகைக்கு 1490 - இல் அந்தோனியா சோலரியா என்ற கட்டடச் சிற்பி கட்டிய மதிற்சுவர் கட்டட சிற்பசிறப்புடையது. அச்சுவர்களில் பல மரபுகளுக்கு உரிய கோபுரங்கள் உள்ளன.

அவற்றுள் மிகவும் முக்கியமானது இத்தாலிய ரோமனெஸ்க் மரபில் அமைந்த ஸ்பஸ்காயா வாயிலாகும்.

கிரெம்ளினுக்குள்ளே மத சம்பந்தமான கட்டடங்களும் மத சார்பற்ற கட்டடங்களும் உள்ளன.

இவை ரஷ்ய சிற்பிகளும், வேறு நாட்டு சிற்பிகளும் சேர்ந்து உருவாக்கியவை. இவற்றுள் 1600 ஆம் ஆண்டில் பாரிஸ் காடுநேவ் என்பவர் கட்டிய ஐவன் வெலிக்கு என்ற கோபுரம், அதன் உயரத்துக்கும், கலை அம்சத்துக்கும் பெயர் பெற்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## தமிழ் இலக்கண வினாவிடை
## க. பொ. த. உயர்தரத்திற்குரியது

**தமிழில் மொழி முதலாகும் எழுத்துக்களைக் குறிப்பிட்டு அவை தற்கால வழக்கிற்குப் பொருத்தமா என ஆராய்க:**

தமிழில் 247 எழுத்துக்கள் காணப்படினும் அவை யாவும் மொழி முதலாவது இல்லை. பழைய இலக்கணகாரரின் கூற்றுப்படி சில குறிப்பிட்டவகை எழுத்துக்களே மொழிமுதலாகும் எனக் குறிப்பிடுகின்றனர்.

இவ்எழுத்துக்கள் முதனிலை எழுத்துக்கள் என அழைக்கப்படும். பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல என்ற கோட்பாட்டிற்கு அமைய இவ்வெழுத்துக்களில் சில பிரயோகங்கள் அருகியும் சில புதிய பிரயோகங்கள் ஏற்பட்டும் தற்காலத்தில் வழங்கிவருகின்றன;

**(அ) 12 உயிர் எழுத்துக்களும் மொழி முதலாகும்.**

உ+ம்:-

| | |
|---|---|
| அன்பு | எட்டு |
| | ஏரம்பு |
| ஆசை | ஐயம் |
| இன்பம் | ஒன்பது |
| ஈழம் | ஓடு |
| உலக்கை | ஔவல் |
| ஊசி | ஃ |

**(க்) ககரமெய் 12 உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்து மொழிமுதலாகும்.**

உ+ம்:-

| | |
|---|---|
| | கூடு |
| கமலா | கெண்டி |
| காதல் | கேதீஸ்வரி |
| | கை |
| கிணறு | கொலை |
| கீதம் | கோடு |
| குலவு | கௌரி |

**(ச்) சகரமெய் 12 உயிர் எழுத்துக்களுடனும் சேர்ந்து மொழிமுதலாகும்.**
சந்தோஷம், சாந்தி, சிந்து; சீலி; சுந்தரி, சூரியா, செல்வி, சேலை; சைனியம்; சொத்து; சோமன், சௌந்தரி.

**(த்) தகரமெய் 12 உயிர் எழுத்துக்களுடனும் சேர்ந்து மொழிமுதலாகும்.**
தம்பி, தாஸ், திருநாவுக்கரசு, தீபன், துன்பம், தூபம், தென்னை, தேவர், தையல், தொன்று, தோட்டம்; தௌவல்

**(ப்) பகரமெய் 12 உயிர் எழுத்துக்களுடனும் சேர்ந்து மொழிமுதலாகும்.**
படம், பாவம், பின்பு, பீடம், புகழ், பூஜை, பெட்டி, பேச்சு, பையன், பொட்டு, போ, பௌர்ணமி.

**(ம்) மகரமெய் 12 உயிர்எழுத்துக்களுடனும் சேர்ந்து மொழிமுதலாகும்.**
மணிவண்ணன், மாமி, மின்னல், மீசை, முட்டை, மூச்சு, மென்மை, மேடை, மைனு, மொட்டு; மோகனு. மௌனம்.

**(ந்) நகரமெய் 12 உயிர் எழுத்துக்களுடனும் சேர்ந்து மொழிமுதலாகும்.**
நவரெத்தினம், நாடு, நிலம், நீர், நுங்கு, நூல், நெல், நேர்மை, நைதல், நொண்டி, நோன், நௌவி.

**(வ்) வகரமெய் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ ஆகிய எட்டு உயிர்களோடும்சேர்ந்து மொழிமுதலாகும்.**
உ+ம்:- வசந்தி; வா, விடியும், வீடு, வெற்றி, வேந்தன், வையகம்; வௌவுதல்.

**(ய்) யகரமெய் அ ஆ, உ, ஊ, ஒ, ஔ ஆகிய ஆறு உயிரோடும் மொழிமுதலாகும்.**
உ+ம்:-யன்னல்; யாழ்ப்பாணம், யுசம், யூகர்; யௌனம்

**(ஞ்) ஞகரமெய் அ, ஆ ஆகிய இரு உயிர் எழுத்துக்களுடன் மட்டுமே மொழிமுதலாகும்.**
உ+ம்:- ஞமரி, ஞாயிறு.

இவ்வாறு மேற்கூறிய எழுத்துக்களே மொழிமுதலாகுமென முற்கால இலக்கிய அறிஞர்கள் குறிப்பிடினும் புதிய பல பிரயோகங்கள் மொழிவளர்ச்சி காரணமாக தற்காலச் மொழிநடையில் வழங்கிவருகின்றன.
லட்டு, லதா, லீலா, யீப்பு, லூஸ் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

— வேலணையூர் தாஸ்




## நாய்

திருடர் வீட்டில் நுழையாமல்
தினமும் காவல் காக்கும்
வருவோர் தம்மை இனம்கண்டு
வாலை ஆட்டி வரவேற்கும்

வேட்டை ஆட என்றே
கூட்டிச் சென்றால் போதும்
ஓட்ட மெடுக்கும் உடும்போடு
ஒழித்துப் பதுங்கும் முயல்தனையும்
மோப்பம் பிடித்தே கௌவும்
முகத்தில் களிப்பைக் காட்டும்!

தம்பி தங்கையோடு
தானும் விளையாடிடும்
எம்பிக் குதித்துப் பாயும்
எழிலாய் உறுமிக் காட்டும்!

என்றும் தனக்கு உணவிடும்
எஜமான் தன்னைப் பணிந்திடும்
நன்றி என்னும் சொல்லுக்கு
நாங்கள் கூறும் ஜீவன்!

— நெடுந்தீவு லக்ஷ்மன்

# 'போபோஸ்' சந்திரனில் 'ரோபோ' மனிதன்!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அடுத்த 4 நாட்கள் வானில் மூடுபனி அல்லது மேக கூட்டம் இருந்ததால் அவரால் ஆராய முடியவில்லை: ஆகஸ்ட் 16 ஆம் திகதி இரவு செவ்வாயின் இருதுணைக் கிரகங்களும் தெளிவாகத் தென்பட்டன.

ஆகஸ்ட் 18 ஆம் திகதி அவர் தமது கண்டுபிடிப்பை அதிகார பூர்வமாக அறிவித்தாரர்.

புதிதாக ஒருகிரகம் அல்லது அதன் துணைக்கோள் கண்டு பிடிக்கப்பட்டால் அதற்குப் பெயர் வைக்கும் உரிமை அதைக் கண்டுபிடித்தவருக்கு அளிக்கப்படுகிறது. அதன்படி செவ்வாயின் இரு துணைக் கிரகங்களுக்கும் 'தைமோஸ்' (Deimos) என்றும், 'ஃபோபோஸ்' (Phobos என்றும் ஹால் பெயர் வைத்தார்.

ஆங்கிலத்தில் செவ்வாய்க்கு 'மார்ஸ்' (Mars) என்று பெயர்.

மார்ஸ் என்பது கிரேக்க புராணத்தில் வரும் போர்க் கடவுளின் பெயராகும். அப் போர்க் கடவுளின் குழந்தைகளுடைய பெயர்களே செவ்வாயின் இருதுணைக் கிரகங்களுக்கும் வைக்கப்பட்டன.

### போபோஸ் — தைமோஸ்

கிரேக்க மொழியில் ஃபோபோஸ் என்றால் 'அச்சம்' என்று அர்த்தம்,

தைமோஸ் என்றால் 'பீதி' என்று அர்த்தம். போர்க் கடவுள்களின் குழந்தைகளுடைய பெயர் வேறு எப்படி இருக்கும்?

ஆஸோப் ஹோல் இவ் இரண்டையும் கண்டுபிடித்ததற்குச் சுமார் 100 ஆண்டுகள் கழித்து அதாவது 1971 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அமெரிக்கா அனுப்பிய மாரினர் - 9 (Mariner - 9) விண்கலம் ஃபோபோஸ் துணைக்கோளில் 10 கிலோமீட்டர் குறுக்களவு கொண்ட ஒரு பெரிய பள்ளத்தைக் கண்டுபிடித்தது. இவ்விரு துணைக்கோள்களையும் ஹோல் கண்டுபிடிக்க அவரது மனைவி அஞ்சலின் ஸ்டிக்னி (Angeline Stickney) ஊக்கமளித்தார் என்பதால் அப் பள்ளத்துக்கு அவரது பெயர் வைக்கப்பட்டது.

தைமோஸ் கிரகத்தின் இரு பள்ளங்களுக்குப் பொருத்தமாக ஸ்விஃப்ட், வால்டேர் ஆகியோரின் பெயர்கள் வைக்கப்பட்டன.

ரஷ்யா, இம்மாதம் செவ்வாய்க்கு அனுப்பி உள்ள விண்கலத்திலிருந்து தனியே பிரியும் ரோபாட் ஒன்று ஃபோபோஸ் துணைக் கோளில் இறங்கவிருக்கிறது.

### விசித்திரத் தோற்றம்

பூமியை ஒரே ஒரு துணைக் கோள் (சந்திரன்) சுற்றுகிறது. செவ்வாயை இரண்டு துணைக் கோள்கள் சுற்றுகின்றன. ஆனால், இது விஷயத்தில் செவ்வாயின் நிலை பெருமைப் படத்தக்கதாக இல்லை. ஏனெனில், இந்த இரண்டும் வடிவில் சிறியவை, அத்துடன் விசித்திர உருவ அமைப்பைக் கொண்டவை. சந்திரனுக்கு உள்ள 'பர்சனலிடி' அவற்றுக்கு இல்லை.

சந்திரன் கச்சிதமான உருண்டை வடிவில் உள்ளது.

ஆனால் ஃபோபோஸ், தைமோஸ் ஆகிய இரண்டும், வானியல் விஞ்ஞானி பாட்ரிக் மூர் (Patrick Moore) வர்ணித்துள்ளதுபோல சொள்ளை விழுந்த உருளைக்கிழங்குகள் போலத்தான் உள்ளன.

இவை கோணல்மாணலாக இருந்தாலும், வடிவில் பெரிதாக உள்ளனவா என்றால் அதுவும் இல்லை. ஃபோபோஸின் நீளம் வெறும் 28 கிலோ மீட்டர். தைமோஸின் நீளமோ 16 கிலோ மீட்டர் தான். பெரிய மலை ஒன்றின் உடைந்த துண்டுகள் போலத் தான் இவை காட்சியளிக்கின்றன.

இவற்றுடன் ஒப்பிட்டால் நமது சந்திரனின் குறுக்களவு சுமார் 3,500 கிலோ மீட்டர். வடிவில் சின்னஞ்சிறியவையான ஃபோபோஸும், தைமோஸும் நீண்டகாலம் கண்டு பிடிக்கப்படாமல் இருந்ததில் வியப்பில்லை.

இந்த இரண்டையும் செவ்வாயின் இரு 'சந்திரன்' கள் என்று வர்ணிப்பது கூடப் பொருத்தமாக இராது. ஏனெனில், செவ்வாயில், இரவு நேரத்தில் வானில் இவை நமது சந்திரன் போல பிரகாசிக்காது. பௌர்ணமி இரவில் நிலவுச் சாப்பாடு சாப்பிடுகின்ற அளவுக்கு நமது சந்திரன் நல்ல ஒளியை அளிக்கின்றது: ஆனால் எதிர்காலத்தில் செவ்வாயில் போய்த் தங்கக்கூடிய விண்வெளி வீரர்கள் இரவில் அண்ணாந்து பார்த்தால் ஃபோபோஸும், தைமோஸும் இரு பெரிய ஒளிப்புள்ளிகளாகத் தான் தெரியும். அதாவது, அவை விடிவெள்ளி எனப்படும் சுக்கிரன் கிரகம் நமக்கு எந்த அளவில் தெரிகிறதோ அதை விட ஒரு சுற்றுப் பெரிதாகத் தெரியும், அவ்வளவுதான்.

### மேற்கே உதயம்

ஃபோபோஸும், தைமோஸும் செவ்வாயைச் சுற்றிவருவதில் ஒரு வேடிக்கை அம்ச[illegible]ம் உள்ளது. நீங்களும் நானும் செவ்வாய்க் கிரகத்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். மாலையில் இருட்டுகிற நேரத்தில் வானைப் பார்த்தால் திடீரென ஃபோபோஸ் மேற்கே உதிக்கும். பிறகு மளமளவென்று வேகமாக நகர்ந்து சுமார் நாலரை மணி நேரத்தில் கிழக்கே அஸ்தமித்து விடும்.

ஆனால் தைமோஸ் கிழக்கே உதித்து மேற்கே மறையும்; இரண்டும் எதிர் எதிரான திசையில் செவ்வாயைச் சுற்றி வருகின்றன.

எதிர்காலத்தில் மனிதன் செவ்வாயில் குடியேறி அங்கு தளம் அமைத்துக் கொண்டால் அங்கிருந்து ஃபோபோஸுக்கும், தைமோஸுக்கும் அடிக்கடி சென்று வர முடியும்.

ஏனெனில், இந்த இரண்டும் செவ்வாயில் இருந்து வெகு தொலைவில் இல்லை. சொல்லப்போனால், ஃபோபோஸ் துணைக்கோள் செவ்வாயில் இருந்து சுமார் 9.350 கிலோ மீட்டர் தொலைவில் (இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு உள்ள தூரத்தை விடக் குறைவு) அமைந்தபடி செவ்வாயைச் சுற்றுகிறது.

அது ஒரு தடவை செவ்வாயைச் சுற்றிவரச் சுமார் ஏழரைமணி நேரம்தான் ஆகிறது. தைமோஸ் துணைக் கோள், செவ்வாயில் இருந்து சுமார் 23,500 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அது செவ்வாயை ஒருதடவை சுற்றி முடிக்கச் சுமார் 30 மணி நேரம் ஆகிறது

### கரிய உருவம்

இந்த இருதுணைக் கோள்களும் கரி பூசியது போல உள்ளன. சூரியமண்டலத்திலேயே இந்த இரண்டைத் தவிர வேறு எதுவும் இந்த அளவுக்குக் கன்னங்கரேல் என்று இல்லை என்று கூறப்படுகிறது.

விசித்திரக் கருங்குள்ளர்களான இந்த இரண்டும் செவ்வாய்க்கு எப்படித் துணைக் கோள்களாக வாய்த்தன என்பது பற்றி சர்ச்சை உள்ளது. செவ்வாய்க்கும், அதற்கு அப்பாலுள்ள ராட்சதக் கிரகமான வியாழனுக்கும் இடையே குட்டிக் கோள்கள் (Asteroids) எனப்படும் சிறியதும் பெரியதுமான பல நூறு உதிரிக் கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன.

ஒரு கிரகத்தைச் சுக்கு நூறாக உடைத்து வாரி இறைக்க, அவை அனைத்தும் ஆட்டுமந்தைபோல ஒன்றை ஒன்று பின்தொடர்ந்து கூட்டமாகச் சென்றால் எப்படியிருக்கும்...? அப்படித்தான் அவை சூரியனைச் சுற்றுகின்றன.

அவற்றில் இரண்டு குட்டிக் கோள்கள் ஏதோ காரணத்தால் சுற்றுப் பாதையிலிருந்து விலகிச் செவ்வாய்க்கு அருகில் வந்து செவ்வாயினால் ஈர்க்கப் பட்டு செவ்வாயைச் சுற்றி வருகின்றனவோ என்று சில விஞ்ஞானிகள் வினா எழுப்பியுள்ளனர்;

எனினும், வேறு சில விஞ்ஞானிகள் இக் கருத்தை ஆதரிக்கவில்லை. இது பற்றிய சர்ச்சைகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

இந்த இரண்டும் செவ்வாயிடம் வந்து மாட்டிக் கொண்டனவா என்ற கேள்வி ஒரு புறம் இருக்க, இவற்றிடம் குறிப்பாக, ஃபோபோஸிடம் செவ்வாய் மாட்டிக் கொண்டுள்ளதா என்ற கேள்வியும் உள்ளது.

அதாவது, ஃபோபோஸ் செவ்வாயைச் சுற்றி வருகின்ற அதே சமயத்தில் மெல்ல மெல்ல செவ்வாயை நெருங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

இது சரியாக இருக்குமானால் என்றாவது ஒரு நாள் அது செவ்வாய் மீது வந்து மோதக் கூடும். எனினும், குறைந்த பட்சம் 10 கோடி ஆண்டுகளுக்குப் பிறகுதான் அப்படி ஏதாவது நிகழலாம் என்றும் கூறப்படுகிறது. ★

(முற்றும்)

— ராஜ குருசாமி

> பூமியை ஒரேயொரு சந்திரன் சுற்றுகிறது. ஆனால் செவ்வாய்க் கிரகத்தை இரு 'சந்திரர்'கள் சுற்றுகின்றன.
>
> இவை நமது சந்திரனைப்போலன்றி விசித்திரவடிவம் கொண்டவை.
>
> அவற்றின் ஒன்றின்பெயர் 'போபோஸ்'
>
> 7 மாதங்களுக்கு முன்னர் சோவியத் விஞ்ஞானிகள் அனுப்பிய போபோஸ்-2 விண்கலம் தற்போது செவ்வாய்க் கிரகத்தை வெற்றிகரமாக வலம்வந்துகொண்டு இருக்கிறது.
>
> இந்த விண்கலத்தில் இருந்து'போபோஸ்'சந்திரனில் 'ரோபோ' மனிதனை இறக்க ஏற்பாடாகியுள்ளது.
>
> அந்த 'ரோபோ' தன்னிடமுள்ள டெலிவிஷன் கமராக்களைப் பயன்படுத்தி போபோஸ்பற்றிய தகவல்கள் அனைத்தையும் படங்களாக பூமிக்கு அனுப்பவும் ஏற்பாடாகியுள்ளது.
>
> 21ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செவ்வாய்க்கு முதலாவது மனிதனை அனுப்பிவைக்கும் திட்டத்தின் முதற் கட்ட ஆய்வு இது என்று சோவியத்யூனியன் அறிவித்துள்ளது.
>
> இந்தநிலையில் செவ்வாயின் 'இரு சந்திரர்கள்'பற்றி அறிந்துகொள்வது பொருத்தமாக இருக்கலாம் அல்லவா!
>
> (சென்றவாரம் பிரசுரமான கட்டுரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது)

# ஒற்றுமையே பலம்!

ஒரு காட்டில் காகம், எலி, ஆமை ஆகியன ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அவை ஒரு நாள் கதைத்துக் கொண்டிருந்த போது ஒரு வேடன் ஆட்டுக்குட்டி ஒன்றைத் துரத்தியபடி வந்தான். உடனே இவை மூன்றும் ஓடி ஒழித்தன.

ஆட்டுக்குட்டியோ ஒருவாறு ஓடி மறைந்தது. பின் எல்லோரும் பழையபடி கூடினர். புதிய சிநேகிதனாக ஆட்டுக்குட்டியும் சேர்ந்து கொண்டது.

ஒருநாள் இவை இருக்கும் இடத்தை நோக்கி அந்த வேடன் மறுபடியும் வந்தான்.

உடனே காகம் பறந்து போனது. ஆட்டுக்குட்டியும் ஓடிவிட்டது; எலி ஒரு புற்றுக்குள் மறைந்தது. பாவம் ஆமையார் அருகில் குளம், குட்டை ஒன்றும் இல்லை. நின்று திக்குமுக்காடியது.

வேடன் ஆமையை எட்டிப் பிடித்துத் தன் சாக்குக்குள் போட்டுக் கொண்டு போனான். நண்பனைப் பிரிந்த கவலையுடன் சிநேகிதர்கள் ஒன்று கூடினர். ஆமையை மீட்பதற்கு வழிதேடினர்.

ஆட்டுக்குட்டி ஒரு உபாயம் எடுத்தது நொண்டி ஆடு போல வேடனுக்கு முன்னால் தெத்தித், தெத்திப் போனது.

வேடன் இதுதான் பிடிப்பதற்கு ஏற்ற தருணம் என்று எண்ணி சாக்கை ஒரு கரையில் வைத்துவிட்டுத் துரத்தினான்.

ஆட்டுக்குட்டியும் காட்டுப் பாதை ஊடாக வெகுதூரம் ஓடி மறைந்தது.

இதற்கிடையில் [illegible] எலியை வாயில் [illegible] கொண்டு போய் சாக்கின் அருகில் விட்டது. எலி தனது சிறிய பற்களினால் சாக்கை அறுத்து ஆமையை மீட்டது. பின் எல்லோரும் கூடி ஒரு கல்லை அதில் போட்டு முன்பு போல வைத்து மறைந்திருந்தனர்.

களைப்பு மிகுதியால் திரும்பி வந்த வேடன் சாக்கைச் சுமந்து கொண்டு தனது குடிசைக்குப் போனான்.

ஒரு கத்தியை எடுத்து ஆமையைக் கூறு போடுவதற்கு சாக்கை அவிழ்த்தான். பாவம் வேடன்: ஒரு கல் இருப்பதைக் கண்டான். வெட்கித் தலை குனிந்தான். 'இந்த அற்ப பிராணிகள் என்னை ஏமாற்றி விட்டன' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

பழையபடி சிநேகிதர்களான ஆமை, காகம், எலி ஆட்டுக்குட்டி ஒன்றாகச் சேர்ந்தன. தமது ஒற்றுமையால் அடைந்த வெற்றியை எண்ணிப் பெருமைப்பட்டு சந்தோஷமாக வாழ்ந்தன. ★

— த. ஜெயகணேஷன்
புன்னாலைக்கட்டுவன்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஐரோப்பாவில் காட்டுக் குரங்குகள் வாழும் இடம்?
2. பூனை எத்தனை வயதில் குட்டி போடும்?
3. வாலில்லாக் குரங்குகளின் பெயர் என்ன?

## தெரியுமே!

1. ஜிப்ரோல்ரர் மலைக்குகைகள்.
2. [illegible]
3. கொரில்லா, சிம்பன்ஸி, ஒரங்-உட்டான், ஜிப்பன்.

# சில சமயங்களில் பெண்ணும் சுயநலவாதியாக மாறவேண்டுமோ?

"அலுவலகத்திலிருந்து அவர் வீட்டுக்கு வருவதே "லேட்". வீட்டில் இருக்கும் பொழுதும் கலகலப்பாக இருப்பதில்லை. வாழ்க்கையே "டல்" அடிக்கிறது. ஒரு குடும்பப் பெண்ணின் புலம்பல் இது.

'சமையல் செய்வது, சாப்பாடு பரிமாறுவது, குழந்தைகளைக் கவனிப்பது எல்லாத்தையும் நானே கவனிக்கவேண்டும். வர வர முடியவில்லை' குடும்பப் பாரத்தைச் சுமந்து சலித்துப் போன பெண்மணியின் குரல் இது.

இந்தக் குறைகளே இல்லாமல் இதே வேலைகளைச் சந்தோஷமாக எதிர் கொள்ளலாம். 'அழகுக் குறிப்பு' என்பது போல சந்தோஷமான வாழ்க்கை அமையச் சில குறிப்புகள் இதோ...!

சமையலில் கைவரிசையைக் காட்டும் மனைவியர் சாப்பிடுவதிலும் சமபங்கு கொள்ள வேண்டும். மற்றவர்களுக்குப் போக மிச்சம் மீதியைச் சாப்பிடுவது என்று தாமே தம்மைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது.

அதேபோலத் தங்கள் உடல் நலத்திலும் அக்கறை செலுத்த வேண்டும். தனக்தானே கவனம் குறைந்தால் தான் மற்றவர்களும் தன்னைக் கவனிக்கவில்லை என்ற நினைப்பு எழும் வீட்டில் தன் பங்கு மிக முக்கியமானது என்று [illegible]ணினால் தாழ்வு மனப்பான்மைக்கு இடமே இல்லை மனைவிமார்கள் தங்கள் உடல் நலத்திற்கு மட்டுமல்லாமல். உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். மனைவியின் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளும் ஆர்வம் எல்லாக் கணவன்மார்களுக்கும் உண்டு. அவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் புதிராக மாறுதீர்கள்.

பிரச்சினைகளை அவ்வப் பொழுது தீர்த்துக் கொண்டால் எரிச்சலுக்கே இடம் இருக்காது. எரிச்சல் என்னும் பெரிய தொற்று வியாதியைத் தவிர்க்க இது ஒரு நல்ல வழி தானே...!

காலத்திற்கு ஏற்ப தனக்குப் பொருந்தக் கூடிய வகையில் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளலாம். இது அவர்களுக்கு மனமாறுதலைத் தருவதுடன், கணவன்மார்களுக்கும் பார்க்க மாறுதலாக இருக்கும்.

வீட்டு நிர்வாகத்தைப்பாரமாக நினைப்பதை விட்டு சவாலாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

வீட்டு நிர்வாகத்தில் கணவனுக்கு மந்திரியாகவும், கணவனைத் திருப்திபடுத்த ரம்பையாகவும் பெண்கள் திகழவேண்டும் என இலக்கியங்கள் கூறுகின்றன முயற்சி செய்து தான் பாருங்களேன்.

அமைதியான, இனிமையான வாழ்க்கை அமைய வாழ்க்கைத் துணைவருடன் எதையும் மனம் திறந்து பேசுவது அவசியமானது. முன்பு சொன்னது போல ரம்பையாக மாறித்தான் பாருங்களேன்...!

குழந்தைகளைக் கட்டுப்பாடாக வளர்க்க வேண்டியது அவசியம் ஆனால் அவர்களது உணர்ச்சிகளை, திறமைகளைக் கட்டுப்படுத்த நினைப்பது தவறு. தன் போக்கில் குழந்தைகள் வளரவேண்டும் என்று தாய்மார்கள் நினைப்பதை விட்டு, குழந்தைகள் போக்கில் விட்டுத்தான் பிடியுங்களேன் இதைக் கடைப்பிடித்தால் எரிச்சல் எழுவதற்கே இடமில்லைத்தானே...!

பெண்கள் சில சமயம் சுயநலவாதியாகவும் மாறத்தான வேண்டும். தனக்கென, தன் காரியங்களுக்கென, சில மணி நேரங்களை ஒதுக்கினால் அந்த நேரங்கள் மனதிற்கு மகிழ்ச்சியைத்தேடித்தரும். மனமகிழ்வு தானே மணவாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கக் கெட்டியான அத்திவாரம்.

வீட்டில் நான்கு சுவர்களுக்கு அப்பால் ஒரு உலகம் இருக்கிறது. கணவன் கூட வராவிட்டால் குழந்தைகளுடன், அவர்கள் துணை இல்லாவிட்டால் நீங்களே பொழுது போக்காகப் போய் வாருங்கள். கடற்கரையில் அமர்ந்தாலும், சிறிது நடந்தாலும் போதும், சோர்வடைந்துள்ள உங்கள் மனம் மறுபடி 'சார்ஜ்' ஆவதற்கு! ★

— நிர்மலா

**நங்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத அன்பு!

மாவட்ட அதிகாரியாக சீதா அந்த ஊருக்கு வருவது இது இரண்டாம் தடவை. 5 வருடங்களுக்குப் பின் இன்று தான் அங்கு வருகின்றாள். முதல் தரம் வந்ததை நினைத்தால் இப்பொழுதும் பொங்கி அழவேண்டும் போல் இருந்தது.

ராமுவும் சீதாவும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். படிக்கும்பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் மனமார விரும்பினார்கள். சீதாவின் குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தது. ராமுவின் குடும்பம் ஓரளவு செல்வந்த நிலையிலேயே இருந்தது.

ராமுவின் வீட்டில் இந்தக் காதலுக்கு சம்மதம் தெரிவித்தாலும், சீதனம் வாங்கியே திருமணம் செய்ய வேண்டும் எனக் கண்டிப்புடன் சொல்லி விட்டார்கள்.

ராமுவும், சீதாவுக்கு இடைஇடையே இதைப்பற்றிச் சொல்லியிருந்தான்.

சீதாவுக்குத் தெரியும் தனது குடும்பத்தினால் சீதனம் கொடுக்க முடியாது என. அதனால் அவள் ராமுவிடம்,

'ராமு திருமணம் முடிந்தவுடன் இருவருமாக உழைக்கலாம். நீங்கள் என்மேல் அன்பு வைத்திருக்கின்றீர்கள் எனத் தெரியும். ஆனால் உங்களால் பெற்றோரை மீறி இந்தத் திருமணத்தைச் செய்யமுடியாமலிருக்கிறது. அப்படித் தானே?

நீங்கள் என்னைவிட்டு வேறு ஒருத்தியைத் திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்வீர்களென்றால் நான் உங்களை விட்டுப் பிரிந்து செல்கிறேன். என் ராமு சந்தோஷமாக இருந்தால் அது நான் சந்தோஷமாக இருந்ததற்குச் சமமாகும்.

ஆனால் ராமு உங்கள் திருமணத்திற்கு வந்து உங்களை மணவாளக் கோலத்துடன் பார்க்க ஆசையாக உள்ளது அதற்கு மட்டும் அனுமதியுங்கள் ராமு'

இவ்வளவையும் கேட்டபின் வீட்டுநிலைமை காரணமாக ஒன்றுமே சொல்ல முடியத நிலையில் இருந்தான் ராமு. சீதா தனது வாயினால் வெளியே சொல்லிவிட்டாள். ஆனால் ராமு ஒன்றுமே சொல்ல முடியாத நிலையில் சென்றுவிட்டான்.

இருவாரங்களின் பின் சீதாவிற்கு ராமுவின் வாழ்த்து மடல் கையில் கிடைத்தது. திருமண வாழ்த்துமடலின் உள்ளே ராமச்சந்திரன், சித்திரா. தனது ராமுவின் பெயரின் அருகிலே சித்திராவின் பெயரைக் கண்டதும் என் ராமுவைக் கணவனாக அடையப் போகிறவள் எவ்வளவு பாக்கியசாலி என நினைத்தாள். சிறிது அவள் மீது பொறாமை கூட வந்தது.

திருமணத்திற்கு ராமுவின் ஊருக்கு முதல் முறையாக வருகிறாள். தூரத்தில் இருந்தபடியே திருமணத்தை பார்க்கின்றாள். ராமுவின் கண்கள் திருமணமேடையில் ஆவலுடன் யார் வரவையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

சீதாவுக்குத் தெரியும், அவர் தன்னைத்தான் எதிர்பார்க்கிறார் என. ஆனால் நான் என்னைக் காட்டிக்கொள்ளக் கூடாது அவர் என்னைக் கண்டால் வருத்தப்படுவார் என சீதா எண்ணித் தூரத்திலே கலங்கிய கண்களுடன் அவர்களை வாழ்த்திக் கொண்டிருந்தாள்.

திருமணவீட்டில் இருக்கும் பொழுதே அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. அதனால் ஒருவருக்கும் தெரியாமல் அத்திருமணவீட்டை விட்டு வெளியே வந்தாள்.

வெளியே சீதா கால் போன போக்கிலே சென்று கொண்டிருக்கும் பொழுது, சீதா......! என்று யாரோ கூப்பிட்டார்கள். அங்கு மோகன் நின்று கொண்டிருந்தான். மோகன் ராமுவின் நண்பன். இவர்களது காதலைப்பற்றி அறிந்தவன். சீதா வாங்கோ எங்கள் வீட்டில் இருந்துவிட்டுப் போகலாம். அங்கு சென்றவள், தேக்கி வைத்திருந்த அழுகையைக் கொட்டித் தீர்த்து விட்டாள்.

மோகன் எவ்வளவு சமாதானப்படுத்தியும் அவளால் முடியவில்லை. அழுது கொண்டிருந்த சீதா திடீரென ஆவேசமாகத் தன்னிடம் இருந்த பணத்தை கிழித்து நெருப்பில் போட்டு எரித்து சாம்பலாக்கினாள். இச் செய்கை மோகனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. ஏன் சீதா பணத்தை எரிக்கிறீர்கள்?

'மோகன் இந்தப் பணத்தால் என்ன பிரயோசனம்? இந்தப் பணத்தால் தானே நான் என் ராமுவைத் திருமணம் செய்ய முடியாமல் போனது. இந்தப் பணத்தை கிழிக்கலாம்; எரிக்கலாம், ஆனால் நான் அவர் மேல் வைத்திருக்கும் அன்பை ராமு இந்தப் பணத்தைப் போல் கிழிப்பாரா? எரிப்பாரா? நிச்சயமாக அது முடியாது. நான் வைத்திருக்கும் அன்பை அவரால் ஒன்றுமே செய்ய இயலாது. மோகன் அன்பைவிட பணம் அவருக்குப் பெரிதாகி விட்டது. மோகன் எனது ராமு சந்தோஷமாக இருப்பாரானால் நான் எதுவும் செய்யத் தயார். நான் தான் அவரை வற்புறுத்தித் திருமணம் செய்யச் சொன்னேன். ஆனால் அவருக்குப் பக்கத்தில் வேறு ஒருத்தியைக் கண்டதும் என்னால் தாங்க முடியவில்லை. மோகன் நான் இனி ராமுவின் முகத்திலே விழிக்கக் கூடாது. அவர் என்னைப் பார்க்க நேர்ந்தால் அவர்கள் இருவரின் வாழ்வில் வீண் பிரச்சினைகளே ஏற்படும். நான் அவர் வராத இடத்திற்குச் செல்கிறேன் மோகன்'

மோகனுக்கு என்ன சொல்லிச் சமாதானம் செய்யலாம் என்று தோன்றாமல் கலங்கிய கண்களுடன் நிற்க சீதா சென்றுவிட்டாள்.

சீதா தனக்கென்று வாழாது பிறருக்காக வாழ்ந்து 5 வருடங்களில் சிறிது சிறிதாக பதவியில் உயர்ந்து இன்று மாவட்ட அதிகாரியாக அங்கு நிற்கிறாள்.

இவையெல்லாம் நேற்றுத்தான் நடந்ததுபோல் அவள் மனக்கண் முன் வந்து நின்றன. இன்று ராமுவின் ஊருக்கு வந்துவிட்டாள். ராமு எப்படி இருப்பாரோ..? அவரை எப்படியும் சந்திக்கலாம் என்ற எண்ணமே அவளுக்கு இனிமையாக இருந்தது.

**-கே. அன்பரசி -**

வரும் வழியில் எங்காவது தென்படமாட்டரா என ஆவலுடன் பார்த்தபடி வருகின்றாள் ஆனால் எதிர்ப்படவில்லை சீதா தனது அலுவலகத்திற்குச் செல்கிறாள். அங்கு மோகன் வேலைசெய்து கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

மோகனுக்கும் சீதாவைக் கண்டதும் அதிர்ச்சியாகவே இருந்தது. புது அதிகாரி வருகிறார் எனத் தெரியும் ஆனால் அது சீதாவாக இருக்கும் என அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. சீதா எல்லோரையும் பார்த்தவாறே தனது அலுவலக அறையினுள் நுழைகிறாள்.

தனது இருக்கையில் இருந்ததும், மோகனைக் கேட்டால் தெரியும் ராமு என்ன செய்கிறார்' என்ற எண்ணத்துடன் மோகனை அழைத்து இருக்கையில் இருக்கும் படி சொல்கிறாள்.

மோகன்! ராமு சந்தோஷமாக இருக்கிறாரா? எத்தனை குழந்தைகள்? அவர் மனைவி எப்படி இருக்கிறா?'

என்றெல்லாம் அடுக்கடுக்காகக் கேள்வி கேட்டாள்! ஆனால் மோகன் ஒன்றுகூடும் பதில் பேசாது கண்களை மூடியபடி அமர்ந்திருக்கிறான். சீதா இதைப்பார்த்து சிறிது அச்சத்துடன்,

'மோகன் தயவு செய்து சொல்லுங்கள். ராமு எப்படி இருக்கிறார்?

மோகன் சீதாவைப்பார்த்தபடி, சீதா ராமு திருமணம் செய்தாலும் அவன் உன் நினைவோடேயே இருந்தான். ராமு உன்னுடன் பழகும் பொழுது எவ்வளவு சந்தோஷமாக இருந்தான். ஆனால் இப்பொழுது அவனுக்கு ஒரு சந்தோஷமும் இல்லை. நான் ராமுவை உன்னைச் சந்திக்கும்படி கூறுகின்றேன் என்றபடி எழுந்தான்.

மறுநாள் வழக்கத்திற்கு மாறாக நேரத்துடன் அலுவலகத்திற்கு வந்து விட்டாள். ராமு வரப்போகின்றார் என்ற நினைவு சீதாவை ஒரு வேலையுமே செய்யவிடவில்லை. சிறிது நேரத்தில் கதவு தட்டும் ஓசை கேட்டது. சீதாவே சென்று கதவைத் திறந்தாள.

அங்கு அவள் எதிர்பார்த்தபடியே ராமுநின்றிருந்தான்.

ராமுவின் தோற்றம் அவளால் ஜீரணிக்கமுடியவில்லை. சிரித்தபடி இருக்கும் கண்கள், இன்று ஒரு சோடி சுமையைத் தாங்கியதுபோல் இருந்தது. ஆசையுடன் ரசித்த கன்னம் உட்குழிந்து போய் இருந்தன. இறைவா...! ஏன் ராமுவிற்கு இந்த நிலை...? அவர் சந்தோஷமாக வாழ்வதற்காகத்தானே எனது வாழ்க்கையே விட்டுக் கொடுத்தேன்.

ராமுவிற்கு சீதாவைக் கண்டதும் பெரும் அதிர்ச்சி. சீதா...! நீயா? சீதா உன்னை இந்த ஜென்மத்தில் சந்திப்பேன் என்று நினைக்கவில்லை. சீதா உன்னை இந்த நிலையில் பார்த்ததே எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது.

'ராமு எவ்வளவு காலத்திற்குப் பிறகு உங்களைச் சந்திக்கிறேன். நின்று கொண்டிருக்கின்றீர்களே'

ராமுவை இருக்கையில் அமரச் செய்து பிரிந்திருந்த தனது காதலனை வைத்த கண் வாங்காது பார்த்தபடி நின்றாள்.

ராமு சீதாவை நோக்கியபடி, சீதா நீ சந்தோஷமாக இருக்கின்றாயா? உன் கணவர் என்ன செய்கிறார்? எழுப்பினான்.

ராமு எனக்கு ஆசைக்கொரு பையன், ஆசைக்கொரு பெண். என் கணவர் என் மேல் உயிரையே வைத்திருக்கிறார். அவர் எனக்கு அருகில் இல்லாவிட்டாலும் நான் அவருடனேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றேன்.

'சீதா உன்னை மனைவியாகப் பெற்ற புண்ணியவானை நான் பார்க்கலமா?

சீதாவும் ஓ தாராளமாக, என்றபடி படத்தை எடுத்துக் காட்டினாள். ராமுவிற்குப் படத்தைப் பார்த்ததும் அதிர்ச்சி.

'சீதா இதில் இருப்பது நானல்லவா?

நீங்கள் தான் என் கணவர். மனப்பூர்வமாக ஏற்ற கணவர் இந்பிள்ளைகளை அநாதை இல்லத்தில் இருந்து தத்து எடுத்திருக்கிறேன்'.

சீதா என்றால் உன் வாழ்க்கையே பாழ்பட்டுப் போய் விட்டதே சீதா இருவருமே வாழ்க்கையை வீணாக்கி விட்டோம்'

'என்ன ராமு சொல்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையை வீணாக்கி விட்டீர்களா என்ன நடந்தது செல்லுங்கள்'.

'சீதா! எனக்கு மனைவியாக வந்த சித்திரா பணத்திமிர் கொண்டவள் என்னை மதிப்பதில்லை; கண்ட ஆண்களுடன் வெட்கமின்றிக் கதைப்பாள் ஒரு நாள் என் குழந்தையையும்; என்னையும் விட்டு விட்டு யாருடனோ சென்று விட்டாள். இருவருடமாக எனது குழந்தையை நான் தான் கவனித்து வருகிறேன்'.

ராமு சொல்வதைச் சீதாவினால் நம்ப முடியவில்லை. கடவுளே நான் யார் சந்தோஷ்மாக வாழவேண்டும் என நினைத்தேனோ அவர் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்துவிட்டார் எனக் கண்ணீர் வடிக்கலானாள். என் ராமுவை இனி துன்பப்பட விடமாட்டேன் என்று நினைத்து ஒரு முடிவுக்கு வந்தவாறு 'ராமு நாளை உங்கள் குழந்தையையும் கூட்டிக் கொண்டு என் வீட்டிற்கு வாருங்கள்' என்றாள்.

'சீதா நீ என்ன சொல்லுறாய்...? ராமு முன்புதான் நான் விரும்பியது கிடைக்கவில்லை. தயவு செய்து இம்முறையும் என்னை ஏமாற்றி விடாதீர்கள்.

ராமுவின் கரங்களில் முகம் புதைத்து அழுதாள் சீதா. ★

## குட்டிக்கதை

# ரசிகர்கள் புத்திசாலிகளாகி விட்டார்கள்!
## - பிரபல டைரக்டர் ஸ்ரீதர் 'சர்டிபிக்கட்'

அலைகடலில் எங்களது சிறியதோணி. கலையுலகில் எங்களது புதியபாணி—

இந்த வைர வரிகளோடு தமிழ்த்திரையுலகில் என்றும் அழியாத வரலாறு படைத்தவர் டைரக்டர் ஸ்ரீதர்.

இளம் நெஞ்சங்களைத் தனது எழுதுகோல் உதிர்க்கும் ஆழ்ந்தகதை, வலுவால் கட்டிப்பிணைத்து பல காதல் காவியங்களை கலையெழில் திரைப்படங்களாக தமிழ்ப் பட உலகில் உலவவிட்டவர் ஸ்ரீதர்.

★ அழுத்தமான கதை அமைப்போடு எத்தனையோ திரைப்படங்களை முன்பு ரசிகர்களுக்கு தந்தீர்கள். அப்படி ஆழமான திரைக்கதைகளை சமீபகாலங்களில் உருவாக்கவில்லையே! இதற்குக் காரணம் ரசிகர்களா? அல்லது நீங்களா? அல்லது தயாரிப்பாளரா?

ஸ்ரீதர்: தயாரிப்பாளர் பிரச்சினையே இதில் எழவில்லை.

பொதுவாக இன்றைய ரசிகர்களிடம் ஒரு ரசனை மாற்றம் உண்டாகி இருக்கிறது.

இந்தமாற்றம் என்னைமட்டும் பாதிக்கவில்லை.

தமிழ்த்திரையுலகில் மட்டுமல்ல அகில உலகிலுமே இதன் பாதிப்பு உள்ளது.

1950 - 60களில் ஹொலிவூட்டில் இருந்து வெளிவந்த அத்தனை படங்களிலும் ஆழ்ந்த கதைப்போக்கு இருந்தது.

அப்போது வெளியான 'I Confess' 'From here to Eternity', Roman Holiday' போன்ற அனைத்துப் படங்களும் ஆழமான கதை கருத்துக்களுடன் வெளிவந்தன.

ஆனால் அவர்களே கூட யதார்த்தம், கற்பனை இவைகளுக்கு அப்பாற்பட்ட, விஞ்ஞான ரீதியான படங்களைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

உலகெங்கும் உள்ள மனிதர்களின் வாழ்வுமுறையே மாறிவிட்டது. அவர்களின் ரசனையும் இப்போது வித்தியாசப் படுகிறது.

ஒருவேகமான, விரைவான வாழ்க்கையில் நாம் அனைவரும் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறோம்.

இப்போது பொறுமைக்கு இடமில்லை; ஆழமான கதைகளோடு ஒன்றிப்போகிற அளவுக்கு ரசிகனுக்கு நேரமும் இல்லை.

எதையும் நிதானமாக இருந்து நோக்கும் பொறுமையும் இல்லை!

அவன் ஓடிக்கொண்டிருக்கிறான். அவனுக்குப் பிரச்சினைகளும் அதிகம்.

அதேநேரத்தில் ரசிகர்களிடம் ஒரு புத்திசாலித்தனம் வளர்ந்திருக்கிறது.

காதலுக்காக உயிரையே இழக்கத் துணிந்தார்கள் லைலா-மஜ்னு என்றதும் அந்த கதாபாத்திரங்களோடு தாங்களும் ஐக்கியமாக ரசிகர்கள் கண்ணீர் வடித்தது அந்தக் காலம்.

இன்றைய ரசிகன் என்ன செய்வான் தெரியுமா?

அட, காதல் தோல்விக்காக உயிரையா இழக்கமுடியும்?

இந்தக் காதலிபோனால் இன்னொருத்தி...... என்றவகையில் வேறு பிரச்சினைகளுக்குத் திரும்பிவிடுகிறான் இன்றைய மனிதன். அவ்வளவு வேகம் அவனது வாழ்க்கையில்......!

முன்பெல்லாம் தேவதாஸ்' கதை பெரிய புத்தக வடிவில் வீட்டிலும் இருக்கும்.

இப்போது ஆழ்ந்த கதை எழுதும் பொறுமையும் படைப்பாளிகளிடம் இல்லை. அதை ஆற அமரச் சிந்தித்து ரசிக்க நேரமோ; நினைப்போ ரசிகரிடமும் இல்லை.

இப்போதெல்லாம் எத்தனையோ படங்கள்வருகின்றன. வந்த இடம் தெரியாமல் போகின்றன: பரபரப்பு எதுவும் இருப்பதில்லை.

'தேவதாஸ்' கதையை இன்னொரு மொழியில் சினிமாஸ்கோப்பில் எடுத்தார்கள். அது படுதோல்வி அடைந்தது:

!எனது' !எதிர்பாராதது' படம் இப்போது வெளியிடப்பட்டால் அதன் கதைப் போக்கை இன்றைய ரசிகர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

அப்படத்தின் கடைசிக்கட்டத்தில் முன்னாள் காதலனைப் பார்த்து காதலிசொல்கிறாள்: 'என்னை அம்மா என்று அழை' —என்று:

இதை இப்போதைய சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமா? இப்படிக்கேட்டார் ஸ்ரீதர்। ★

## 'சினி'-மினி' செய்தி

சில்வஸ்டர் ஸ்டாலோன் நடித்த 'ஓவர் தி டொப்' படம் தமிழில் தயாராகிறது! ஸ்டாலோன் நடித்த பாத்திரத்தில் ரஜினி காந்த் நடிக்கிறார்.

★ ★ ★

ஓரளவு வெற்றிப்படமான 'பேசும் படம்' அமெரிக்காவிலே இலங்கைப் பணத்தில் 15 லட்சம் ரூபாவுக்கு விலை போயிருக்கிறது.



கமலஹாசன்

கமலஹாசன் பேச மலே நடித்த இப்படம் நியூயோர்க்கில் ஆசிய சொஸைட்டியிலும், கனடாவில் நடந்த உலக திரைப்பட விழாவில் காட்டப்பட்டபோது பெரிய பாராட்டுக்களையே வாங்கியது.

★ ★ ★

இனிமேல் ஒரு தயாரிப்பாளர் எந்த ஒரு கதையம்சம் உள்ள சினிமாவையும் தயாரிக்கலாம்.

கடந்த 20 ஆண்டுகளாக தடைசெய்யப்பட்டு இருந்த திரைப்படங்களை இப்போது வெளியிடலாம்.

ஆனால் நிர்வாணக்காட்சியோ, மாநில மக்களையோ அவமதிக்கும் அம்சங்கள் அப்படங்களில் இடம்பெறக் கூடாது.

இது இந்தியாவில் இல்லை. சோவியத் யூனியனில் தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ★

## மீண்டும் மஞ்சுளா!

மீண்டும் மஞ்சுளா! இது படத்தின் பெயரல்ல.

நடிகை மஞ்சுளா மீண்டும் நடிக்க வந்திருக்கிறார்.

சாந்தி நிலையம் படத்தில் அறிமுகமான மஞ்சுளா ரிக்ஷாக்காரனில் கதாநாயகி ஆனார்.

பல படங்களில் நடித்த பின்னர் நடிகர் விஜயகுமாரை மணந்து கொண்டார்.

பின்னர் திரைமறைவில் இருந்தார். மீண்டும் நடிக்க வந்திருக்கிறார்.

காவல் பூனைகள் படத்தில் டாக்டராக நடிக்கிறார். ★

திரையில்

# கதாநாயகனாக நடிப்பது கஷ்டம் -
## நகைச்சுவை நடிகர் சந்திரன்

நகைச்சுவை நடிகர் எஸ். எஸ். சந்திரன் இன்று முன்னணியில் நிற்கிறார்.

அதற்குக் காரணம் வெறும்; கை கால்களை மட்டும் அசைத்து நகைச்சுவையைக் கொடுக்கும் பாணியை அவர் செய்வதில்லை!

வசனத்தை 'டக்' என்று பேச வேண்டிய இடத்தில் பேசி, இழுக்க வேண்டிய இடத்தில் இழுத்து நகைச்சுவை ஊட்டுவது அவரது தனிப் பாணி

சந்திரனின் நகைச்சுவையில் சந்திரபாபுவின் வேகம் (ரைமிங்) இருக்கும்!

அதே சமயம் கலைவாணரின் கருத்து இருக்கும்.

வி. கே. ராமசாமியின் நடிப்பு இருக்கும்.

இப்படிப் பல்வேறு நகைச்சுவை நடிகர்களின் கலவையை ஒன்றாகக் கலந்து 'கலகல'ப் பூட்டி வருபவர் எஸ் எஸ். சந்திரன்.

அவருடன் ஒரு பேட்டி இதோ:

? கதாநாயகன் 'சான்ஸ்' ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள்?

● இருக்கிறதை விட்டுப் பறக்கிறதைப் பிடிக்க வேண்டும் என நினைப்பது தவறு. அதைச் செய்ய நான் விரும்பவில்லை. ஏற்கனவே பலர் பறக்கிறதைப் பிடிக்கப் போய் இருந்த இடத்தையே கோட்டை விட்டு விட்டார்கள்.

கதாநாயகனாக நடிப்பது அவ்வளவு ஈசி' இல்லை. ஒரு படத்தையே தூக்கி நிறுத்தக் கூடிய சக்தி வேண்டும். அந்தப் படமும் நன்றாக ஓட வேண்டும். அப்போதுதான் கதாநாயகனுக்கு மதிப்பு.

படம் ஓடவில்லை என்றால் கதாநாயகன் பாடு அவ்வளவு தான்.

'கொமடியன்' பாடு அப்படி இல்லை. படம் ஓடினாலும் 'சான்ஸ்'; ஓடாவிட்டாலும் !சான்ஸ்'

? தி. மு. க வில் சேர்ந்து தீவிரமாக அரசியலில் ஈடுபடுகிறீர்களே! அது உங்கள் தொழிலைப் பாதிக்கவில்லையா?

● ஒரு நாளும் பாதிக்காது. கலையும் அரசியலும் எனக்கு ரயில் தண்டவாளம் மாதிரி. அதில் பயணம் செய்பவன் நான்.

? பொதுவாக நகைச்சுவை நடிகர்களுக்கு இப்போது மதிப்பு இருக்கிறதா?

● கடந்த இரண்டு; மூன்று ஆண்டுகளாகத்தான் 'காமடி'க்கு மதிப்பு வந்தது. படத்துக்கு நகைச்சுவை அவசியம் தேவை, மருந்து குடிக்கக் கொஞ்சம் சர்க்கரை கொடுக்கிற மாதிரி இருந்தால் தான் எடுபடும். திருவிளையாடல் படத்தில் சிவாஜி நாகேஷ் கட்டத்தைப் பாருங்கள். கடவுள் கூட நகைச்சுவையோடு வாதாடியதில் தானே அது ரசிக்கும்படி இருந்தது. ★

## துணுக்கு

இன்னொரு 'பொன்மனச் செல்வன்' தயாராகிவருகிறார்.

தமிழகத் திரையுலகில் அவனைத் தயாராக்கி வருவது வி. என். எஸ் பிலிம்ஸார்,

'பொன்மனச் செல்வன்' ஆக விஜயகாந்த் நடிக்கிறார், ஜோடியாக ஷோபனா நடிக்கிறார்.

இரண்டாவது கட்டப் படப்பிடிப்பு மைசூரில் இடம்பெற்றது. (எ-4)

## பொது அறிவுப்போட்டி இல. 19

1. ஒரு மண்டலம் ... ... ... ... ... ... 40 நாள் / 50 நாள்
2. எது முக்கியம் என்பார்கள்? ... ... ... ... மானம் / மரியாதை
3 விருந்தில படைக்கப்படுவது? ... ... ... ... இனிப்பு / பாயாசம்
4. புயல் என்றால் எது இருக்கும்? ... ... ... ... ... காற்று / மழை
5. கடைவது எது? ... ... .. ... ... ... ... கீரை / மோர்
6. கண்ணனின் நண்பன் இவன்? ... ... ... ... ...குசேலர் / பலராமன்
7. பூஜைக்குப் பயன்படுவது எது? ... ... ... கற்பூரம் / சாம்பிராணி
8. மழையில் நனைந்தால் வருவது? ... ... ... ... சளி / காய்ச்சல்
9. இராமபிரான் இவரின் அம்சம்? ... ... ... மகாவிஷ்ணு / சிவன்
10. துரத்துவது எது? ... ... ... ... ... நினைவுகள் / வினைகள்
11. திருமண வீட்டில் கட்டுவது எது? ... ... ... வாழை / தோரணம்
12. தண்ணீர் கிடைப்பது எங்கே? ... ... ... ... குழாய் / கிணறு

பெயர்:- ..................
விலாசம்:- ......................
...............

பொது அறிவுப்போட்டி இல: 1?
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

---------- இங்கே வெட்டுக ----------

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 15. 02. 89 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயலானைப் பேணுவீர் இறைவன் அருள் பெறுவீர்!

ஜாபிர் இப்னு சுப்யான் (ரலி) அவர்கள் அறிவிக்கிருர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினுர்கள்: 'அண்டை வீட்டார்கள் மூவகைப்படுவர். ஒருவர்: ஒரு கடமைக்குரிய அண்டை வீட்டார்; இரண்டாமவர், இரு கடமைக்குரிய அண்டை வீட்டார். மூன்ருமவர், மூன்றுகடமைக்குரிய அண்டை வீட்டார். முதல் ஒரு கடமைக்



குரியவன் அவன் அயலில் வசிப்பவனே இரண்டாமவன். இஸ்லாமியனும் அயலில் வசிப்பவனுமாவான். மூன்ருமவன் அயலில் வசிப்பவனும் இஸ்லாமியனும், சொந்தக்காரனுமாவான்!'

அண்டை வீட்டானுக்குச் செய்யவேண்டிய சில கடமைகளையும் நபிகள் (ஸல்) அவர்கள் சொல்லத்தவறவில்லை. அண்டை வீட்டானுக்குரிய கடமை என்ன? என்று உங்களுக்குத்தெரியுமா எனக் கேட்ட(ஸல்) அவர்கள் பின் வருமாறு கூறுகின்ருர்கள்.

'அவன் ஆதரவுவேண்டினுல் ஆதரவளிப்பீர், உதவி கோரினுல் உதவுவீர், கடன்கேட்டால் கொடுப்பீர்; தேவை ஏற்படின் உபகாரம் செய்வீர்! நோயுற்ருல் விசாரிப்பீர், மரணமடைந்தால் ஜனுஸா வைத் துயர்வீர்! நன்மை விளைந்தால் வாழ்த்துக் கூறுவீர், கஷ்டம் ஏற்பட்டால் அனுதாபங்காட்டுவீர். அவனின் அனுமதியின்றிக் காற்றை அகற்றுவதற்காகக் கட்டடம் கட்டாதீர். அவனைத் தொந்தரவு செய்யாதீர். நீர் ஒரு பழம் வாங்கினுல் அவருக்கும் அதனைப் பகிர்ந்தளிப்பீராக! நீர் அவ்வாறு செய்யாவிடின் இரகசியமாக வீட்டினுள் கொண்டுசெல்வீராக! அவனுடைய குழந்தைகள் ஆயாசமடையும்படி உன்னுடைய குழந்தைகளை வெளியேற விடாதிருப்பீராக!'

எனவே அண்டை வீட்டாரைப்பேணி அவர்கள் மீது கருணையுடன் நடந்து படைத்த இறைவனின் நல் அருளைப் பெறுவோமாக.

மௌலவி:
கே. பீ: நஸார்தீன்

---

தனது கரத்தால் உழைத்து உண்ணும் உணவானது அவரைச் சொர்க்கம் புக வைக்கும்.

ஒருவருடைய பாவங்கள் மிகைத்து விட்டால், அவற்றுக்குப் பரிகாரமாக்கி வைக்கக்கூடிய அளவுக்கு அவரிடம் நன்மை இல்லையானுல் அல்லாஹ் அவரை மனக்கவலை கொண்டு சோதிப்பார்!

— நபிகள்நாயகம் (ஸல்)

# வைராக்கிய நாத்திகர் மனதை மாற்றிய அருட்பாடல்

நாங்கள் நடத்திய கூட்டங்களுக்கு ஒழுங்காய் வந்த ஒருவர் 70 வயதுக்கு மேற்பட்ட ஒரு வைராக்கிய நாத்திகர். அவர் தம் சாதுரியத்தால் இளம் கிறிஸ்தவ விசுவாசிகள் பலரைக் குழப்பிப் பின் மாறச் செய்திருக்கிருர். 'தேவ ஆவியானவரால் கைவிடப்பட்ட அவரோடு உரையாடுவது வீண் முயற்சி' என்று கூறினர் மக்கள். அவர் பாவத்திலும் விசுவாசமின்மையிலும் ஆழமாய் முழுகிப் போனவர்.

நானே அவருக்காக சில தினங்கள் தொடர்ந்து விசுவாசத்தோடு ஜெபித்தேன். ஒரு நாள் காலையில் ஆவியானவரின் ஏவுதலால் ஆலயம் சென்று ஜெபித்தேன். அங்கு எவருமில்லை. திடீரென்று கதவைத் திறந்து யாரோ உள்ளே வந்தார்; திரும்பிப் பார்த்தேன்; நான் யாருக்காக ஜெபித்தேனே அவரே அங்கு வந்தார். அவர்,

'இன்று காலையில் நான் இங்கே வர எந்தத் தேவையுமில்லை; எப்படியோ வந்து விட்டேன்' என்று சொன்னுர்.

நான் அவரோடு பேசி கிறிஸ்துவைப் பற்றியும், இறைவணக்கத்தைப்பற்றியும் நம்ப வைப்பதற்கும், ஒத்துக்கொள்ளச் செய்வதற்கும் என்னுல் இயன்ற முறைகளை எல்லாம் கையாண்டபொழுதிலும் தோல்வியும் ஏமாற்றமுமே ஏற்பட்டது.

அதிக மனப்பாரத்தோடு ஆண்டவரின் பாதத்தில் விழுந்து அந்த மனிதனுக்காக வேண்டுதல் செய்தேன். அவர் ஒரு பாடலைக் காண்பிக்க நான் அதை மன உருக்கத்தோடு பாடினேன்.

இயேசு மீட்பருனே
அழைக்கிருர்
அழைக்கிருர் அழைக்கிருர்
விரும்பி வருந்தி உந்தனையே
ஆவலாய் அழைக்கிருர்.

பாடல் முழுவதையும் கண்ணீரோடே பாடி முடித்தேன் அந்த மனிதன் அதிக உணர்வடைந்தவராய் எழுந்து முழங்காற்படியிட்டார். ஆவியானவரே கிரியைசெய்து எதிர்ப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் முடிவுண்டாக்கினுர்.

அந்த மனிதன் செய்த பாவ அறிக்கை போன்ற ஒன்றை என்றுமே நான் கண்டதில்லை: அவர் பாவ அறிக்கை செய்து கிருபையை பற்றிக்கொண்டு இரத்தத்தால் கழுவப்பட்டதும் அவர் அவ்வாறு மனம் உடைந்த காரணத்தைக் கூறினுர். அவர் கூறியது:

'பலத்த விசுவாசமும் அதிக ஜெபசிந்தையுமுள்ள என் மனைவி நான் கர்த்தரை ஏற்றுக்கொள்ளும்படி ஓயாமல் கூறுவாள். நான் என் பேச்சுத் திறமையால் அவளின் வாயை அடைத்துவிடுவதால் அவள் என்னேடு பேசுவதை நிறுத்திவிட்டு இதே பாடலை ஓயாமல் பாடிக்கொண்டேயிருப்பாள். அவளுக்கு இந்தப் பாடல் அதிகமாய்ப் பிடிக்கும்.

ஆனுல் ஒரு நாளாவது அவள் இந்தப் பாடலின் எல்லாக் கவிகளையும் பாடி முடித்ததில்லை. பாதிப் பாடலைப் பாடியதும் அவளுக்கு அழுகை வருவதால் உள்ளம் உடைந்து ஜெபிக்க ஆரம்பிப்பாள் அவள் தன் மரணப்படுக்கை

யிலும் எனக்காக ஜெபித்து என்னிடம் வேண்டிக்கொண்டாள். நானே என்னுள்ளத்தைக் கடினப்படுத்தினேன். சற்று முன்பு நீங்கள் பாடும் போது அவளே பாடுவது போலிருந்தது. எனக்கு வயதாகி விட்டது. சீக்கிரமாய் நான் மரித்து என் மனைவியோடு சேர்ந்து என் மீட்பரைப் பாடுவேன்' என்ருன்.

அன்றிரவு அந்த நாத்திகரான மனிதன் தன் சாட்சியைக் கூட்டத்திலே கூறிய பொழுது பெரிய எழுப்புதல் மாரி பொழிய ஆரம்பித்தது. ஆவியானவரின் கிரியை அற்புதமானது. ★

- சாம். செல்வநாயகம் -

## கிறிஸ்தவ சிந்தனை

தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிருன்.

(1 பேதுரு 5 : 8)

# மயங்காமல் இருக்கும் வரைதான் மனிதனுக்கும் மரியாதை!

சாதாரண லட்சுமிக்குத் திருமணம் என்ருலே ஊர் எவ்வளவு அல்லோலகல்லோலப்படுகிறது? பத்திரிகைகளில் எல்லாம் அந்தச் செய்தி தானே வருகிறது?

மகாலட்சுமிக்கே சுயம்வரம் என்ருல் ஏழு உலகங்களும், தேவாதி தேவர்களும் திரளக் கூடும் இல்லையா?



கண்ணதாசன்

முப்பத்து முக்கோடி தேவர்களும் கழுத்தை நீட்டினுர்கள். ஆனுல் மகாலட்சுமி ஒரு நிபந்தனை வைத்தாள்.

'என்னை எவன் விரும்பவில்லையோ அவனைத்தான் மணப்பேன்' என்ருள். 'அவளை விரும்பாதது மாதிரி' தேவர்களால் நடிக்கக் கூட முடியவில்லை.

ஏழு உலகங்களிலும் நடந்தாள் மகாலட்சுமி. கடைசியில் பாற்கடலில் நடந்தாள். அங்கே பள்ளிகொண்டிருந்தது ஒரு கரிய திருமேனி. மகாலட்சுமியை அது லட்சியம் செய்யவேயில்லை.

'என்ன உங்களுக்குஆசையே இல்லையா?' என்று கேட்டாள் மகாலட்சுமி.

'நீ யாரம்மா?' என்று கேட்டது திருமேனி;

'நான்தான் மகாலட்சுமி!' என்ருள்.

'அப்படியென்ருல்...?' என்று அது திருப்பிக் கேட்டது. மகாலட்சுமிக்குச் சிரிப்பு வந்தது.

உன்னை அறிவது தான் என் வேலையா? 'உலகத்தில் எனக்கு வேறு வேலை இருக்கின்றது!' என்ருர் திருமால்.

அவர் கழுத்தில் மாலையைப் போட்டுக் காலடியிலேயே உட்கார்ந்துவிட்டாள் மகாலட்சுமி!

உலக ரட்சகன் எதிலும் மயங்கி விடுவதில்லை என்பதையும்; மனிதனும் அப்படி மயங்காமல் இருக்கும் வரை தான் மரியாதை என்பதையும் இந்தக் கதை எவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது!

—கண்ணதாசன்

## செவிடாகும் மீன்கள்

கடலின் மேற்பரப்பில் ஏற்படும் பயங்கரச் சத்தம் மற்றும் இரைச்சல் காரணமாக மீன்கள் மற்றும் கடல் பிராணிகள் செவிடாகின்றன. அவைகளின் பழக்க வழக்கங்களும் மாறி வருகின்றன. அமெரிக்காவில் மியாமி பல்கலைக் கழக கடல் பிராணிகள் பற்றிய நிபுணர் ஆதர் மீர்பெர்க் ஆய்வு நடத்திய பின்னர் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிருர். ★

# பேராபத்தைத் தருகின்ற குறுகியகால வெற்றிகள்

திறமை, வெற்றி இவைகளை அடையும் மார்க்கங்களைக் குறிக்கும் அடையாளச் சின்னங்களாகவே எனது கட்டுரைகள் அமைகின்றன.

குறுகிய காலத்தில் ஒன்றன் பின் ஒன்ருக வெற்றி ஈட்டிக் கொண்டிருந்தால் அது பேராபத்திற்கும் ஏமாற்றத்திற்கும் அடிகோலிவிடுகிறது. இது மனித வர்க்கத்தின் விந்தையான தன்மையாகும்.

உதாரணத்திற்கு அரசியல் வாதிகளைப்பாருங்கள். எதிர்க்கட்சியில் இருந்தபோது திறமைசாலிகளாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும், அதிகாரமுள்ளவர்களாகவும் இருந்தவர்கள் அரசாங்கத்தில் பதவி ஏற்றவுடன் எப்படித் திறமையற்றவர்களாகவும் ஒழுக்கங்கெட்டவர்களாகவும் மாறிவிடுகிருர்கள்.

அரசியல்வாதிகளிடம் இருந்து இந்தப் பாடம் படிக்கக் கூடியதாக இருக்கிறது. ஏனெனில் 'அரசின் மேல் ஏவப்படும் உக்கிரமான கதிர் வீச்சு' எல்லா அம்சங்களையும் வெளிக்காட்டி விடுகிறது. பல முறைகளில் இதற்கிணையான செயல்களை எமது வாழ்க்கையிலும் காண்பதற்குத் தவறி விடுகிறேம்.

வெற்றி என்பது போதை யூட்டும் மது போன்றது அதன் தாக்கம்; முன்னெடுத்தும் செல்லவேண்டிய ஆக்க வேலைகளை மறந்து மயக்கமுறச் செய்து விடுகிறது.

சண்டைதான் எல்லாம் மனிதன் சண்டை பிடிப்பதைப் பிறவிக் குணமாகக் கொண்ட ஓர் அபூர்வ மிருகம். எப்போதும் தனக்காகவேனும் அல்லது பிறருக்காகவேனும் சண்டை பிடிக்க ஆவல் கொண்ட குணம் படைத்தவன்.

சண்டை பிடிக்கும் விருப்பம் ஓர் இயற்கையான சுபாவம். இந்த உணர்வுடன் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரயத்தனமும் இரு மடங்கு ஆற்றல் கொண்டது. இதன் பின்னணியில் வற்ருத சக்தி இருக்கும்.

உடலாலும்; உள்ளத்தாலும் எங்களாலும் அசைவற்று இருக்கமுடியாது. நாம் முன்னேக்கிப் போகாவிடில் பின் தங்கி விடுகிறேம். இயற்கையின் பொது நிர்ணயப்படி நாம் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.


நகர்ந்து முன்னேருவிடில் வெற்றிப்பாதையில் இருந்து பின் வாங்கும் அபாயம் காத்துக் கொண்டிருக்கிறது. எமது கற்பனையில் பின் தங்கி விடுவதை இளைப்பாறுதல், மோட்சம் அல்லது நிச்சயமான முடிவு என்று கருதலாம்.

அப்படிப்பட்ட முடிவுகள் ஒன்றுமே கிடையாது. வெற்றி அடையவேண்டும் எனில் எமது சக்தி வலிமையின் போக்கை மாற்றி அமைக்க வேண்டும். தொடர்ந்து யுத்தம் செய்யாவிடில் அப்போது ஒரு மந்தமான நிலை ஏற்படும். அதைத் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்படும்.

வெற்றி கிட்டி விட்டது என்று போதை கொண்டு உணர்ச்சியில்லாமல் இருந்து விடவேண்டாம் அதிகாரப் பதவி வகித்த உயர்ந்த மனிதர்கள் பலரின் சோக நாடகம் இதுதான்.

மூலம்: The Human Machine - Secrets of Success By E R Thompson, M. A.,
தமிழில்:
கே. சி. இராமநாதன்

## சொற்சிலம்பம்



போட்டி இல. 94

சொற்சிலம்பம் இல: 94
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................
விலாசம்: ..........................................
..........................................

— இங்கே வெட்டுக —

முடிவு திகதி: 22 - 2 - 1989

**இடமிருந்து வலம்:**

1. இதிகாசங்களில் ஒன்று 5 ஆசிரியன் 6 நிர்வாணத் துறவி 9. மன்மதன் துணைவி 10. வாசனைக்கு ஒரு சொல் இல்லை 11. மூலிகைகளில் ஒன்று 13 வணிக சாதியான் 14. சிறு காப்பியம் குழம்பிவிட்டது 15. ஆழமான கிடங்கு 17. களஞ்சியம் குழம்பியுள்ளது 18. வாரிக் கொடுப்பவர் தலைகீழாக உள்ளார்.

**மேலிருந்து கீழ்:**

1. தேவர் தலைவன் 2. கௌரவம் 3. காயம் குழம்பியுள்ளது 4. கல்யாணம் 7. வீடுபேறு 8. நோயாளிக்கு உகந்த உணவு 10 அசையாமல் நிற்பவை 11. அழிவில்லாத கடவுள் குழம்பியுள்ளார் 12 அரசன் 13 பூமி ஒரு சொல்லை இழந்துள்ளது 14 புனித இடம் 15. அளவிடு 16. பாதை தலைகீழாக உள்ளது.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினுல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# சனி தோஷம் தீர்த்த கனடா மாப்பிள்ளை!

சாந்தா வீட்டு விருந்தையில் இருந்து வெளியே எட்டிப் பார்த்தாள். மழை இன்னும் விட்டபாடில்லை. அவள் மார்க்கட்டுக்குப் போகவேண்டும். உள்ளுக்குப் போய்க் குடையை எடுத்தாள். வெளியே வந்து அதை விரித்தபோது கம்பிமுறிந்து சேலையைப் பிய்த்துவிட்டது. அவளுக்குச் சலிப்பும், ஆத்திரமும் ஏற்பட்டது.

'சேய் இந்தச் சனியன் பிடிச்ச குடை தருணத்துக்கு மக்கர் செய்யும்' என்று ஆத்திரப்பட்டுச் சொன்னுள்.

'சனி பகவான் ஆட்களைத்தான் பிடிப்பார் குடையையுமா பிடிச்சுட்டார்' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தவள் சாத்திரியாரைக் கண்டதும் 'சாத்திரியார் வாருங்கோ. உங்களிட்டை வர இருந்தனுன்' என்ருள்.

'தங்கச்சி உமா விஷயம் தானே. யோசிக்காதையுங்கோ. கேட்டை நட்சத்திரம் அவள் கோட்டையை ஆள்வாள். இப்போ கேட்டைக்கு 7½ச் சனி கடைக்கூறு; நல்லவிஷயம் நடக்கும், கவலையே வேண்டாம்' என்ருர்.

'உமா இப்ப கல்யாணம் வேண்டாம் என்று ஒற்றைக் காலில் நிற்கிருள்' என்ருள் சாந்தா கவலையோடு.

'வழக்கமாக ஒன்றை அடைய வேண்டும் என்று தான் ஒற்றைக் காலில் நிற்பார்கள். இது வேறை மாதிரியிருக்கே' என்றபடி யோசனையில் ஆழ்ந்தார்:

'அவளுக்குப் பார்வை பார்த்து நூல் கட்டலாமா என்று யோசிக்கிறன்'.

'உமாவுக்கு நல்ல பார்வை விழுந்திருக்கு. வேறைபார்வை வேண்டாம். கையிலை நூல் வேண்டாம். கழுத்திலை மூன்று முடிச்சு ஏறப்போகுது. வக்கரித்த சனி கொக்கரித்து வருகுது. கவலையை விடுங்கோ' என்று எழுந்தார்.

அப்போது அங்கு வந்த சுதாகர் 'அம்மா வக்கரித்த சனி கொக்கரித்து வருகுதம்மா' என்ருன்.

'என்னடா சொல்லுருய்'

'உமா லைபரரியில் இருந்து வாருள். சாத்திரியாரைக் கண்டு கோபமாக வாருள்' என்ருன்.

உமா வந்ததும் வராததுமாக 'இந்தக் கல்யாணப் பேச்சை விடுங்கோன்ரு கேக்க மாட்டீங்க' என்று கோபமாகச் சொல்லியபடி உள்ளே போனுள்.

சுதாகர் அர்த்தமுள்ள புன்சிரிப்புடன் சொன்னுன் 'அம்மா ஒரு கல்யாணம் ஒப்பேற்ற அந்தக் காலத்திலை நூறு செருப்புத் தேயுமாம். அப்பாவுக்கு உமா விசயத்தில் ஒரு செருப்பும் தேயாது. அவள் யாரைக் கல்யாணம் பண்ணுறதென்று ஏற்கனவே தீர்மானிச்சுட்டாள்'.

அதிர்ந்து போனுள் சாந்தா. 'யாரடா அது. உனக்குத் தெரியுமா?'

'அப்பாக்குட்டியின் சுந்தரைக் காதலிக்கிருள்.'

தலையிலை ஷெல் விழுந்தது போலிருந்தது சாந்தாவிற்கு. 'டேய் நாங்கள் செம்பும் தண்ணியும் தூக்காத இடமடா. அவளை எப்படியும் மாற்ற வேண்டும்' சாந்தாவிற்குப் பேசும்போதே தேகம் நடுங்கியது.

'அப்படியா? நான் செம்பும் தண்ணியும் தூக்காமல் பண்ணுறன்' என்ருன் சுதாகர்.

சாந்தா நிம்மதிப் பெருமூச்சுடன் 'நல்லபிள்ளை உமாவின் மனதை மாத்தடா. செம்பும் தண்ணியும் தூக்காத இடத்தில் எப்படியடா சம்பந்தம் செய்யுறது' என்ருள்.

'அம்மா செம்புக்குப் பதிலா பிளாஸ்டிக் கப் அல்லது எவர்சில்வர் டம்ளர் வைக்கச் சொல்லுறன்' என்ருன் சிரித்தபடி.

- வில்வம் பசுபதி -

சாந்தாவுக்குச் சினம் பற்றிக்கொண்டு வந்தது. 'டேய் அப்பன் தொழில் தெரியுமாடா! எங்கடை ஸ்ரேற்றஸ் என்ன, அப்பாக்குட்டி என்ன. நீ சின்னப் பெடியன். புரியாது...' என்று அவள் ஆவேசமாகப் பேசும்போது 'என்ன அம்மாவும் மகனும் கலந்துரையாடல்' என்றபடி அங்கு வந்தார் அப்பா.

'சுந்தரை உமா காதலிக்கிருள் அம்மா கத்துகிருள்' என்ருன் சுதாகர்.



கனடாவிலிருந்து வந்திருக்கிருன்' என்ருர் அப்பா.

'கனடாவா' என்ருள் அம்மா ஆச்சரியத்துடன்.

'அம்மா நீ இப்ப கட்டியிருக்கிறியே சாறி. உமா தன்னுடைய பிரண்ட்ஸ் பிரசன்ட் பண்ணியதெண்டு சொல்லித் தந்தாள். உண்மையில் சுந்தர் கனடாவிலிருந்து வர்றபோது கொண்டு வந்தது. இன்னும் ஒரு மாதத்தில் போருன்' என்ருன் சுதாகர்.

சாந்தா ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கே மேலிட 'கனடாவா, ஏன்டா அப்பவே நீ சொல்லேலை. ஏங்குத்துக்கல்லாட்டமா இருக்கிறியள். அப்பாக்குட்டியண்ணேட்டை கதைச்சு சட்டுப்புட்டென்று காரியத்தை முடிக்கிற வழியைப் பாருங்கோ' என்ருள்.

சுதாகர் சிரித்தபடி 'அம்மா வேண்டாம். அங்கை செம்பும் தண்ணியும் எடுக்கேலாது' என்ருன்.

'வாயை மூடடா. எல்லாம் எனக்குத் தெரியும். சாத்திரியாரே சொல்லிப் போட்டார். 7½ச் சனி கடைக்கூறிலை நடக்குமென்று' என்ருள்.

'வக்கிரத்த சனிபகவான் அம்மாவுக்குக் கூட கொக்கரித்துப் போய்விட்டார்' என்ருன் சுதாகர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் 'கோட்டை'க் கனவு இணைப்பு மூலம் நிறைவேறுமா?

இரண்டான அ. தி. மு. கவின் இரட்டை இலைச்சின்னத்தை, நடந்துமுடிந்த சட்டசபைத் தேர்தலில் பாவிக்க முடியாதபடி தேர்தல் ஆணையாளர் முடக்கிவைத்திருந்தார்.

தேர்தலின் பின்னர் ஒன்ருகிவிட்ட அ. தி. மு. கவிற்கு மீண்டும் இரட்டை இலைச்சின்னத்தை தேர்தல் ஆணையாளர் வழங்கிவிட்டார்.

மருங்காபுரி, மதுரைகிழக்கு இடைத்தேர்தல்களில் இரட்டை இலைச் சின்னத்தின் கீழ் அ. தி. மு. க போட்டியிடுகின்றது.

> அ. தி. மு. கவின் ஜானகி, ஜெயலலிதா அணிகள் மீண்டும் இணைந்தன.
> அதுபற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

முன்னுள் அமைச்சர்கள் வீரப்பன், காளிமுத்து, பாண்டியன் கோஷ்டியினர் இணைப்புக்கு பலமான எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

இணைப்புக்கு எதிர்ப்பு ஜானகி அணிக்குள் இன்னும் இருக்கிறது.

ஜெயலலிதா அணியில் உள் எதிர்ப்புக் கிடையாது.

காரணம் ஜெயலலிதா அணி 50 லட்சம் வாக்குகளுடன் 27 தொகுதிகளையும் முடிந்த தேர்தலில் கைப்பற்றியதே.

இதைத் தோல்வி என்று கூற முடியாது என்று ஜெயலலிதா அணியினர் கூறுகின்றனர்.

ஜானகி அணியோ 197 தொகுதிகளில் போட்டியிட்டது. வென்றதோ ஒரு தொகுதியில் மட்டும்.

இதன் மத்தியில் ஜானகி அம்மாள் வனவாசம் போகப் போவதாக அறிவித்துவிட்டார்.

போகாதே! போகாதே!! அம்மா - இருவரும் சேர்ந்து எம் ஜி. ஆரின் அ. தி. மு. க. வை ஒற்றுமையாக நடத்துவோம் - என்று ஜெயலலிதா அழைப்பு விடுத்திருக்கிருர்.

நீங்கள் தலைவி; நான் பொதுச் செயலாளர்- என்று ஜெயலலிதா பதவிகளையும் பங்கிட்டுக் காட்டியிருக்கிருர்.

ஆனுல் ஜானகி அம்மாள் வாய் திறந்து அதுபற்றி பேசவில்லை

தேர்தலின் பின்னர்தான் இந்தப்புத்தி வந்துள்ளது.

தேர்தலுக்கு முன்னர் என்ருல்...

'நீங்கள் முதலமைச்சர். நான் துணை முதலமைச்சர்'- என்று அல்லவா ஜெயலலிதா கூறியிருக்கவேண்டும்.

'கோட்டை'க் கனவுகள் அப்படி ஜெயலலிதாவை அன்று கூற வைத்திருக்குமா?

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்தானே இனி 'கோட்டை'க் கனவுகளைக் காண முடியும். அதற்கிடையில் தமது நிலையைப் பலப்படுத்திக்கொள்ள ஒரேவழி 64 வயது ஜானகி அம்மாளுடன் இணைவதுதான் என்று 40 வயதான ஜெயலலிதா திட்டம் போட்டிருக்கிருர்—

இப்படி ஜானகி அணியில் உள்ள ஜெயலலிதா எதிர்ப்பாளர்கள் எண்ணுகின்றனர்.

ஜானகி அணி எம். பியும் கவிஞரும் பத்திரிகையாளரும் சினிமாப்பட டைரக்டருமான வலம்புரி ஜான் எம். ஜி. ஆர் உயிருடன் இருந்தபோது தனது 'தாய்' பத்திரிகையில் ஜெயலலிதாவை தலைக்கு மேல் தூக்கிவைத்து புகழ்ந்தவர்.

இப்போது ஜானகி - ஜெயலலிதா இணைப்பு பற்றி என்ன கூறுகிருர் என்பதை வாசியுங்கள்.

ஒரு தேர்தலில் ஏற்பட்ட தோல்வி ஒரு கட்சியை அறவே அழித்துவிட முடியுமா? சிந்திக்க வேண்டிய கேள்வி. வந்தசரிவு, ஏற்பட்ட தோல்வி அல்ல; எதிர்கொண்டு வருந்திவரவழைத்த தோல்வி இது தடந்தெரியாமல், வடுத்தெரியாமல் ஓர் இயக்கத்தை அழிக்கும் தோல்வி

எட்டு மாதங்களாக எழுத்திலும் பேச்சிலும் திராவிட இயக்கங்கள் ஒன்றுசேரவேண்டும் என்று ஒலமிட்டு வந்தேன். குறுநில மன்னர்களைப் போல இந்தக் கட்சியை நடத்துகிற சீமான்கள் சிலர் சீறினர் என்மேல் ஏறினர். நான் சொன்னதைக் கேட்டிருந்தால் இந்தக் கட்சியின் பலவீனமாவது வெளிவராதிருக்கும்.

**அரசியல் ஆதாயம்**

ஜானகி அணியும், ஜெயலலிதா அணியும் பெற்ற வாக்குகளைக் கூட்டிப்பார்த்து இரண்டும் சேர்ந்தால் அரசியல் ஆதாயம் பெற்று விடலாம் என்று இப்போது சில புதிய பட்டதாரிகள் புறப்பட்டிருக்கிருர்கள். ஏற்கனவே காங்கிரஸிற்கு முட்டுக் கொடுப்பது என்று முடி



ஜெயலலிதா

வெடுத்துவிட்ட செல்வி இந்த ஆடுகளுக்கும் விலை நிர்ணயம் செய்வதில் வேகம் காட்டி வருகிருர்.

'சட்டமேதைகள் சிலர் ஜானகி அணியை ஜெயலலிதா அணியுடன் இணைக்க முயற்சித்தார்கள். தன்மானம், மரியாதை இவற்றை எதிர்பாராதவர்கள் எவரும் ஜெயலலிதாவோடு சேர்ந்திட தடை இல்லை.

ஆனுல் ஜெயலலிதாவோடு சேருவது என்பது வேங்கையின் வயிற்றில் வெள்ளாடு சமாதானமாகி விடுவது என்பதை வருங்காலம் உணர்த்தும்.

கலைஞர் கருணாநிதி மகத்தான வெற்றி பெற்றிருக்கிருர்.

எம். ஜி. ஆர் நினைவிடத்திற்கு அவர் மலர் வளையம் வைப்பது ஒரு செய்தி அல்ல; நிகழ்ச்சி அல்ல. வரலாறு.

கலைஞரின் மனம் காலத்தால் பழுத்திருக்கிறது; அனுபவத்தால் முதிர்ந்திருக்கிறது என்பதற்கு இது ஆழமான அடையாளம்.

இப்படிக் கூறும் வலம்புரி ஜான் இனி எந்தப் பக்கம் சாய்வார் என்பதைச் சூசகமாகக் காட்டிவிட்டார்.

அ. தி. மு. க. பிளவுபட்டதில் இருந்து அடிக்கடி 'பல்டி' அடித்தவர் முன்னுள் அமைச்சர் திருநாவுக்கரசு. இறுதியில் ஜெயலலிதா அணியில் தஞ்சம் புகுந்தார்.

அறந்தாங்கி எம். எல். ஏ. ஆகிவிட்ட அவர் ஜானகி அம்மாளுக்கு ஆலோசனை கூறியிருக்கிருர்.

**உண்மையான வாரிசு**

அவர் கூறுவதை இனி வாசியுங்கள்:

அ. தி. மு. க. என்பது ஜெயலலிதாவின் தலைமையிலான அ. தி. மு. க. தான் என்பதைத் தேர்தல் முடிவு நிரூபித்துக் காட்டி விட்டது.

எம். ஜி. ஆரின் உண்மையான அரசியல் வாரிசு ஜெயலலிதா என்பதும் நிரூபிக்கப் பட்டு விட்டது.

முதலமைச்சர் கருணாநிதிக்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவராக செயல்படக்கூடிய மக்கள் செல்வாக்குடைய தலைவர் ஜெயலலிதா தான் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது

ஜானகியின் அரசியல் பிரவேசத்தை எம். ஜி. ஆரின் தொண்டர்களும், மக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை.

எனவே அங்குள்ள தலைவர்களும் தொண்டர்களும் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க வில் இணைய வேண்டும்.

ஜானகி அரசியலில் ஓய்வு எடுத்துக் கொண்டு, தன் கட்சியை அ. தி. மு. க. (ஜெ) வில் இணைத்து விடுவதுதான் எம். ஜி. ஆருக்கு அவர் செய்கிற நன்றிக் கடனுக இருக்கும்.

ஜெயலலிதாவும், காங்கிரசும் சேர்ந்து இருந்தால் அந்த அணி நிச்சயம் தேர்தலில் வெற்றி பெற்று இருக்கும் என்று சொல்வது உண்மை தான்:

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. விற்கு பெரும்பான்மை இடங்களை காங்கிரஸ் விட்டுக் கொடுத்து இருக்குமேயானுல், ஜெயலலிதா தலைமையில் அமைச்சரவை அமைந்திருக்கும்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இது தற்காலிக தோல்வி தான். அரசியலில் வெற்றி தோல்வி சகஜம்.

இவ்வாறு திருநாவுக்கரசு கூறுகிருர்.

அ. தி. மு. கவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்குடன் இணைப்பு வந்ததா?

அல்லது ஜெயலலிதாவை எப்படியும் கோட்டையில் அமர்த்துவதற்காக ஏற்பட்டதா?

இக்கேள்விகளுக்கான பதில்களில்தான் இணைப்பின் நிரந்தரம் தங்கியுள்ளது என கூறப்படுகிறது (எ-4)

## சபதம் நிறைவேறியது

கடந்த 76 ஆம் ஆண்டில் முதல்வராக இருந்தபோது திருவள்ளுவர் நினைவாக பிரமாண்டமான முறையில் வள்ளுவர் கோட்டத்தைக் கருணாநிதி கட்டினார்.

வள்ளுவர் கோட்ட திறப்பு விழாவுக்கு திகதி குறிப்பிட்ட நிலையில் கருணாநிதியின் ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டது. வள்ளுவர் கோட்ட திறப்பு விழா குறித்தபடி நடந்தது அப்போது கவர்னராகஇருந்த சாதிக் அலி தலைமையில் ஜனுதிபதி பக்ருதின் அலி அசமது வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைத்தார் கருணாநிதிக்கு அழைப்பு கூட அனுப்பவில்லை.

கருணாநிதி கட்டிய வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா அவர் இல்லாமல் நடந்ததால் முதல்வரான பிறகு தான் வள்ளுவர் கோட்டத்தில் நுழைவேன் என்று அப்போது கருணாநிதி சபதம் ஏற்று இருந்தார். பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த சபதத்தை நிறைவேற்றும் வகையில் வள்ளுவர் கோட்டத்தில் நேற்று முதல்வராக கருணாநிதி பதவி ஏற்ருர். ✱

## தமிழக அரசியலில் மீண்டும் ஒரு பலப்பரீட்சை!

தமிழ்நாடு அரசியலில் மீண்டும் ஒரு பலப் பரீட்சை நடைபெறவிருக்கிறது:

வருகிற மார்ச் 11 இல் மருங்காபுரி, மதுரை கிழக்கு ஆகிய தொகுதிகளில் இப் பலப் பரீட்சை இடம்பெறும்.

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில், நாற்கோணப் போட்டியில் தி.மு.க அமோக வெற்றியீட்டியது தெரிந்ததே.

வருகிற பலப்பரீட்சையில் முக்கோணப் போட்டி மருங்காபுரியிலும் மதுரைகிழக்கிலும் நடைபெறவுள்ளது.

மீண்டும் இணைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள அ. தி. மு. க. வின் ஜானகி-ஜெயலலிதா அணிகள் இரட்டை இலைச் சின்னத்தில் அ. தி. மு. க. என்ற பெயரில் போட்டியிடுகின்றன.

இத்தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகின்றது. மருங்காபுரியில் தி. மு. க. வேட்பாளர் புலவர் செங்குட்டுவனும்—

மதுரை கிழக்குத் தொகுதியில் தி. மு. க. தோழமைக் கட்சியான மார்க்ஸிய கம்யூனிஸ்டின் வேட்பாளர் சங்கரய்யாவும் போட்டியிடுகின்றனர்.

**மருங்காபுரி மதுரை கிழக்கு**

பிரிந்து நின்று போட்டியிட்டதனுல் நடந்துமுடிந்த சட்டசபைத் தேர்தலில் 'கோட்டை'யைப் பிடிக்க முடியாமற் போய்விட்டது என்ற கருத்துத்தான் அ. தி. மு. க. வின் இரண்டு அணிகளின் தலைவர்கள் தொடக்கம் அடிமட்ட தொண்டர்கள் வரை நிலவி வருகிறது.

இது சரியா? தவரு? என்பதை மருங்காபுரியும் மதுரை கிழக்கும் தீர்மானிக்கப் போகிறது.

சென்னையில் இருந்துகிடைக்கும் தகவல்களின்படி பார்த்தால், ஒன்றுபட்ட அ.தி.மு.க வேட்பாளர்கள் இத்தொகுதிகளில் வெற்றியீட்டும் வாய்ப்பு அவ்வளவாக இல்லை என்றே தெரிகிறது.

ஒன்றுபட்ட அ. தி. மு. க. விற்கு இந்த இடைத் தேர்தல்களில் வெற்றி வாய்ப்புக் கிடைக்காவிட்டால்......

மீண்டும் இந்திரா காங்கிரஸுடன் அ. தி. மு. க. கூட்டு அமைக்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என்பது தமிழக அரசியல் அவதானிகளின் கணிப்பு.

கணிப்புச் சரியானுல் வருகிற ஏப்ரலில் நடைபெற இருக்கும் சென்னை, மதுரை மற்றும் கோயமுத்தூர் மாநகரசபைகளுக்கான தேர்தல்களுக்கு முன்னர் இந்திரா காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டு ஏற்படுமா?

இது ஒரு கேள்வி! அ. தி. மு. க.வுடன் கூட்டு ஒன்றை மீண்டும் அமைக்க இந்திரா காங்கிரஸ் உடன்படுமா?

இது இன்னெரு கேள்வி.



முதலமைச்சரானவுடன் கலைஞர் புதுடில்லி சென்றிருந்தார் அங்கு நடந்த செய்தியாளர் மாநாடொன்றில் அவரிடம் கேள்வி ஒன்று எழுப்பப் பட்டது.

? ஆளும் இந்திரா காங்கிரஸுடன் நீங்கள் நெருங்கி வருவதாகக் கூறப்படுகிறதே? இது உண்மையா?

கலைஞர் பதில்: நாம் எங்கு இருந்தோமோ அங்குதான் இன்னும் இருக்கிறேம். (We are where we were)

தமிழக அரசியலில் அரசியல் கட்சிகளின் எதிர்காலம், நாடாளுமன்றத் தேர்தலின் போது இவை எப்படி அணி சேரும் என்பது எல்லாம் மருங்காபுரி, மதுரை கிழக்கு இடைத்தேர்தல்களின் பின்னர்தான் தெரியவரலாம் ★

# பயன்தரும் பருப்பு வகைப் பயிர்கள்

பொ. பாலகுமார்

(விவசாய அபிவிருத்தி உதவியாளர் இலங்கை வங்கி)

உணவுப் பொருள்களை நாமே பயிரிடவும் சேமிக்கவும் வேண்டியது முக்கியமாகிறது இதனுல் நீண்டகாலம் சேமித்துவைக்கப்படக் கூடிய பயிர்களை பயிரிடுதலும் அவற்றைச் சேமித்துப் பாதுகாத்தலும் விஷேடத்துவம் பெறுகின்றன. இந்தவகையில் பயிரிடக்கூடிய பயிர்வகைகளில் குரக்கன், சாமை போன்ற தானியப்பயிர்களும், பாசிப்பயறு, கௌபி போன்ற பருப்பு வகைப்பயிர்களும் உள்ளன.

யாழ் மாவட்டத்திலும் நோய் பீடைத் தாக்கங்கள் இன்று விவசாயத்துறைக்கு ஓர் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் விளங்குகின்றன.

இதனுல் தற்பொழுது நம் முன்னேர்கள் மேற்கொண்ட பண்பாட்டு முறையிலான பயிர்பாதுகாப்பு, பயிர் செய்கைமுறைகளும், விசேடமாக சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவமும் நன்கு உணரப்பட்டுள்ளது சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கையில் வெவ்வேறு தாவரவியல் குடும்பங்களைச் சேர்ந்த பயிர்வகைகள் சுழல் முறையில் பயிரிடப்படுகின்றன. இதில் பருப்புவகைகளும் இணைக்கப்படுவது அவசியமாகின்றது.

பாசிப்பயறு, கௌபி போன்றனவற்றின் பயிரியல் முக்கியத்துவம், உற்பத்தி வாய்ப்புக்கள், பயிர்ச்செய்கை முறைகள் மற்றும் சேமித்தல் என்பனவற்றை நோக்குவோம்.

**பயிரியல் முக்கியத்துவம்**

• பருப்புவகைப் பயிர்களின் வேர்ச்சிறு கணுக்களின் ஊடாக வளிமண்டலத்தில் உள்ள நைதரசனைச் சேர்த்து மண்ணில் நிலைப்படுத்தும் சிறப்பியல்பால் மண்ணிற்கு வேண்டிய நைதரசனைக் கொடுத்து மண்வளத்தைக் கூட்டுகின்றன;

✱ இப்பயிர்களின் பயிர்மீதிகள் விலங்குணவாகவும் பயன்படுத்தப்படலாம்.

✱ பயிர்மீதிகள் சிறந்த பசுந்தாட்பசளைகளாகவும் பயன்படுகின்றன.

★ இவை புரதப் பற்ருக் குறையை நிவர்த்திசெய்யவும், அவற்றிற்கு பிரதியீடாகவும் பயன்படக்கூடியன. மருத்துவ ஆராய்ச்சி நிறுவன அறிக்கைகளின்படி வளர்ந்த மனிதன் ஒரு நாளைக்கு 62 கிராம் புரதம் உட்கொள்ள வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

சிலபருப்பு வகைகளை உட்கொண்டால் விலங்குப்புரதம் எடுக்கவேண்டிய தேவையில்லை. மேலும் 100 கிராம் பாசிப்பயற்றில் 24 கிராம் புரதமும், 100 கிராம் கௌபியில் 24.1 கிராம் புரதமும் காணப்படுகின்றன.

**உற்பத்தி வாய்ப்புகள்**

இவை தமது பிரதேசங்களில் சேனைப் பயிராகவும், சாகுபடி செய்யப்படுகின்ற மேட்டுநிலங்களிலும், மாளுவாரியாக செய்கைபண்ணப்படுகின்ற வயல் நிலங்களில் பெரும்போக அறுவடையின் பின்னரும், நீர்ப்பாசனவயல்களில் நீர்ப்பாசனம் இல்லாத காலங்களில் தனிப்பயிராகவும் இவைபயிரிடப்படலாம்.

மேலும் இவற்றை மரவள்ளி, சோளம் போன்றனவற்றிற்கு இடையேயும், தென்னைச் செய்கை மேற்கொள்ளப்படும் இடங்களிற்கு இடையேயும் இடைப்பயிராகவும் வேறு சில பயிர்களுடன் கலப்புப் பயிராகவும் பயிரிடலாம்.

அத்துடன் இவை பல்வேறு பட்டமண் வகைகளிலும் உற்பத்தி செய்யப்படக்கூடியனவாக இருந்தபோதிலும், நீர் வார்ப்புள்ள இருவாட்டி மண்வகைகளில் இவை சிறப்பாகவளரும்.

**இனங்கள்**

பாசிப்பயற்றில் எம் ஐ (i), எம் ஐ (ii), எம். ஐ (iii), எம். ஐ (iv) வகை type)-51 போன்ற பல்வேறுபட்ட இனங்கள் காணப்பட்ட போதும் வகை (type) -51, எம் ஐ iv) போன்ற இனங்களே கூடுதலாகப் பயிரிடப்படுகின்றன. எம். ஐ (iv)கூடிய விளைவைத் தருவதாலும்; ஏனைய இனங்களுடன் ஒப்பிடுகையில் பங்கசு நோய்களுக்கு கூடிய எதிர்ப்புத் தன்மை உடையதாலும், வகை(type) -51 குறைந்த வயதுடைய இனமாக இருப்பதாலும் பலராலும் விரும்பிப் பயிரிடப்படுகின்றன.

யாழ் மாவட்டத்திற்கு ரீ. வி 79-6, ரீ. வி 79-2 போன்ற இனங்கள்சிறப்பாக பொருத்தமானவை எனலாம். மேலும் மரபுவழி வந்த பல உள்ளூர் இனங்களும் விவசாயிகளால் பயன்படுத்தப் படுகின்றன.

மைசூர்ப் பருப்பிற்கு பிரதியீடாக அறிமுகப்படுத்தப் பட்ட கௌபீயில் பொம்பே கௌபி, ஆலிங்டன் எம்: ஐ-35, போன்ற இனங்கள் பயிர்ச் செய்கைக்காக சிபார்சு செய்யப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட இனங்களும் பல்வேறுபட்ட வயதெல்லைகளைக் கொண்டனவாகவும் சிறிய, நடுத்தர, பெரிய என வேறுபட்ட அளவினதாகவும் விளங்குகின்றன.

**நடுகைமுறை**

பருப்புவகைப் பயிர்களான பாசிப்பயறு, கௌபி என்பன நமது பிரதேசங்களில் இரு போகங்களிலும் பயிரிடப்படக் கூடியதாக விளங்குகின்றது. பெரும்போகத்தில் பெரும்பாலும் கார்த்திகைநடுப்பகுதியிலும், சிறுபோகத்தில் சித்திரை நடுப்பகுதியிலிருந்து வைகாசிவரையுள்ள காலப் பகுதியிலும் நடுகையை மேற்கொள்ளலாம். இவற்றை நாட்டும்போது கடும் மழை வீழ்ச்சிக் காலங்களைத் தவிர்த்து நாட்டுதல் சிறந்ததாகும்.

வரிசை முறையில் நடுகையைமேற்கொள்ளும்போது பொதுவாக வரிசைக்கிடையில் 1 அடி இடைவெளி கொடுத்து நாட்டுதல்போதுமானதாகும். வரிசையில் 4 அங்குல இடைவெளி போதுமானது. சில இடங்களில் 1½ அடி அகலமான வரம்பு சால் அமைத்து அதிலே வரிசையில் ஒரு கோட்டைக் கீறி இவற்றை விதைத்து மூடிவிடவேண்டும். முளைத்தபின் 4 அங்குல இடைவெளியில் ஐதாக்கிவிடலாம். யாழ் மாவட்டத்தில் பாத்திகள் அமைத்தும் இவை விதைக்கப்படுகின்றன.

**நீர்ப்பாசனம்**

இன்றைய எரிபொருள் விலையின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக நோக்குகையில் நீர்ப்பாசனத்தின் கீழ் இவற்றைப் பயிரிடுவது இலாபகரமானது எனக் கூற முடியாது. பெரும்பாலும் சிறுபோக காலத்திலேயே நீர்ப்பாசனம் தேவைப்படுகின்றது. இக்காலத்தில் மழை வீழ்ச்சி இல்லாத தேசத்தில் மட்டும் நீர்ப்பாசனம் செய்தால் போதுமானதாகும்.

நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கை பண்ணப்படும் இடங்களில் பயிர நாட்டி 4-5 நாட்களுக்கு ஒரு முறையும், பின்னர் வளர்ந்த பின் 10 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாசனம் செய்தல் போதுமானதாகும், செய்கை பண்ணப்படும் இனங்களின் வயதெல்லையைப் பொறுத்து! தேவைப்படும் மொத்த நீர்ப்பாசனம வேறுபடலாம்.

**பசளைச் சிபார்சு**

அடிக்கட்டுப் பசளையாக 6-25-18 என். பீ. கே, கலவை 100 கி. கிராம் ஓர் ஏக்கருக்கு இடவேண்டும். இது பாசிப் பயறு, கௌபீ இரண்டிற்கும் பொருத்தமானது. மேற்கட்டுப் பசளையாக 12.5 கி. கிராம் யூரியா பூக்கும்போது இட வேண்டும்.

**களைகட்டல்**

பெரும்பாலும் கைகளாலேயே களைகட்டுதல் நடைபெறுகின்றது. இது இலாபகரமானதும் கூட, கைகளால் களைகட்டுவதாயின் நட்டு மூன்று கிழமைக்குப் பின்பு மேற்கொள்ளல் அவசியம். களை கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வளர்ந்துள்ள இடங்களில் அல்லது சிரமமான இடங்களில் இரசாயன களைகொல்லிகளைப் பாவித்துக் கட்டுப்படுத்தலாம்.

**நோய்ப் பீடைகள்**

போஞ்சி ஈ, இலையரிபுழு, காய்துளைப்பான் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மொனுகுரெட்டோபொஸ் 1 அவுன்ஸ் 5-6 கலன் நீரில் கலந்து விசிற வேண்டும்.

**அறுவடை**

பாசிப்பயற்றிலும், கௌபீயிலும் வேறுபட்ட இனங்களைப் பொறுத்து அறுவடை காலம் வேறுபடும். சிலவேளைகளில் ஓர் இடத்திலேகூட பெரும்போகத்திற்கும், சிறுபோகத்திற்கும் ஒரே இனத்தின் அறுவடைக்காலம் வேறுபடலாம். எனவே நெற்றுக்கள் முதிர்ந்ததும் அறுவடையை ஆரம்பிக்கலாம். முற்றிய நெற்றுக்களை உடனடியாக அறுவடை செய்ய வேண்டும். பொதுவாக இரண்டு தடவைகளில் இவ் அறுவடை நடைபெறும்.

அறுவடை செய்யப்பட்ட நெற்றுக்களை வெளியான இடங்களில் பரவிக் காயவைத்து, சாக்கில் போட்டு அடித்துத் தூற்றியபின் விதைகளைப் பிரித்து எடுக்கலாம், மானுவாரியாக மழையை நம்பி செய்யும்போது ஒரு ஏக்கரில் 800 - 1000 இருத்தல் விளைவாகவும், நீர்ப்பாசனத்துடன் சிறந்த பராமரிப்பின் கீழ் செய்கை பண்ணப்படின் 1200 - 1500 இருத்தலையும் விளைவாகப் பெறமுடியும்.

**சேமிப்பு**


இன்றைய நிலையில் உற்பத்தியைக் காட்டிலும் சேமிப்பே முதன்மை பெறுகின்றது. சேமித்தலின் மூலம் அடுத்து வரும் போகத்திற்கான விதைத்தேவையினைப் பூர்த்தி செய்யவும், உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடான காலங்களில் உணவாகப் பாவிக்கவும் முடிகின்றது.

இன்று பெரும்பாலான விவசாயிகளும் மரபுவழி வராதவர்களாக இருப்பதனுல் அவர்கள் சேமிப்பில் அதிக அக்கறை கொள்வதில்லை. மரபுவழி விவசாயத்தை மேற்கொண்டு வரும்குடும்பங்களிடையேஇன்றும் சேமித்து வைக்கும் பாரம்பரியம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

பாசிப்பயறு, கௌபி என்பனவற்றில் பயற்றைவண்டே சேமித்தலில் முக்கிய எதிரியாக விளங்குகின்றது. இவற்றின் தாக்கத்தினுல் விதைப் பரப்பில் துவாரங்கள் தோன்றுகின்றன,

இவற்றைக் கவனமாகச் சேமிக்க மண்பானைகள் அல்லது பனை ஓலையால் செய்யப்பட்ட கூடைகளைப் பயன்படுத்தலாம். இவற்றினுள் சிறிய படைகளாகப் பயறு அல்லது கௌபியை இட்டுப் படைகளுக்கிடையே மணல் அல்லது சாம்பல் என்பனவற்ருல் மென்படைகளாக இடவேண்டும். இவ்வாறு நிரப்பிய பின்மேலே ஏறத்தாள ஓர் அங்குலத்திற்கு மணல் அல்லது சாம்பலினுல் நிரப்பி வைக்கலாம்.

இவ்வாறு வைத்திருப்பதன் மூலம் பயறு, கௌபி என்பனவற்றை ஏறத்தாள ஒரு வருடத்திற்குமேல் பழுதடையாமல் சேமிக்க முடிகின்றது. பின்னர் தேவையான காலங்களில் அரிதட்டினுல் அரித்தெடுத்துப் பாவிக்கலாம். ✱



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தமுறையில் மங்கள வைபவங்களை
வீடியோ படம் பிடிக்க

லக்ஷி வீடியோ மூவி

80, கனகரத்தினம் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை

25 - 02 - 1989 சனிக்கிழமை

Stereo முறையில் புதிய, பழைய
சினிமாப்பாடல்கள், பக்திப்பாடல்கள்
பதிவு செய்துகொள்ள

லக்ஷி வீடியோ மூவி

80, கனகரத்தினம் வீதி, அரியாலை.
யாழ்ப்பாணம்.

# சீன - சோவியத் உச்சிப் பேச்சுக்கள்

# சர்வதேச அரங்கில் புதிய திருப்புமுனை

## கம்பூச்சியப் பிரச்சினையில் சுமுக தீர்வுக்கான வாய்ப்புகள் அதிகரிப்பு

**1972** ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் சீனாவுக்கு விஜயம் செய்தார்.

இவரது சீன விஜயம் அப்போது சர்வதேச அரங்கில் பெரும் முக்கியத்துவம் பெற்றிருந்தது:

இந்த விஜயம் 1949 ஆம் ஆண்டுக்குப்பின் மேற்குலகுடனான பாதையை சீனாவுக்குத் திறந்துவிட்டதுடன் சீனாவின் மூங்கில் திரையையும் (Bamboo Curtain) உடைத்தெறிந்தது.

### மற்றொரு நிகழ்ச்சி

நிக்ஸனின் சீன விஜயம் இடம்பெற்று இன்று 16 வருடங்கள் கழிந்துவிட்டன.

தற்போது மற்றொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி நடைபெறப்போகிறது.

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் (Mikhail Gorbachev) சீன விஜயமே அதுவாகும்.

பீகிங்கிலும், மாஸ்கோவிலும் ஏக காலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மே 15 ஆம் திகதி சோவியத் அதிபர் கோர்பச்சேவ் சீனாவுக்கு விஜயம் செய்கிறார் சீனாவில் மூன்று தினங்கள் தங்கி இருந்து சீனத் தலைவர் டெங் சியாவோ பிங்குடன் (Deng Xiao Ping) பேச்சு நடத்துவார்

30 வருடத்துக்கு முன்னர் இடம்பெறும் சோவியத்— சீன உச்சிமாநாடாக இது அமையும்.

84 வயதுடைய பிங் தற்போது ஓரளவு உடல் நிலை குன்றிய நிலையில் இருந்து வருகிறார்.

கடைசியாக அப்போதைய சோவியத் தலைவர் நிகிட்டாவ் குருசேவ் (Nikita Khrushchev) வெளிவிவகார அமைச்சராக இருந்த குரோமிக்கோவுடன் சீனாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

சீன கம்யூனிஸ்ட் புரட்சியின் 10 ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொள்வதற்காக அப்போது இவர்கள் சீனா வந்திருந்தனர்.

### கம்யூனிஸ்ட் புரட்சி

1949 ஆம் ஆண்டு மாவோஸதுங் தலைமையில் கம்யூனிஸ்ட்டுக்கள் சீனாவில் ஆட்சியைக் கைப்பற்றினர்.

அப்போது சீன ஜனாதிபதியாக இருந்த சியாங்கே ஷேக் போர்மோஸாவுக்குத் தப்பி வந்து அமெரிக்க உதவியுடன் அதில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார்

கம்யூனிஸ்ட் புரட்சிவரை சீனாவின் ஓர் அங்கமாக இருந்துவந்த போர்மோஸா தற்போது தைவான் என்று அழைக்கப்படுகிறது.

இதன் மீதான ஆதிபத்திய உரிமையை சீனா பெரும்பாலும் தற்போது கைவிட்டுவிட்டது.

சோவியத் வெளிவிவகார அமைச்சர் எட்வர்ட் ஷெவர்நாட்ஸே (Edward Shevardnadze) சமீபத்தில் சீனாவந்து சீன வெளிவிவகார அமைச்சர் சியன் சிச்சென்னை (Qian Qichen) சந்தித்துப் பேசியதை அடுத்து சீன - சோவியத் உச்சி மாநாட்டுக்கான இணக்கம் ஏற்படுத்தப்பட்டது.

இதனை வெற்றிகரமாகச் சாதித்த பின்னர் சோவியத் வெளிவிவகார அமைச்சர் பாகிஸ்தானுக்கும் சென்று ஜனாதிபதி பெனாஸிர் பூட்டோவைச் சந்தித்து ஆப்கன் விவகாரம் தொடர்பாகப் பேசினார். ஆனால் ஆப்கன் விவகாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை நீக்கும் முயற்சியில் அவரால் ஓர் அங்குலம் கூட நகர முடியவில்லை.

### 6 வருட முயற்சி

சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையிலான உச்சி மாநாட்டு முயற்சிகள் கடந்த ஆறு வருட காலங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்தச் சந்திப்புக்குத் தடையாக மூன்று விடயங்கள் இருந்து வந்தன.

- ★ ஆப்கானிஸ்தான் தலையீடு.
- ★ கம்பூச்சிய நெருக்கடி.
- ★ சோவியத் - சீனா எல்லைத் தகராறு.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புகள் வெளியேறுவதற்கான காலக்கெடு பெப்ரவரி 15 என்று அறிவிக்கப்பட்டு படை வாபஸும் துரிதமாக நடைபெற்று முடிந்துள்ளது.

கம்பூச்சியாவில் இருந்து சோவியத் ஆதரவு வியட்நாமிய படைகள் செப்டம்பரில் முற்றாக வெளியேற இணக்கம் காணப்பட்டுவிட்டது. ஆனால் அதற்கு முன் கம்பூச்சியப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

இந்த இரு பிரச்சினைகளிலும் ஏற்பட்ட திடீர் திருப்பங்களை சீனாவும் - சோவியத் யூனியனும் நெருங்கிவர உதவின

### எல்லைச் சண்டை

1969 ஆம் ஆண்டு சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையில் எல்லைச் சண்டை மூண்டது. ஆனால் கடந்த 20 வருடகாலமாக இந்த விவகாரம் இருநாடுகளின் உறவுகளைப் பாதிக்கும் அளவுக்கு பெரிய அளவில் தலைதூக்கவில்லை.

### சித்தாந்தத் தகராறு

நிகிட்டா குருசேவின் காலத்தில் 1960 முற்பகுதியில் சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையில் உருவான சித்தாந்தத் தகராறு படிப்படியாக விசாலமடைந்து இந்த எல்லையுத்தத்தில் முடிவடைந்தது.

கம்யூனிஸ்ட் உலகை இரண்டாகப் பிளந்த இந்தத் தகராறு 1976ஆம் ஆண்டு மாவோஸதுங் காலமானதுடன் முடிவுக்கு வந்துவிட்டதென்று கருதப்படுகிறது.

ஆகவே உலகின் இருபெரும் கம்யூனிஸ்ட் நாடுகளான சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையிலான தற்போதைய பிரச்சினைகள் பாரதூரமானவை அல்ல.

மே 15 ஆம் திகதி பீகிங்கில் நடைபெறப்போகும் சோவியத்-சீனத்தலைவர்கள் சந்திப்பு கம்பூச்சிய பிரச்சினை தீர்வு தொடர்பாக இருந்து வரும் முட்டுக்கட்டைகளை அகற்ற பெரிதும் உதவும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

### கம்பூச்சியப் பிரச்சினை

கம்பூச்சியாவில் தற்பொழுது ஆட்சியிலிருக்கும் ஹன்சென் (HunSen அரசாங்கம் சோவியத் ஆதரவைக்கொண்டதும் இதற்கு எதிராகப் போராடும் கமெர்ரூச் கிளர்ச்சியாளர்களுக்கு சீனா ஆதரவு அளித்து வருகிறது.

கம்பூச்சியாவின் முன்னாள் பிரதமர் இளவரசர் சிஹானூக் (Sibanouk) தலைமையில் ஹன் சென் அரசுக்கு எதிரான கிளர்ச்சி இயக்கங்கள் ஒன்று சேர்ந்துள்ளன.

இளவரசர் சிஹானூக் 1970 ஆம் ஆண்டு கம்பூச்சியாவில் (அப்போது கம்போடியா) இடம்பெற்ற புரட்சியின் போது பதவி கவிழ்க்கப்பட்டவர்:

அமெரிக்க ஆதரவாளரான லொன்நொல் என்பவர் அப்போது பதவியைப் பிடித்திருந்தார்:

1975 ஆம் ஆண்டு இந்தோசீனாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸானதும் தென்வியட்னாமின் நுாயன் வான் தியூ அரசு வீழ்ச்சி அடைந்தது.

வடவியட்னாம் தென்வியட்னாமை தன்னுடன் இணைந்து ஒரே நாடாக்கிக்கொண்டது.

அதேபோன்று கம்பூச்சியாவிலும் அமெரிக்க ஆதரவு லொன் நொல் (Lonnol) அரசு கவிழ கமெர்ரூச் கெரில்லாக்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

1978 இல் வியட்னாமிய படைகள் கம்பூச்சியாவில் ஆட்சியைக் கைப்பற்றும்வரை சுமார் 20 லட்சம் கம்பூச்சிய மக்களை கமெர்ரூச் அரசாங்கம் படுகொலை செய்தது.

'மக்கள் அரசாங்கம்' என்று கூறிக்கொண்டு அதற்கு எதிரான கருத்துக்கொண்டவர்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர்

உகண்டாவில் இடி அமினின் ஆட்சிக்காலத்திலும் இதுபோன்ற ஆயிரக்கணக்கான படுகொலைகள் இடம்பெற்றன. 1979இல் தன்ஸானியப் படைகளின் உதவியுடன் இடி அமினின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

உகண்டாப் பிரச்சினை போன்று அல்லாது ஆப்கன்— கம்பூச்சியாப் பிரச்சினைகளில் வல்லரசுகளின் தலையீடு இருந்ததே இப்பிரச்சினைகள் பல வேறு கோணங்களில் சர்வதேச நெருக்கடியைத் தோற்றுவிக்கக்காரணமாகின.

தற்போது உருவாகிவரும் சீனா - சோவியத் நட்புறவு இருநாடுகளையும் மீண்டும் 1950 இல் இருந்த நிலைக்குக் கொண்டுசெல்லா விட்டாலும் இது சர்வதேச அரங்கில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தும் என்று நம்பலாம். ★

## சாதனை படைத்த பந்து வீச்சாளர்

உலக கிரிக்கெட் வரலாற்றில் எலக்ரோனிக் கருவியின் மூலமாகக் கணிக்கப்பட்ட அதி வேக பந்து வீச்சாளராக விளங்குபவர் ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த ஜெப்சி தோம்சன் என்பவர்தான்.

இவரது பந்தின் வேகம் எவ்வளவு தெரியுமா?

ஒரு மணிக்கு 99. 7 மைல் வேகம்.

அதாவது ஒரு மணிக்கு 160. 45 கிலோ மீற்றர் வேகம்.

1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் தோம்சன் இந்த அளவு வேகத்தில் பந்து வீசினார்.

இதுவரை இந்த சாதனையை எந்தப் பந்து வீச்சாளரும் முறியடிக்கவில்லை.

கடந்த 13 ஆண்டுகளாக அவரது இந்த சாதனை நிலைபெற்று விளங்குவதாக அறிவிக்கப்படுகிறது ★

# அபாரமாக விளையாடியதற்கு கவஸ்கர் பெற்ற அதிசயப் பரிசு!

தினந்தோறும் எனக்கு 5 வகையான கடிதங்கள் வருகின்றன.

வாரந் தோறும் 40 முதல் 50 கடிதங்கள் வருகின்றன,

கிரிக்கெட் சீசன் என்று வந்துவிட்டால் வாரம் தோறும் 200 கடிதங்கள் வரும்.

5 வகையான கடிதங்கள் வருமாறு:-

1. 40 வயதாகும் வரை டெஸ்ட் போட்டிகளில் விளையாடுங்கள்
2. ஆப ஸ்டம்புக்கு வெளியே வருகிற பந்துகளை அடிப்பதை தயவுசெய்து தவிர்க்கவேண்டும்.
3. 10 ஆயிரம் ரன் எடுக்கும்வரை விளையாடினால் போதும்.
4. நாட்டின் நலன் கருதி உடனே ஓய்வு எடுங்கள்
5. ஒரு நாள் போட்டிகளில் கட்டை போடாமல் வேகமாக விளையாடுங்கள்.

> பிரபல கிரிக்கெட் வீரர் சுனில் கவஸ்கர்: அவர் தனது வாழ்வில் நடந்த சுவையான, மறக்கமுடியாத சில சம்பவங்களை இங்கு கூறுகிறார். வாசியுங்கள்.

அனைத்துக் கடிதங்களுக்கும் நானே என் கைப்பட பதில் எழுதுகிறேன்: ரசிகர்களுக்கு பதில் எழுதுவது என்றால் எனக்குக் களைக்காது.

எனக்கு மூன்று விசித்திரச் செய்திகள் வந்தன,

அவற்றில் ஒன்று 1976 ஆம் ஆண்டு ஒரு புற்று நோயாளி எழுதியது:

நான் இறப்பதற்கு இரண்டு மாதங்கள்தான் இன்னமும் உள்ளன. எனவே எனக்காக நான் சாவதற்குள் பம்பாயில் ஒரு சதம் அடியுங்கள்'' —இப்படி அந்த நோயாளி கடிதம் எழுதினார்.



கவஸ்கர்

இன்னொரு கடிதம் ஏழை ஆசிரியர் எழுதியது.

''எனது மகன் உங்களின் பரமரசிகன். உங்களையே நினைத்துக்கொண்டு. நோய் வந்தால் மருந்துகூடச் சாப்பிட மறுக்கிறான். அறிவுரை கூறி கடிதம் எழுதுங்கள்''— இப்படி அவர் எழுதினார்.

மூன்றாவது கடிதம் சென்னை கல்லூரி மாணவி ஒருத்தி எழுதியது.

''மேற்கு இந்தியத்தீவுக்கு எதிராக அபாரமாக விளையாடினீர்கள், அதற்குப் பரிசாக இதோ: 'ஒரு ஜோடி [illegible]

உண்மையிலேயே விசித்திரமான கடிதங்கள் இவை. ★

# இந்தியாவின் கிரிக்கெட் சுற்றுலா

## நாளை மேற்கிந்திய தீவுகளில் ஆரம்பம்!

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி தொடர்களில் விளையாடுவதற்காக அங்கு செல்லும் இந்திய அணியின் பயண விவரங்களை இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தப் பயணத் திட்டத்தின்படி நாளை 26 - 2- 89 இந்திய அணி பார்படோஸை அடைகிறது.

பார்படோஸில் மார்ச் 2 முதல் 5 வரை பிரசிடென்ட் அணிக்கு எதிரான போட்டி நடைபெறுகிறது

மார்ச் 7 இல் பார்படோஸில் முதலாவது ஒரு நாள் போட்டி நடைபெறுகிறது.

8 ஆம் திகதி ட்ரினிடாடில் இரண்டாவது ஒரு நாள் போட்டி நடக்கிறது.

அதே இடத்தில் மார்ச் 11 இல் 3 ஆவது ஒரு நாள் போட்டி நடக்கிறது.

மார்ச் 14 - 16 திகதிகளில் சென்ட்கிப்ஸ் நகரில் 23 வயதுக்குட்பட்ட மேற்கு இந்திய தீவுகள் அணியுடன் இந்தியா மோதுகிறது.

மார்ச் 18 இல் நான்காவது ஒரு நாள் போட்டி ஆன்டிகுவா நகரில் நடைபெறும்.

கயானாவில் மார்ச் 22 ஆம் திகதி ஐந்தாவது ஒரு நாள் போட்டி நடக்கிறது.

### முதலாவது டெஸ்ட்

முதலாவது டெஸ்ட் போட்டி மார்ச் 25 - 30 திகதிகளில் கயானாவில் நடைபெறுகிறது:

மேற்கு இந்தியத் தீவுகள் சபை அணியுடன் ஏப்ரல் 7 முதல் 12 வரை பார்படோஸில் இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெறும்.

ஏப்ரல் 15 முதல் 20 வரை ட்ரினிடாடில் மூன்றாவது டெஸ்ட் போட்டி நடக்கிறது.

ஜமேக்காவில் ஜமேக்கா அணியுடனான போட்டி ஏப்ரல் 22 - 25 திகதிகளில் நடக்கிறது.

ஏப்ரல் 28 முதல் மே 3 வரை ஜமேக்காவில் நான்காவது டெஸ்ட் போட்டி நடக்கிறது. இந்திய அணியின் கப்டனாக வெங்சாகர் செல்கிறார். ★

# டைசன் - புருனோ குத்துச்சண்டை இன்று அமெரிக்காவில் நடைபெறும்

உலகின் தற்போதைய குத்துச்சண்டை சாம்பியனான மைக் டைசன் தனது பரம விரோதியான பிராங்க் புருனோவுடன் மீண்டும் மோதுகிறார்.

இந்தப் போட்டி இன்று பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள லாஸ்வேகாஸ் ஹில்டன் ஓட்டலில் நடைபெறுகிறது.

இந்தப் போட்டி இதுவரை 5 முறை அறிவிக்கப்பட்டு தள்ளி வைக்கப்பட்டது. முதன் முதலில் கடந்த ஜூன் மாதம் இந்தப் போட்டி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. லண்டனில் உள்ள விம்பிள் ஸ்டேடியத்தில் நடைபெறுவதாக முதலில் இது அறிவிக்கப்பட்டது.

பத்திரிகையாளர்களைச் சந்திப்பதற்காகப் புருனோ லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது ஒருசில போட்டோகிராபர்கள் மட்டுமே அவரைச் சந்தித்தனர்.

விமானத்தில் வந்து இறங்கியவுடன் புருனோ கேட்ட முதல் கேள்வி 'மைக் டைசன் இங்கு வந்துள்ளாரா?' என்பது தான்.

புருனோவுக்காக வழக்கமாக அனுப்பப்படுகின்ற லிமோசின் கார்கள் கூட விமான நிலையத்திற்கு வரவில்லை. அவர் பஸ்ஸில் பயணம் செய்து தனது ஹோட்டலைச் சென்று அடைந்தார்.

டைசன்-ஸ்பிங்க்ஸ் போட்டி நடைபெற்றபோது தான் முதன்முதலில் டைசன் - புருனோ போட்டி தள்ளி வைக்கப்பட்டது. பின்னர் சில சொந்த விஷயங்கள் காரணமாக டைசன் இந்தப் போட்டியைத் தள்ளிப்போட்டார்

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற போட்டியில் 91 விநாடிகளில் ஸ்பிங்சைத் தோற்கடித்த டைசன் இதுவரை மற்ற எந்தப் போட்டியிலும் பங்கு பெறவில்லை.

அதே போல டைசனுடன் தான் மோதுவேன் என்று புருனோவும் கடந்த 1987 அக்டோபர் முதல் எந்தப் போட்டியிலும் பங்குபெற வில்லை. ★

# விளையாட்டுத் துறை

## சொற்சிலம்பம் இல. 93

**பரிசு பெறுபவர் விவரம் பின்வருமாறு:**

**முதலாவது பரிசு பெறுபவர்:**
செல்லத்துரை செல்வறஞ்சினி
ஆண்டு — 9 A
வயாவிளான் மகாவித்தியாலயம்,
வயாவிளான்.

**இரண்டாவது பரிசு பெறுபவர்:**
சுந்தரமூர்த்தி - ஸ்ரீராஜன்
வட்டு இந்துக் கல்லூரி,
சித்தங்கேணி.

**மூன்றாவது பரிசு பெறுபவர்:**
வி. செல்வநாயகம்
சிறுப்பிட்டி தெற்கு.
நீர்வேலி.

**சொற்சிலம்பம் இல: 93 சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பொங்கல் வாழ்த்து 6. சரு 7. மல்லிகை 9. வில் 10. வான்மதி 13. அழை 14. ஒளி 15. மண் 16. கலைஞன் 18. கணவன் 19. கறுவா 22. மன்னி.

**மேலிருந்து கீழ்**

1. பொருமல் 2 கதலிவாழை 3. வான் 5. தரு 6. கள் 9. விதி 11. மழலை 12. உளி 13. அண்ணன் 14. ஒன்று 15. மகன் 16. கன்னி 20. வாயு

**பொது அறிவுப் போட்டி முடிவு திகதி 1 - 3 - 89 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

**சொற்சிலம்பம் முடிவு திகதி 8 - 3 - 89 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org